விழி 08 பார்வை 84 ஜூலை 2012

# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...



www.viluthu.org

விலை: 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
www.yiluthu.org
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

ISSN 1800-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

*AHAVILI*
3, Torrington Avenue, Colombo 07
Tel.: 011 250 6272
E-mail: ahavili.viluthu@gmail.com





கல்வித்துறையில் மதிப்பீட்டுப்பணி 4

மாணவர்களின் ஆளுமை விருத்தியும் தொடர்பாடல் திறனும் 18

சிறுவர் நலன்களைப் பேணுதலும் பாதுகாத்தலும் 22

ஒதுக்கப்பட்ட மூவர் 26

முன்பள்ளிக் கல்வியின் உலகளாவிய முக்கியத்துவம் 31

அறிவாற்றலும் சமூகவியலும் 34

மனிதவள அபிவிருத்திக்குரிய அடிப்படை எண்ணக்கருக்கள் 37

இலங்கை பத்திரிகைகள்: ஓர் வரலாற்று அறிமுகம் 41


அகவிழியில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி"யின் கருத்துக்கள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800-1246

அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

மாத இதழ்

ஆசிரியர்:
V.S. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்:
சாந்தி சச்சிதானந்தம்

ஆசிரியர் குழு:
க. சண்முகலிங்கம்
திருமதி பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு:
திரு.து. ராஜேந்திரம்
முன்னாள் முதுநிலை விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி உ. நவரட்ணம்
முன்னாள் ஓய்வு நிலைப்பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி, கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் இரா.வை. கனகரட்ணம்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு.தை. தனராஜ்
முதுநிலை விரிவுரையாளர், இலங்கைத்திறந்தபல்கலைக்கழகம்

திரு.க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கைத் திறந்தபல்கலைக்கழகம்

திரு.வீ. தியாகராஜா
சிரேஷ்ட ஆலோசகர், சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

லெனின் மதிவானம்
பிரதி கல்வி வெளியீட்டு ஆணையாளர், கல்வி அமைச்சு

திரு.கே. சாம்பசிவம்
தேசிய ஆலோசகர்: கல்வி முகாமைத்துவம்

திருமதி. அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர், கொழும்பு கல்வி வலயம்

ஆசிரியரிடமிருந்து..........

## சகலருக்கும் சமகல்வி ஏற்பாடும், இலங்கையின் முறை சார் கல்வி அமைப்பும்

"சகலருக்கும் கல்வி" என்பது அறிவுசார் சமூகத்தின் இலக்குகளை அடைவதை நோக்காக கொண்டிருக்க வேண்டும். இந்நோக்கை அடிப்படையாக கொண்ட உடன்பாடு தாய்லாந்தின் ஜொம்ரியன் மாநாட்டில் உலகிலுள்ள பெரும்பான்மையான நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் 2000ஆம் ஆண்டில் செனகல் நாட்டில் டாக்கர் நகரத்தில் நடைபெற்ற மாநாட்டில் மீளுறுதிசெய்யப்பட்டது. இதன் பின்னணியில் மாணவர்கள் தற்போதும் எதிர்காலத்திலும் எதிர்கொள்ளக்கூடிய நெருக்கடிகள், அறைகூவல்களுக்கு அவர்களைத் தயார்படுத்தும் பணியைக் கல்வியானது கொண்டிருக்க வேண்டும் என கூறப்படுகிறது. ஆபத்துக்களை ஏற்றல், சமூகமாற்றங்களுக்கு முகங்கொடுத்தல் அழுத்தங்களுக்கு மத்தியில் பணிபுரிதல் முன்னெடுப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் தொழில் முயற்சியாண்மைத்திறன்கள் முதலியவை கல்வியினால் ஏற்படுத்தப்பட வேண்டும் என உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஜேம்ரியன், டாக்கர் மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சகலருக்கும் கல்விக்கான முன்னெடுப்புக்கள் உலக மக்களுக்கு ஒரு புதிய பணிசார் தத்துவத்தையும் ஒரு பொதுவான பிரக்ஞையையும் தந்துள்ளது. சலகருக்கும் கல்வி என்பது பன்முகப்பட்ட செயற்பாட்டுத் தொகுதியில் தங்கியிருக்கிறது. சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிள்ளைகளுக்கு மாத்திரமல்லாது உடல் உளக்குறைபாடு கொண்டோர், மீத்திறன் கொண்டோர், அழிவுகள் காரணமாக இடம்பெயர்ந்தோர் ஆகிய பல்தரப்பட்டவர்களுக்கும் கல்வி வளங்கப்படவேண்டும் என்பதையே சகலருக்கும் கல்வி குறித்து நிற்கிறது எனக் கூறலாம். ஆனால் "சகலருக்கும் கல்வி என்ற சுலோகம் இலங்கையில் உள்ள முறைசார் கல்வி அமைப்பில் எவ்வாறு பேணப்படுகிறது. பாடசாலைகள் மற்றும் பிராந்தியங்களுக்கிடையில் கல்வியில் சமமான தராதரங்களைப் பேணுவது அரசின் முதன்மைப்பணியாகும் என அரசு கூறுகிறது. அத்துடன் அவசரகால நிலமைகளிலும் கூட பிள்ளைகளின் கல்வி உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கூறுகிறது. ஆனால் இவை பெயரளவில் வெறும் அட்டைச் சுலோகங்கள் தவிர இதனுள் செயற்பாட்டு வடிவங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

இலங்கையின் முறைசார் கல்வியமைப்பில் பாடசாலைகள் மாகாண கல்வியமைச்சின் கீழ் மாகாண பாடசாலைகள், மத்திய அமைச்சின் கீழ் தேசிய பாடசாலைகள் மற்றும் சர்வதேச, தனியார் பாடசாலைகளும் காணப்படுகின்றன. தேசிய, சர்வதேச தனியார்பாடசாலைகள் மற்றும் நகரங்கள் அல்லது அதற்கு அண்மித்த பகுதிகளில் உள்ள உயர்தர பாடசாலைகளிலும் மத்திய, உயர்மத்திய தரவர்க்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கம் நிலவுவதைக் காணலாம். மேலும் இப்பாடசாலைகள் முழுமையாக அரசியல் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பதையும் காணலாம். கல்வியின் நோக்கு ஒன்றாக இருந்தாலும் பாடசாலை வடிவங்கள் வெவ்வேறாக பேணுவதன் நோக்கம் வகுப்பு நலன்களின் செல்வாக்குத்தான். இன்னும், புதிதாய் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கனிஷ்ட, சிரேஷ்ட பாடசாலை என தரப்படுத்தி சிரேஷ்ட பாடசாலையாக வலயமட்டத்தில் ஒரு பாடசாலையை மட்டும் நிறுவும் திட்டமும் பாடசாலை செயற்பாடுகளிற்கான செலவினை பாடசாலைகளே பொறுப்பேற்க வேண்டும் என்பதும் வகுப்புநலன்களைப் பேணுவதே. மாணவர்கள் அனைவரும் சமமானவர்கள் என்பது வெறுமனே வெண்சீருடை மட்டிலேயே தங்கியுள்ளது.

ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் யாவும் ஒரே போக்குகளைத்தான் கடைப்பிடிக்கின்றன. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாடவிதானங்களைப் பொறுத்தவரை அரசுக்கு பெருமளவிலான கடனை வழங்கும் உலகவங்கியின் கோட்பாடுகளுக்கமையவே இவை வடிவமைக்கப்படுகின்றன. இவை வரலாற்றுப் புனைவுகளைப் பாடங்களாக்கி இனவாத உணர்வினை ஏற்படுத்துகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. மேலும் இன்று பின்பற்றப்படும் கற்றல் கற்பித்தல் முறைகள் பின்தங்கிய வறிய பாடசாலைகளிற்கு அறவே பொருத்தமற்றதாகவும் வளப்பங்கீட்டில் அவை எப்போதும் புறக்கணிக்கப்படுவதையும் காணலாம்.

இன்றைய நிலையில் இலங்கையின் முறைசார் கல்வியமைப்பு மாணவர்களின் ஆளுமைவிருத்தி, பன்முகத்திறன், தேடல் என்பவற்றினை போதிய அளவு நிறைவு செய்வதாக இல்லை.பாடசாலைக் கல்வியையும் உயர்கல்வியையும் நிறைவு செய்து வெளியேறும் மாணவர்கள் பூகோளமயமாக்கல் சூழலுக்கும் நுகர்வுக்கலாசாரத்திற்கும் ஏற்றவகையில்தயார் செய்யப்படுகிறார்களே அன்றி அறிவுப்பெருக்கமும் பொதுச்சிந்தனையும் உள்ளவர்களாக தோற்றம் பெறவில்லை. மேலும் இலங்கையின் முறைசார் கல்வி நிறுவனங்களை (பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்) தனியார் மயப்படுத்தலில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. பாடசாலைகளில் மாணவர்க்கான அனுமதிக்கட்டணம் அறவிடக்கூடாது எனக் கூறப்பட்டாலும் அரச அதிகாரிகள் அறியவே பல லட்சங்கள் அனுமதிக்கட்டணமாக அறவிடப்படுகின்றன. கல்வி என்பது இன்று அதிக லாபம் ஈட்டும் தொழிலாக திட்டமிடப்பட்டு உருவாக்கப்படுகிறது. இப்போக்கு வறிய மக்களை கல்வி பெறும் உரிமையிலிருந்து தூர விலக்குவதுடன் சகலருக்கும் சம கல்விவாய்ப்பு என்பதனையும் கேள்விக்குள்ளாக்கும் நிலைமையினையும் உருவாக்கியுள்ளது.

பாடசாலைக்கல்வியும் உயர்கல்வியும் மாணவர்களினை சுயமாக தேடி கற்பதனை தூண்டுவதாயும் ஆய்வியல் அபிவிருத்திக்கு உதவுவதாயும் அமைய வேண்டும் என்பது பொது நோக்காகும். ஆனால் இன்றைய முறைசார் பாடசாலைக்கல்வியானது ஆரம்பத்தில் கூறப்பட்ட கல்வியினது பொது நோக்கங்களிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதுவும் இந்நிலைமை எதிர்காலத்தில் மாணவர்களினை எவ்வாறு பாதிக்கும் என்பதுவும் ஆராயப்படவேண்டிய விடயங்களாகும்.

எனவே சமூகத்தில் ஏற்படக்கூடிய சிக்கலான மாற்றங்கள் ஏற்படுத்தும் அறைகூவல்களுக்கு முகம் கொடுக்கவும் நன்மைதரக்கூடிய மாற்றங்களை ஏற்கவும் மக்களை கல்வி வலுவூட்ட வேண்டும். இல்லையெனில் சகலருக்கும் சமகல்வி வாய்ப்பும் முறைசார் கல்விக் கொள்கையும் தொடருறு கல்விச் சேவையில் தோற்றுப்போவது உறுதி.

V.S. இந்திரகுமார்

**பல எழுத்தாளர்களில் இருந்து துல்லியமான வாக்குகளுடையனவும் வாசகங்களுடையனவும் கருத்துக்களுடையனவும் ஆன சேகரிப்பை குழந்தைகளினுடைய தலைக்குள் குத்தித் திணிப்பதல்ல சரியான கல்வி.அவர்களுடைய அறிந்து கொள்ளக்கூடிய திறமையை வெளியுலகிற்குக்கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்தால் ஒரு மரத்திலுள்ள மொட்டிலிருந்து இதழ்களும் பூக்களும் காய்களும் புறப்படுவதைப் போல அவர்களுடைய மனதில் இருந்தும் உயிரோட்டமுள்ள நீரூற்று உற்பத்தியாகும்.**

ஜோன் ஆமோஸ் கொமேனியஸ்

(த கிரேட் டைடாக்டிக் 1649)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வித்துறையில் மதிப்பீட்டுப்பணி

## Educational Evaluation

**திரு.பொ. சிங்கரட்ணம்**
விரிவுரையாளர்
ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரி
பத்தனை


Evaluation எனும் ஆங்கிலப் பதம் குறிக்கும் மதிப்பீடு என்ற சொல்லானது ஒரு பரந்த எண்ணக்கருவாகும். கல்வித்துறையில் மதிப்பீட்டை பரீட்சை நடாத்தி தரமும் சான்றிதழும் வழங்கப்படும் ஒரு செயன்முறை என மாணவர்கள் பெற்றோர் உட்படப் பெரும்பாலானோர் எண்ணுகின்றனர். ஆயினும் மதிப்பீட்டைச் சோதனைகளுக்கு மாத்திரம் வரையறுக்க முடியாது. மதிப்பீட்டின் மூலம் அதனிலும் பரந்த பணி ஆற்றப்படுகிறது.

தீர்மானிக்கப்பட்ட குறிக்கோளையும் இலக்குகளையும் அடையும் எதிர்பார்ப்புடன் இடம்பெறும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் மூலம் குறிக்கோள்களும் இலக்குகளும் எந்த அளவுக்கு அடையப்பட்டன அடையப்படுகின்றன என்பதைப் பரீசிலிக்கும் செயன்முறையே மதிப்பீடு என வரைவிலக்கணப்படுத்தலாம். கல்வி சார் முயற்சிகள் பணிகள் என்பவற்றின் வினைத்திறனைத் தீர்மானிக்கும் தொழிற்பாடு கல்வி மதிப்பீடு எனக் குறிப்பிடலாம். கல்வி அளவீட்டின் மூலம் பெறப்பட்டவற்றுக்கு விளக்கமளிக்க முயல்வது மதிப்பீடு எனப்படும். இங்கு குறிப்பிடப்பட்ட கல்வி அளவீடானது கல்வி மதிப்பீட்டினின்றும் பிரிக்க முடியாதது. கல்வித்துறையில் நோக்கங்கள் கருதிய பணியின் மூலம் கிடைத்த கிடைக்கும் பெறுபேறுகளை தொகையளவில் வடிவமைத்தல் கல்வி அளவீடு எனப்படுகிறது. எவ்வளவு என்ற வினாவுக்கு அளவீடு பதிலளிக்கிறது.பெறப்பட்ட அளவீடுகளுக்கு விளக்கமளிக்க முயல்வது மதிப்பீடு எனப்படும். ஒரு விடயம் பற்றிக் கிடைத்த தகவல்களிலிருந்து பெறப்படும் விழுமியத்தீர்ப்பு எனவும் மதிப்பீட்டுக்கு விளக்கமளிக்கலாம். கல்வி மதிப்பீடு குறித்த சில வரைவிலக்கணங்களைப் பார்ப்போம்.

'Evaluation is a broader concept than Measurement of Research in that it is a decision making judgment process in which we continually engaged.'

The collection is an use information to make decisions about an Education programme.

Cronbach - 1963



'The systermatic colletion and interpretation of Evidence leading as part of the process to a judgment of value with a view to action' - Beeby, 1977

கிரோனலன்ட் (1991) என்பாரின் கருத்துப்படி மாணவர்கள் கற்றல் குறிக்கோள்களை எந்த அளவு அடைந்துள்ளார்கள் என்பதைத் தீர்மானித்துக் கொள்வதற்காகத் தேவையான தகவல்களைச் சேகரித்தல், தொகுத்தல், வியாக்கியானம் செய்தல் தொடர்பான முதன்மையான செயல் முறை 'வகுப்பறை மதிப்பீடு' ஆகும் என்கிறார்.

அய்ரசியன் (Airasian) என்பார் யாதேனும் ஒரு தொகுதிச் செயல்களில் அல்லது செயலடைவின் தரத்தை அல்லது பெறுமானத்தைத் தீர்ப்புச் செய்வதே 'மதிப்பீடு' என்பார்.

மதிப்பீடானது ஒரு பரந்த எண்ணக்கரு என்பதை முன்னரே குறிப்பிட்டோம். மதிப்பீடானது சோதனை, அளவீடு, கணிப்பீடு, மதிப்பீடு, ஆகிய எல்லா எண்ணக்கருக்களையும் உள்ளடக்கும் வகையிலான முழுமையான அர்த்தம் தரும் ஒரு பதம் என்பதே இதன் கருத்து ஆகும். எனவேதான் மதிபபீட்டுடன் தொடர்புடைய சில முக்கிய எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவீடு (Measurement) ஒருவரிடத்தே காணப்படும் யாதேனும் இயல்புக் கூறொன்றின் மட்டத்தை எண்சார் விபரமாகப் பெறும் செயன்முறையே அளவீடு ஆகும். குறிப்பிட்ட பண்புக் கூறொன்றின் நிலைமையை அளவுரீதியில் காட்டுதல் இதுவாகும். எவ்வளவு என்ற வினாவுக்கு விடையளிப்பது அளவீடாகும்.

உதாரணம்: கண்ணன் 20 கணித பிரச்சினைகளுள் 15 இதனைச் சரியாகச் செய்து 75 புள்ளிகளைப் பெற்றான். இந்த அளவீடானது பௌதிக அளவீடு, உள அளவீடு, என இருவகைப்படும். உயரம், நீளம், அகலம், நிறை, போன்ற பௌதிகப் பண்புகளை அளவிடுதல் பௌதிக அளவீடு எனப்படும். சிந்தித்தல், ஆராய்தல், தர்கித்தல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடுதல் போன்ற உளச்செயல்களை அளவிடுதல் உள அளவீடு எனப்படும். இங்கு குறிப்பிடப்பட்ட உள அளவீடே கல்வி அளவீடாகும். (கல்வி அளவீடு குறித்து பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆராயப்படும்.)

சோதனை (Test) முறையான வகையில் தயாரிக்கப்பட்ட ஒரு தொகுதி வினாக்களை முன்வைப்பதன் மூலம் நடத்தை மாதிரியொன்றை அளப்பதற்காகப் பயன்படுத்தும் யாதேனும் கருவி அல்லது முறையான செயன்முறையே 'சோதனை' ஆகும் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. சோதனை என்பது முறைமையான ஒரு மதிப்பீட்டு முறையாகும். உதாரணம் - அடைவுப்பரீட்சை, நுண்ணறிவுப் பரீட்சை, உளச்சார்புப் பரீட்சை.

**கணிப்பீடு**

(Assesment) மாணவரது செயலடைவு தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக பயன்படுத்தப்படும் எந்த ஒரு நடவடிக்கையும் கணிப்பீடு எனலாம். மாணவர் தொடர்பாகத் தேடியறிந்து அவர்களது கற்றல் விருத்திக்கு உதவி செய்யும் செயற்பாடே இதுவாகும். கணிப்பீடானது ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும். கற்றல் செயன்முறையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அதாவது தொடக்கத்திலும், நடுவிலும், இறுதியிலும், கணிப்பீடு இடம்பெறலாம். ஆசிரியர் தினமும் தேடிப்பார்த்து மாணவருக்கு உதவி புரியும் நோக்குடன் செயப்படுவது கணிப்பீடு ஆகும்.

எழுத்துப் பரீட்சைகள் வாய்மொழிச் சோதனைகள் ஆவுகூடப் பரிசோதனைகள் ஆசிரியரது அவதானிப்புகள் மாணவரது செயற்திட்டங்கள் ஒப்படைகள் மாணவரது சுய அறிக்கைகள் உட்பட மாணவர் அடைவை தேர்ச்சியை அறியப் பயன்படுத்தப்படும் பல்வேறு நடவடிக்கைகள் என்பன யாவும் கணிப்பீடு எனும் எண்ணக்கருவினுள் அடங்கும். இவை வகுப்பறை மட்டத்தில் இடம்பெறும் போது வகுப்பறை மட்டக்கணிப்பீடு எனப்படும்.

இவ்விளக்கங்களிலிருந்து பரீட்சை மூலம் அல்லது வேறு கருவிகள் மூலம் மாணவர் தொடர்பாகச் சேகரிக்கும் தகவல்களை வியாக்கியானம் செய்து தீர்ப்பு வழங்குவதே மதிப்பீடு என முடிவாகக் கூறலாம்.

**கல்வி மதிப்பீட்டுத் துறைகள்:**

மாணவரது பாட அடைவை தேர்ச்சி நிலையை மதிப்பீடு செய்வதே மதிப்பீட்டுப் பணியின் மூலம் பிரதானமாக ஆற்றப்படுவதாயினும் மதிப்பீடு அதற்கு மட்டும் வரையறுக்கப்படுவதில்லை. கல்வித் துறையின் பிரதான செயற்பாடுகளின் வினைத்திறன் மட்டமும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகிறது. அவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. மாணவரது அடைவு மட்ட மதிப்பீடு:

   மாணவரது கற்றலின் குறிக்கோள்கள் எந்தளவு அடையப்பட்டுள்ளன என்பது மதிப்பீட்டின் மூலம் அறியப்படும். மாணவரது பாட அறிவுசார் திறன்கள், உளவியக்கத் திறன்கள், (ஆற்றல்கள்) மனவெழுச்சி சார் பண்புகள், (விழுமியப் பண்புகள்) ஆளுமைப் பண்புகள் என்பன மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும் இதற்காக அடைவுப் பரீட்சை மட்டுமன்றி வேறு அளவீட்டுக் கருவிகளும் பயன்படுத்தப்படும்.

2. ஆசிரியரது செயற்றிறன் மதிப்பீடு:

   ஆசிரியரது கற்பித்தலின் வெற்றி, பிரயோகிக்கப்படும் கற்பித்தல் முறைகள், ஆசிரியரின் பண்புசார் நடத்தைகள், பாடசாலை நிர்வாகம், சமூகம் சார்பாக ஆசிரியரது நடிபங்கு, என்பன மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். இந்த மதிப்பீடு பின்வரும் இரண்டு வகையில் இடம்பெறும்.

1. முறைசார் மதிப்பீடு அதிபர் உட்பட கல்வி அதிகாரிகளால் பொருத்தமான நியதிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட மதிப்பீடு இதுவாகும்.

2. முறைசாரா மதிப்பீடு- மாணவரது பரீட்சைப் பெறுபேறுகள், நடத்தை வெளிப்பாடுகள், என்பவற்றைக் கொண்டு சமூகத்தினால் ஆசிரியர் பற்றி மதிப்பீடு செய்வதே இதுவாகும்.

3. கலைத்திட்ட மதிப்பீடு:

   நடைமுறையிலுள்ள கலைத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களில் பயனுள்ளவை எவை பயனற்றவை எவை என்பது இதில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். கலைத்திட்ட ஆக்கமும் அதனை நடைமுறைப் படுத்தலும் மையநிலைப்படுத்தப்பட்டுள்ள நிலைமையிலும் கூட பயனுள்ளதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலைத் திட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களை இனங் காண்பதே இம்மதிப்பீட்டின் நோக்கமாகும். முக்கியமாகக் கலைத்திட்டத்தின் பாட உள்ளடக்கங்கள், கற்பித்தல் முறைகள், அணுகு முறைகள், தரஉள்ளீடுகளின் பயன்பாடு, மாணவரிடத்தே ஏற்படுத்த வேண்டிய விழுமியப் பண்புகள், கணிப்பீடு மதிப்பீடு என்பவற்றில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள், போன்றவை மதிப்பிடப்பட்டுத் தேவையான ஆலோசனைகள், விதப்புரைகள் முன் வைக்கப்படுவதாக இம்மதிப்பீடு அமையும்.

4. முகாமைத்துவ நிர்வாக மதிப்பீடு :

பாடசாலைச் செயற்பாடுகளில் தோல்விகளைக் குறைத்து வெற்றி வாய்ப்புகளைப் பலப்படுத்துவதற்கு முகாமை நிர்வாக செயற்பாடுகளின் தற்போதைய நடைமுறைகளை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. இதில் நிர்வாகப் பரவலாக்கம், அதன் நடைமுறைப்படுத்தலின் செயற்திறன், பாடசாலையின் தோல்வியைக் குறைத்து வெற்றியை மேம்படுத்தும் விசேட வேலைத்திட்டங்கள், அதி உயர் தகைமையுடையோர், பின்தங்கியோர் என்போருக்கான விசேட வேலைத்திட்டங்கள், மாணவரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் பெற்றோருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் என்பன மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டியனவாகும். இவை தவிர குறிப்பான சில கல்விப் பிரச்சினைகள் பற்றி ஓரளவுக்கேனும் ஆய்வு நடத்தித் தீர்வு காண வேண்டிய அவசியமும் பாடசாலைகளுக்கு உண்டு.

5. மதிப்பீட்டுச் செயன்முறையின் மதிப்பீடு:

கல்விக் குறிக்கோள்கள் எந்த அளவுக்கு அடையப்பட்டுள்ளன என்பதை மதிப்பிடும் நடைமுறையிலுள்ள மதிப்பீட்டு முறையின் நிறைகுறைகள் இதில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். அடைவுப் பரீட்சை மூலம் மாணவரது முழுமையான விருத்தி நடத்தை மாற்றம் அல்லது ஆளுமையைக் கணிப்பிட முடியாது. அடைவுப் பரீட்சை மூலம் மாணவரது பாட அடைவை மட்டுமே மதிப்பிட முடியும். எழுச்சிசார் ஆட்சிக்குட்பட்ட (Affective Domain)கல்விக் குறிக்கோள்கள் மற்றும் உளவியக்கத் திறன்கள் (Psychomotor Domain) என்பவற்றை அடைவுப் பரீட்சை தவிர்ந்த வேறு கருவிகள் மூலமே அளவீட்டுக்கு உட்படுத்தி மதிப்பிட முடியும். தற்போது நடைமுறையிலுள்ள பரீட்சை மைய கலைத்திட்டம்




மாணவரிடையே சமநிலை ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இதனால் சமநிலை ஆளுமை விருத்தி மட்டம் மதிப்பிடப்பட வேண்டும். எனவே தான் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறை 1997 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் அடைவுப் பரீட்சையை மட்டும் பயன்படுத்தி மாணவர்களது திறமையை மதிப்பிடும் முறையில் மாற்றம் செயப்பட்டுள்ளமையை நாம் அறிவோம். தற்போது அடைவுப் பரீட்சையுடன் அவதானிப்புப் படிவம், செவ்வை பார்ப்புப் படிவம், தர அளவுப் பரிமாணம், ஒப்படை, செயற்றிட்டம் போன்ற மதிப்பீட்டுச் செயன்முறைகளும் கருவிகளும் மாணவரை மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான மாற்றங்களை மதிப்பீட்டில் செய்வதற்கு மதிப்பீட்டுச் செயன்முறையின் மதிப்பீடு அவசியமாகின்றது.

**மதிப்பீட்டுப் படிகள்**

மதிப்பீட்டுச் செயன்முறையானது படிமுறைக் கூடாகவே இடம்பெறும் அத்தகைய படிமுறைகள் வருமாறு:

படி I

மதிப்பிடப்படும் பண்பு எது எனத் தீர்மானித்தல்

உதாரணம்: பாட அடைவை மதிப்பிடல், ஆக்கத் திறனை மதிப்பிடல், விழுமியப் பண்பை மதிப்பிடல்.

படி II

தெரிவு செய்த பண்பை அளவீடு செய்து மதிப்பிடுவதற்குப் பொருத்தமான அளவீட்டுக் கருவியைத் தீர்மானித்தல்.

உதாரணம்: பாட அடைவை மதிப்பிடுவதற்கு அடைவுப் பரீட்சையும், ஆக்கத்திறனை மதிப்பிடுவதற்கு அவதானிப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிவம், தரவரிசை, அளவிடை, செவ்வைபார்ப்புப் படிவம், என்பனவும் பொருத்தமான கருவிகளாகும்.

படி III

தெரிவு செய்த கருவியைத் தயாரித்தல்

உதாரணம்: நியதிகளைக் கொண்டு (பெஞ்சமின் புளூமின் படி அறிவின் பகுப்பு) அடைவுப் பரீட்சை வினாக்களைத் தயாரித்தல். பொருத்தமான நியதிகளைப் பயன்படுத்தி அவதானிப்புப் படிவத்தைத் தயாரித்தல்.

படி IV

தயாரித்த அளவீட்டுக் கருவியைப் பயன்படுத்தி மாணவரிடம் எதிர்பார்க்கின்ற பண்பை அளத்தல்.

உதாரணம்: பரீட்சை நடாத்துதல், செயற்பாடுகளின் போது மாணவரது நடத்தையை அவதானித்தல்.

படி V

அளவீட்டின் மூலம் பெற்ற தரவுகளைத் தொகுத்தலும் பகுப்பாய்வு செய்தலும், குறிக்கோள்களுடன் ஒப்பிடுதலும், வியாக்கியானம் செய்தலும், முடிவுக்கு வருதலும். இதன்போது எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் எந்த அளவுக்கு நிறைவேறியுள்ளன என்பது தீர்மானிக்கப்படும்.

**மாணவரிடம் மதிப்பிட வேண்டிய அம்சங்கள்**

மாணவரது அடைவு மட்டம் அல்லது தேர்ச்சி மட்டத்தைக் கண்டறிவதற்காக அளவீடு செய்து மதிப்பீடு செய்வதற்கான அம்சங்களைப் பின்வரும் ஐந்து பிரிவுக்குள் அடக்கலாம்.

**1. அறிகைசார் புலம்:** (Cognitive Abilities)

கற்றலினால் மாணவரிடத்தே கட்டியெழுப்பப்படும் அறிவும், தகவல்களும் அத்தகவல்கள் தொடர்பான அறிவாற்றல்களும் அடங்கியதே அறிகைப் புலமாகும். இதில் அறிவு, நுண்ணறிவுத் திறன்கள் இடம்பெறும். இவை உளத் திறமைகளாகும். அறிகைசார் புலம் தொடர்பாக மதிப்பீட்டின் போது கீழ்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்படும்.

1. அறிவுத் திறன்கள்
2. கல்வித்துறை உளச்சார்பு
3. கற்கும் திறமை
4. பிரசினங்களைத் தீர்க்கும் திறமை
5. எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ளும் திறமை

பெஞ்சமின் புளூம் என்பார் வகையிடும் அறிதல் சார் ஆட்சியின் பின்வரும் 6 படிமுறைகளும் மதிப்பீட்டின்போது உள்ளடக்கப்படல் வேண்டும்.

1. அறிவு ஞாபகத்திலிருந்து கூறுந் திறன்
2. கிரகித்தல் விளக்கம் - தெரிந்தவற்றைத் தனது வார்த்தைகளில் வெளிப்படுத்துதல்.
3. பிரயோகம்- கற்ற கோட்பாடுகள் விதிகள் முறைகள் தத்துவங்களை தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தல்.
4. பகுப்பு- முழுமையான ஒன்றைப் பல பகுதிகளாக்கும் திறமை
5. தொகுப்பு- முழுமையான ஒன்றைக் கட்டியெழுப்பும் திறமை
6. மதிப்பீடு பொருத்தமான அளவு கோல்கள் நியதிகளுக்கு ஏற்ப தீர்மானம் எடுக்கும் திறமை

(அறிகைப் புலம் தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட பாகுபாடு தொடர்பாக பிறிதொரு சந்தர்ப்பத்தில் விளக்கப் படும்)

மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்களை உள்ளடக்கியதாக அளவீட்டு மதிப்பீட்டு உபகரணம் தயாரிக்கப்படல் வேண்டும். (அடைவுப் பரீட்சை பொருத்தமான உபகரணமாகும்)

**2. மனவெழுச்சிப் புலம்:** (Affective Traits)

கற்றலினால் மாணவருள் விருத்தியடையும் நேரான மனப்பாங்குகள், நற்பண்புகள், நற்பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், ஆசாரங்கள் போன்ற நல்லவரிடம் இருக்க வேண்டிய பண்புகளே இதில் இடம்பெறுகின்றன. இவை உள்ளம், அகம் சார்ந்தவை. ஒரு நபரது நடத்தை வெளிப்பாட்டினூடாக அவதானிக்கத்தக்கவை. மனவெழுச்சிப் பண்புகளை உள்ளடக்கிய அவதானிப்புப் பத்திரத்தைக் கொண்டு மாணவரை மதிப்பிட வேண்டும்.

**3. உளவியக்கப்புலம்:** (Psychomotor Skills)

தசைநார் இயக்கம் உடலுறுப்புக்களின் இயக்கம் சார்ந்த திறமைகளே (Skills) இதில் இடம்பெறுகின்றன. இத்திறமைகள் பின்வரும் இரண்டு வகைப்படும்.

I. இயக்கத் திறன்கள் - வயதுடன் வரும் உடல் வளர்ச்சியினால் ஏற்படும் திறன்கள் இவையாகும்.

II. பயில் திறன் - பயிற்சியினால் விருத்தி செய்யப்படுபவையாகும்.

உதாரணம்: நடனம், சங்கீதம், ஆய்வுகூடப் பரிசோதனை, உடற்பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் செயல் முறைப் பயிற்சிகள் என்பன மூலமே உளவியக்கத் திறன்கள் மாணவரிடம் வளர்க்கப்படுகின்றன. செயல்முறைப் பரீட்சை மூலம் இத்திறமைகளின் மட்டத்தை மாணவரிடம் மதிப்பிடலாம். பொருத்தமான நியதிகள் நடத்தைகளை உள்ளடக்கிய அவதானிப்புப் படிவம், தர அளவுப் பிரமாணம் (தரவரிசை அளவிடை) செவ்வை பார்த்தல் பத்திரம் போன்றவற்றில் ஒரு கருவியைப் பயன்படுத்தி இத்திறன்களை மாணவரிடம் மதிப்பிடலாம்.

**4. சமூகத் திறன்கள்:** (Social Skills)

யாதாயினும் சமூகத்தில் அங்கத்தவராகச் செயற்படத் தேவையான பல்வேறு திறன்களே இவையாகும். மாணவர்கள் சேர்ந்து செயற்படுவதற்கான குழுச் செயற்பாடுகள் மூலம் இத்திறன்கள் வளர்க்கப்படும். அத்தகைய சமூகத் திறன்கள் பின்வருவனவாகும்.

1. பொறுமை
2. மற்றவர்களின் கருத்தை மதித்தல்
3. தலைமைத்துவத்தை ஏற்றல்
4. தொடர்பாடல் திறன்
5. தலைமையை மதித்தல்
6. புதிய நிலைக்கேற்றாற் போல் இசைவாதல்
7. குழுவின் முன் அடியெடுப்பு
8. குழுவை வெற்றியடையச் செய்தல்

இத்தகைய சமூகத் திறன்களை மாணவர்களது நடத்தை வெளிப்பாடுகளை அவதானிப்பதன் மூலம் மதிப்பிடப்படும்.

**5. ஆளுமைப் பண்புகள்:** (Personality Traits)

ஒருவரிடம் உள்ள நிலையாகத் திரட்டப்பட்ட தனித்துவமான நடத்தைப் பண்புகளே ஆளுமை எனப்படும். ஒருவர் கொண்டுள்ள ஒட்டு மொத்தமான இயல்புகள் குணாம்சங்களை ஆளுமை உள்ளடக்கியதாகும். பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் எல்லா வேலைத்திட்டங்களும் மாணவரது பூரண விருத்தியை (Total Development) இலக்காகக் கொண்டவையாகும். அதன் மூலம் மாணவரிடத்தே சமனிலை ஆளுமையை (Balance Personality) விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. உளவியலாளர்களாலும் கல்வியியலாளர்களாலும் இனங்காணப்பட்டுள்ள சில ஆளுமைப் பண்புகள் வருமாறு:

1. மனோபாவங்கள்- உள்ளத்தின் நடத்தைப் பாங்கு உதாரணம்: உற்சாகம், சோம்பல்
2. நடத்தை ஒருவரது சார்பளவில் உறுதியான பண்புக் கூறுகள் உதாரணம்: கருணை, இரக்கம்
3. விருப்புகள் - ஒருவரது உளச்சார்பு உதாரணம்: வாசிப்பில் காட்டும் ஆர்வம்
4. இசைவு- ஒருவர் சமூகத்துடனும் சூழலுடனும் இசைவடைந்துள்ள விதம் உதாரணம்: குழுவாக இயங்குதல், கூச்ச சுபாவம்
5. மனப்பாங்குகள் - ஒருவரிடத்தே காணப்படும் உணர்வுகள் உதாரணம்: உடன்பாடான மனப்பாங்கு

ஆளுமையை அளப்பதும் மதிப்பீடு செய்வதும் இலகுவான காரியமன்று. ஏனெனில் ஆளுமைப் பண்புகள் தொடர்ச்சியாக வளர்ச்சியடையும், மாற்றமடையும். ஆளுமைப் பண்புகளைச் சரியாக இனங்காணுதல், சரியான வழிகாட்டலுடன் விருத்தியடையச் செய்தல், அவை விருத்தியடையும் விதத்தை மதிப்பிடுதல் என்பன ஆசிரியரின் பணிகளாகும். பாடசாலைகளில் ஆளுமையை அளப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் கவனத்திற் கொள்ளத்தக்க சில பண்புக் கூறுகள் வருமாறு:

1. ஒழுக்கம் பேணுதல்
2. செயல்களில் செம்மை
3. மரியாதையுணர்வு
4. நேர்மை
5. உண்மை பேசுதல்
6. ஊக்கம்
7. கருணையுணர்வு
8. கூட்டுணர்வு
9. நல்ல நடத்தை
10. நம்பகத்தன்மை
11. பொறுப்புகளை வகித்தல்
12. ஆக்கத்திறன்
13. பரிவுணர்வு
14. பணிவு
15. நன்றி பாராட்டுதல்
16. நியாயம் பேணுதல்

இத்தகைய ஆளுமைப் பண்புக் கூறுகளை வகுப்பறையிலும், பாடசாலை வளவிலும் அளப்பதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் அவதானிப்பு முறையைக் கையாளலாம். இதற்காக அவதானிப்பு பட்டோலையைப் Observation Schedule) பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வி மதிப்பீட்டு வகைகள்

கற்றல் கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பத்திலிருந்து அதன் இறுதி மதிப்பீடு நடைபெறும் என்பது மிகவும் அடிப்படையானது. பாடசாலைக் கல்விச் செயற்பாட்டின்போது மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டை கீழ்வரும் நான்கு வகைகளில் வகுத்து நோக்கலாம்.

1. உருவாகுநிலை மதிப்பீடு அமைப்பு மதிப்பீடு (Formative Evaluation)
2. கூட்டு மதிப்பீடு இறுதி மதிப்பீடு (Sumative Evaluation)
3. ஆய்ந்தறி மதிப்பீடு குறைகாண் மதிப்பீடு (Diagnose Evaluation)
4. தகுதிநிலை காண் மதிப்பீடு (Placement Evaluation)

### உருவாகும் நிலை மதிப்பீடு

கற்றல்- கற்பித்தல் செயற்பாடு நடைபெறும் வேளையில் இடைநடுவே மேற்கொள்ளப்படும் மதிப்பீடு உருவாகு நிலை மதிப்பீடு எனப்படும். இதனால் இது இடையிட்ட மதிப்பீடு எனவும் அழைக்கப்படும். ஒரு பாட அலகைக் கற்பித்து முடித்த பின்னர் / ஒரு வார முடிவில் / ஒரு மாத முடிவில் என்றவாறு இம்மதிப்பீடு இடம்பெறும். பாடத்தொடரின் இடையிடையே தொடர்ச்சியாக மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதால் தொடர் மதிப்பீடு எனவும் இது அழைக்கப்படும். அடைவுப் பரீட்சை உள்ளிட்ட எந்த அளவீட்டுக் கருவியையும் இந்த மதிப்பீட்டுக்குப் பயன்படுத்த முடியும்.

குறிப்பிட்ட பாட விடயத்தைக் கற்பித்து முடித்த ஆசிரியர் அக்கற்றற் பணியில் மாணவர்கள் எந்த அளவுக்கு விளக்கத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதையும், என்ன அம்சங்களில் இடர்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும், அறியும் நோக்குடன் இந்த மதிப்பீடு நடாத்தப்படுகிறது.

இம்மதிப்பீட்டின்போது மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் இடர்கள் உடனுக்குடன் நிவர்த்திக்கப் படுகின்றன. மாணவர்களுக்கு ஒரு பின்னூட்டலாகவும் உருவாகு நிலை மதிப்பீடு அமைகிறது.

### கூட்டு மதிப்பீடு / இறுதி மதிப்பீடு

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் அல்லது போதனைத் திட்டம் ஒன்றின் முடிவில் முழுப் பாடப் பரப்பையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படும் மதிப்பீடு கூட்டு அல்லது இறுதி மதிப்பீடு எனப்படும். கற்றலின் விளைவாக மாணவரின் ஒட்டுமொத்தமான அடைவு மட்டம் அல்லது தேர்ச்சியின் மொத்த விளைவைக் குறிப்பிடுவது கூட்டு மதிப்பீடு ஆகும். ஒரு தவணை முடிவில் / அரையாண்டு முடிவில் / ஆண்டிறுதியில் என்றவாறு இம்மதிப்பீடு இடம்பெறும். க.பொ.த. சாதாரண தர / உயர்தர பரீட்சைகள் கூட்டு மதிப்பீட்டைச் சாரும். மாணவர்களுக்கு இறுதிப் புள்ளிகளையும், தரங்களையும் வழங்குவதற்கு இம்மதிப்பீடு பயன்படுத்தப்படுகிறது.

### குறைகாண் மதிப்பீடு / ஆய்ந்தறி மதிப்பீடு

கற்றல் தொடர்பில் மாணவரிடம் காணப்படும் குறைபாடுகளை அறிவதற்காக மேற்கொள்ளப்படும் மதிப்பீடு குறைகாண் மதிப்பீடு ஆகும். கற்றல் குறைபாடுகளை கண்டறிவதற்காக இம்மதிப்பீடு திட்டமிடப்படுவதால் கண்டறி மதிப்பீடு எனவும் குறைகளைத் தேடுவதால் தேடல் சோதனை எனவும் இது அழைக்கப்படுவதுண்டு. கற்றல் தொடர்பில் மாணவரிடையே நீண்டகாலமாக இருந்து வரும் குறிப்பான குறைபாடுகள் / பிரச்சினைகள் தெளிவாகவும், விரிவாகவும் கண்டறிவது இம்மதிப்பீட்டின் விசேட இயல்பாகும்.

உதாரணமாக மொழி கற்றலில்- எழுத்துப் பிழைகள் விடுதல், ர,ற / ல ள/ ன,ண வேறுபாடுகளை இனங்கண்டு வாக்கியங்களில் பயன்படுத்த முடியாமை, இலக்கண அமைப்பின்படி கருத்துள்ள வாக்கியங்களை ஆக்க முடியாமை.

கணிதம் கற்றலில் - கொண்டு செல்லலுடன் கூட்டல், கழித்தல் பெருக்கல், பிரித்தல் பிரசினங்களைத் தீர்க்க இடர்படுதல்.

இவ்வாறான கற்றல் குறைபாடுகளை அறிவதற்கான செயற்பாடுகளை வழங்குவதன் மூலம் கற்றல் இடர்பாடுகளை இனங் கண்டுகொள்ள முடியும்.

குறைகாண் மதிப்பீட்டின் நோக்கம் கற்றல் குறைபாட்டிலிருந்து மாணவரை விடுவிப்பதற்கான பரிகாரக் கற்பித்தலை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதாகும். கற்றல் குறைபாடுகளை இனங் கண்ட பின் அவற்றைத் தீர்ப்பதற்கான பரிகாரச் செயற்பாடுகள் குறைபாடுகளின் தன்மைக்கு ஏற்ப இலகுவில் இருந்து கடினம் வரை படிமுறையாகத் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

### தகுதிநிலைகாண் மதிப்பீடு

குறிப்பான பண்புகள் அல்லது நிலைமைகளில் மாணவரின் தகுதியைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் மதிப்பீடு தகுதிநிலைகாண் மதிப்பீடு ஆகும். கல்வி நிறுவனத்தின் அல்லது கல்வித் திட்டம் சார்பான நிர்வாகத் தேவைகளின் பால் பெரும்பாலும் இவ்வகை மதிப்பீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படுகிறது. மாணவர்களைத் திறமைக்கேற்ப குழுக்களாகப் பிரித்தல், சிறப்பான சில பண்புகளில் மாணவரின் தேர்ச்சி நிலையைத் தீர்மானித்தல், போன்ற நிலைமைகளில் இவ்வகை மதிப்பீட்டின் மூலமே தீர்வு காணப்படுகின்றது. உதாரணமாக- விஞ்ஞான புதிர்ப் போட்டிக்கு திறமை கூடிய மாணவர்களைத் தெரிவு செய்தல், தமிழ்த் தினப் போட்டிக்கு பேச்சு, பாடல், நடன நிகழ்ச்சிகளுக்குத் திறமை கூடிய மாணவர்களைத் தெரிவு செய்தல் போன்ற நிலைமைகளில் இவ்வகை மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

**மதிப்பீட்டுப் பிரவேசம் மதிப்பீட்டு அணுகு முறை**

திறமை மட்டத்திற்கேற்ப மாணவரை வேறுபடுத்தி இனங் காண்பதற்கேற்றவாறான மதிப்பீட்டு அணுகு முறை மதிப்பீட்டுப் பிரவேசம் எனப்படும். இதில் மூன்று பிரவேசங்கள் அணுகு முறைகள் உள்ளன.

1. நியமஞ்சார் மதிப்பீட்டு அணுகு முறை (Norm Reference Evaluation)
2. நியதிசார் மதிப்பீட்டு அணுகு முறை (Criterian Reference Evaluation)
3. முன்னடைவு மட்ட மதிப்பீட்டு அணுகுமுறை (Ipsative Reference Evaluation)

**நியமஞ்சார் மதிப்பீட்டு அணுகு முறை**

குறிப்பிட்ட மாணவர் குழுவில் ஒரு மாணவர் ஏனைய மாணவர்களுடன் ஒப்பிடப்படும் போது எந்த நிலையில் உள்ளார் என முடிவு செய்தலே நியமஞ்சார் மதிப்பீடு எனப்படும். இம்மதிப்பீட்டின் மூலம் குறித்த மாணவரது பணிகள் சார் அடைவு மட்டமானது ஏனைய மாணவரது மட்டத்தோடு தொடர்புபடுத்தப்பட்டு முடிவு செய்யப்படும். பரீட்சைப் புள்ளிகளை ஏனைய மாணவர்களது புள்ளிகளோடு தொடர்புபடுத்தி ஒப்பிட்டு ஒரு மாணவரது நிலையை அறிதல் நியமஞ்சார் மதிப்பீட்டின் போது நிகழும். இந்த மதிப்பீட்டு அணுகு முறையின் நன்மைகள் வருமாறு:

1. ஏனைய மாணவர்களது அடைவு மட்டத்தோடு ஒப்பிடப்பட்டு குறித்த மாணவரது அடைவின் ஏற்றம் அல்லது வீழ்ச்சியை முடிவு செயலாம்.
2. குறித்த மாணவரது இடத்தைத் தீர்மானிக்கலாம்.
3. குறிப்பிட்ட சில துறைகளுக்காக திறமையுடைய விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவும்.

**நியதிசார் மதிப்பீட்டு அணுகுமுறை**

குறிப்பிட்ட பணிகளில் அல்லது ஆற்றல்களில் ஒரு மாணவர் எத்தகைய பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளார் என அறிவதற்கான மதிப்பீடு நியதிசார் மதிப்பீடு எனப்படும். மாணவரது அடைவானது தீர்மானிக்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் ஒப்பிடப்பட்டு முடிவு செயப்படுவதே இங்கு நிகழ்கிறது. மாணவர் ஒருவர் என்னென்ன விடயங்களை அறிந்து வைத்திருக்கிறார் அல்லது எவற்றை அவரால் செய முடியும் என்பதைப் புலப்படுத்தும் அடைவு அளவீடுகள் இதுவாகும். இதன் மூலம் மாணவரால் என்ன ஆற்ற முடியும் என்பது தீர்மானிக்கப்படும். மாணவரால் ஈட்டப்பட்ட அடைவு மட்டம் ஒரு நியதியோடு ஒப்பிடப்பட்டு அவரது நிலை தீர்மானிக்கப்படும். உதாரணம்- கணித பாட பரீட்சை சார்ந்த எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கத்திற்குப் பிரமாணமாக 80 புள்ளிகள் என நிர்ணயிக்கப்படுமாயின் மாணவர்கள் பெற்ற புள்ளியானது 80 புள்ளியுடனேயே ஒப்பிடப்பட்டு அவர்களது திறமை முடிவெடுக்கப்படும். 75 புள்ளிகளைப் பெற்ற மாணவர் உத்தேச கணித எண்ணக்கருக்களை கணிசமாக விளங்கிக் கொண்டுள்ளார் என முடிவெடுக்கப்படும். இந்த மதிப்பீட்டின் நன்மைகள் பின்வருவனவாகும்.

1. கல்விச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவர்.
2. மாணவர் மத்தியில் போட்டி மனப்பான்மை குறையும்.
3. மாணவரை மையமாகக் கொண்ட கற்பித்தலுக்கு வழிவகுக்கும்.

**முன்னடைவுமட்ட மதிப்பீட்டு அணுகுமுறை**

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தலின் நிமித்தம் மாணவர்களுக்கு உதவுவதற்காக அவர்களது முன்னடைவுகளை விளங்கிக் கொண்டு கற்றல் சார்ந்த பிரச்சினையை இயன்ற வரை குறைத்துக் கொள்வதற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் செயன்முறையானது முன்னடைவுமட்ட அடிப்படையிலான மதிப்பீடு எனப்படும். கற்றல் - கற்பித்தலின் ஆரம்பத்தில் பாட அலகு தொடர்பில் மாணவர் அடைந்த உத்தேச தேர்ச்சியின் தன்மை நலிவுகள் அண்மித்துள்ள தேர்ச்சியின் மட்டம் என்பவற்றின் அடிப்படையில் மேம்படுத்த வேண்டிய நிலைமைகள் என்பன ஆசிரியனால் இனங்காணப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கலந்துரையாடுதல் வினவுதல் திட்டமிட்ட செயற்பாடுகளை வழங்குதல் என்பன மூலம் இந்த மதிப்பீடு நடைபெறும். இந்த மதிப்பீட்டின் நன்மைகள் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முன்னடைவு மட்டம் கவனத்திற் கொள்ளப்படுவதால் உத்தேச நடத்தைகளை மேம்படுத்த உதவும்.

2. இந்த மதிப்பீட்டின் மூலம் மாணவர்கள் இடையறாது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

3. மாணவரை மையமாகக் கொண்ட கற்றல் சூழ்நிலையின் பால் கற்றல்- கற்பித்தல் செயன்முறையானது வழிப்படுத்தப்படும்.

கல்வி மதிப்பீட்டுச் செயல் முறைகள்

கற்றலின் பேறுகளாக மாணவரிடத்தே மதிப்பிட வேண்டிய மேற்குறிப்பிட்ட அம்சங்களின் தன்மை பொறுத்து பல்வேறு மதிப்பீட்டுச் செயல் முறைகள் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. அடைவுப் பரீட்சை (எழுத்துப் பரீட்சை, வாய்மொழிப் பரீட்சை) கற்கும் பாடங்களில் மாணவர்கள் பெற்ற அடைவு மட்டம் தேர்ச்சி மட்டத்தைக் கண்டறிவதற்காக (அறிகைசார் புலமையின் அளவு) அடைவுப் பரீட்சை பயன்படுத்தப்படும்.

2. அவதானிப்பு மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடும்போதும், இயல்பான நடத்தையின் போதும் வெளிப்படும் நடத்தைகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். இங்கு எழுச்சிசார் புலத்தில் இடம்பெறும் பண்புகள் உளவியக்கப்புலத்தில் உள்ளடங்கும் அம்சங்கள் சமூகத் திறன்கள், ஆளுமைப் பண்புகள் என்பன அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டு மதிப்பிடப்படும்.

ஒப்படை- ஆசிரியரது நேரடியான வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மாணவரால் செயப்படும் ஒரு செயற்பாடு ஒப்படையாகும். இதன்போது மாணவர்கள் செயற்படும் விதம், அதன் பேறாகக் கிடைக்கும் ஒப்படை என்பன மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். இது தனியாள் ஒப்படை குழு ஒப்படை எனும் இரண்டு வகைகளில் செயப்படும்.

4. திறந்த நூல் பரீட்சை - இது பரீட்சையெனக் குறிப்பிடப்படினும் மனனம் செய்வதற்குப் பதிலாக நூல் புத்தகத்தை உசாவுவதன் மூலம் விடையளிக்கும் திறன் இதன்போது மதிப்பிடப்படும். மதிப்பீட்டை ஒரு கற்றல் முறையாகப் பயன்படுத்தும் செயற்பாடாகவும் சந்தர்ப்பமாகவும் அமைவது இதன் விசேட அம்சமாகும்.

5. செயற்திட்டம் - இலக்கை நோக்கிய கருத்துள்ள ஒரு செயற்பாடு செயற்திட்டமாகும். (வில்லியம் கில்பற்றிக்) கற்றலின் மூலம் பெற்ற அறிவைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு வழங்கப்படுவதே செயற்திட்டத்தின் விசேட அம்சமாகும். அறிவுசார் திறன்களுடன் உளவியக்கத்திறன்களே பெரிதும் மாணவரிடம் வெளிப்படுகின்றன. அத்துடன் சமூக திறன்களும் வெளிப்படுகின்றன. தனியாள் செயற்திட்டம் குழு செயற்திட்டம் எனும் இரு வகைகளில் மேற்கொள்ளப்படும். செயற்திட்டத்தில் மாணவர்கள் ஈடுபடும் விதம். அதன் பேறாகக் கிடைக்கும் அறிக்கை அல்லது பொருள் அல்லது காட்சி மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

6. கண்காட்சி - கற்றலை அனுபவம் மூலம் பெறுவதற்கும், அறிவைப் பிரயோகிக்கதற்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் செயற்பாடாகக் கண்காட்சி அமைகிறது. இதன்போது படைப்பாற்றல் நேர்த்தி செயலாற்றுகைத் திறன் முன்வைப்புத்திறன் என்பன மதிப்பிடப்படும். உளவியக்கத்திறன்கள், சமூகத்திறன்கள், எழுச்சிசார் பண்புகள் இச்செயன்முறையின்போது வெளிப்படுகின்றன.

7. துறைசார் சுற்றுலா களப்பிரயாணம் - தெரிவு செய்யப்பட்ட பாடப்பகுதியின் குறிக்கோள்களுக்கு அமைவாக ஆசிரியரது வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்படும் ஒரு திட்டத்தின் படி வகுப்பறைக்கு வெளியே ஓரிடத்தை நிறுவனத்தை இயற்கைச் சூழலை தொகுதியை வரலாற்று முக்கியத்துவமுடைய ஓரிடத்தை பற்றிய ஒரு கற்கையே இதுவாகும். இதன் போது மாணவர்கள் அவதானிப்பில் ஈடுபடுதல் தகவல் சேகரித்தல் அறிக்கை தயாரித்தல் என்பனவற்றில் ஈடுபடுவர். மாணவரது இச்செயற்பாடுகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

8. குழுச் செயற்பாடு: இது யாதேனும் பாடத்தின் பாடப்பகுதியில் கற்றற் குறிக்கோள் களுக்கு அமைவாக மாணவர்கள் குழுவாக தகவல் சேகரித்தல், அறிக்கைப்படுத்துதல், முன்வைத்தல், மீளாய்வு செய்தல், போன்ற செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல் மூலம் அவர்களது அறிவுசார் திறன்கள், மனவெழுச்சிப் பண்புகள், சமூகத்திறன்கள், உளவியக்கத்திறன்கள் என்வவற்றில் அவர்களது நிலை மட்டங்கள் இனங்காணப்படும்

கல்வி அளவீட்டு மதிப்பீட்டுக் கருவிகளின் வகைகள்

மாணவர்கள் கற்ற அளவையும் அதன் தரத்தையும் மதிப்பீடு செய்வதற்காக வகுப்பறையில் பயன்படுத்தத்தக்க கருவிகளை மதிப்பீட்டு கருவிகள் தரவுகளை வழங்கும் சகல கருவிகளும் மதிப்பீட்டுக் கருவிகள் என அழைக்கப்படும். மதிப்பீட்டின் நோக்கம் மதிப்பீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்தப்படும். பண்பின் இயல்புகள் என்பன பொறுத்து பல்வகைப்பட்ட மதிப்பீட்டுக் கருவிகளும் நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அக்கருவிகளைப் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. அடைவுப் பரீட்சை - ஆசிரியர்களால் இலகுவாகப் பயன்படுத்தக்கூடியவையும் உயர் நம்பகம் தகுதி ஆகிய இயல்புகளைக் கொண்டவவையும் அடைவுப் பரீட்சைகளாகும். மாணவர்களின் பாடஅறிவு மட்டம் இதன் மூலம் மதிப்பிடப்படும். இப்பரீட்சை எழுத்துப் பரீட்சை வாய்மொழிப்பரீட்சை என இரு வகைப்படும்.

2. நுண்மதிப்பரீட்சை - மாணவர்களின் நுண்ணறிவுத் திறன்கள் இப்பரீட்சை மூலம் மதிப்பிடப்படும். சிந்தனை என்பன சில நுண்ணறிவுத் திறன்களாகும்.

3. உளச்சார்புப் பரீட்சை ஒருவரது உள்ளார்ந்த இயலுமைகளைக் கண்டறியும் பரீட்சை இதுவாகும். இப்பரீட்சைக்காக விசேட வினா உருப்படிகள் தயாரிக்கப்படும்.

4. ஆளுமைப் பரீட்சை ஆளுமைப் பண்புக் கூறுகளைக் கொண்ட அவதானிப்புப் பட்டோலையைப் பயன்படுத்தி வகுப்பறையிலும் பாடசாலை வளவிலும் மாணவரது நடத்தையை அவதானிப்பதன் மூலம் ஆளுமையை மதிப்பிடலாம். ஆளுமையின் ஒரு தெள்ளத்தெளிவான அம்சமாக மனப் பாங்குகள் இடம்பெறுவதால் அதனை மதிப்பிடுவதற்காக மனப்பாங்குச் சோதனைகள் (Attitude Test) பயன்படுத்தப்படும்.

5. அவதானிப்புப்படிவம் மாணவர்கள் குழுவாக அல்லது தனியாக யாதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் வேளையில் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் நடத்தைகள் எந்தளவுக்கு வெளிக்காட்டப்படுகின்றன. என்பதை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவி அவதானிப்புப் படிவமாகும்.

6. செவ்வைபார்ப்புப் பட்டியல் - யாதாயினும் ஒரு செயற்பாட்டில் மாணவர்கள் ஈடுபட்டிருக்கும் போது அவர்கள் வெளிக்காட்டுவதாக எதிர்பார்க்கப்படும் நடத்தைகளைப் படிமுறையாக சரியாக வெளிக் காட்டுகின்றனரா இல்லையா என்பதைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தும் கருவி செவ்வைபார்ப்புப் பத்திரமாகும் இதன் மூலம் பெரும்பாலும் உளவியக்கத்திறன்களே மதிப்பிடப் படுகின்றன.

7. தரவரிசை அளவிடை (Rating Scale) மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவர்கள் வெளிக் காட்டும் நடத்தைகளுக்கும், செயற்பாட்டின் பேறு அல்லது விளைவுகளுக்கும் தர அளவுப்பிரமாணங்கள் வழங்குவதே தரவரிசை அளவிடையின் அடிப்படை யாகும். குறிப்பிட்ட செயற்பாட்டில் மாணவர்களின் நடத்தை வெளிப்பாட்டு மட்டங்கள் அல்லது பேறுகளின் மட்டங்கள் இங்கு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். உளவியக்கத்திறன்கள், சமூகத் திறன்கள் மனவெழுச்சிப பண்புகள் ஆளுமைப் பண்புகள் என்பன மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். தரவரிசை கீழ்வருமாறு மூன்று நிலைகளில் வழங்கப் படலாம்.

I **மூன்று தர வரிசை அளவுத்திட்டம் (**Three points scale)
**தரவரிசை விளக்கம் புள்ளி**

1/A மிகநன்று 3

2/B நன்று 2

3/C குறைவு 1

II **நான்கு தர அளவுத்திட்டம் (**Four points scale)

தரவரிசை விளக்கம் புள்ளி

1/A மிகநன்று 4

2/B நன்று 3

3/C குறைவு 2

4/D மிகக்குறைவு

III **ஐந்து தர அளவுத்திட்டம் (**Five points scale)

தரவரிசை விளக்கம் புள்ளி

1/A மிகநன்று 5

2/B நன்று 4

3/C சராசரி 3

4/D குறைவு 2

5/E மிகக்குறைவு 1

மாணவர்கள் வெளிப்படுத்த வேண்டிய நடத்தைகளை நியதிகளாகக் கொண்டு ஒவ்வொரு நியதிகளுக்கும் தரவரிசை வழங்கப்படும். வழங்க வேண்டிய புள்ளிகளை விரும்பியவாறு தேவைக்கேற்ப தீர்மானித்து நூறுக்கு மாற்றிக் கொள்ள முடியும்.

**கல்வி மதிப்பீட்டின் பயன்கள்**

கல்வித்துறையோடு தொடர்புடைய பல்வேறு துறையினர்க்கு கல்வி மதிப்பீடு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் மூலம் கிடைக்கும் பயன்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர்களுக்கான பயன்கள்**

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது ஆசிரியர் பல்வேறு தீர்மானங்களை எடுக்க வேண்டியவராவார். அத்தகைய பின்வரும் தீர்மானங்களை எடுப்பதற்கு ஆசிரியருக்கு மதிப்பீடு துணையாக அமையும்.

1. கற்பித்தலை ஆரம்பிப்பதற்குத் தேவையான அறிவும் திறன்களும் எந்த அளவுக்கு மாணவரிடம் காணப்படுகின்றன எனத் தீர்மானித்தல்.
2. குறித்த கற்றற் பேறுகளை அடைவதற்காக கற்பித்தலை எவ்வாறு திட்டமிடுதல் வேண்டும்.
3. பொருத்தமான கற்றல் கற்பித்தல் முறைகள் எவை?
4. மாணவரிடத்தே காணப்படும் கற்றல் இடர்பாடுகள் எவை?
5. சில மாணவர்கள் கற்றலில் அதிகமாக இடர்படுவது ஏன்?
6. எனது கற்பித்தலின் இறுதியில் மாணவர்கள் எந்த அளவுக்கு உத்தேச கற்றற் பேறுகளை அடைந்துள்ளனர்.
7. மாணவர்கள் பெற்றுள்ள அடைவு மட்டத்துக்காக அவர்களுக்கு வழங்க வேண்டிய தரமட்டம் யாது?
8. மாணவரது அடைவு தொடர்பாக அவர்களது பெற்றோர்களிடம் கூறவேண்டியவை யாவை?
9. எனது கற்பித்தல் எந்த அளவுக்கு வினைத்திறனுடையது? எந்த அம்சங்களில் குறைபாடுடையது?

**மாணவர்களுக்கான பயன்கள்**

1. மாணவர்கள் தமது பணியில் ஈடுபடுவதற்கான ஒரு ஊக்கியாகவும் பின்னூட்டலாகவும் மதிப்பீடு தொழிற்படுவதால் அவர்களிடத்தில் உயர் வினையாற்றல் ஏற்பட வழிவகுக்கும்.
2. மதிப்பீட்டின் மூலம் மாணவர்கள் தமது அடைவு மட்டத்தை விளங்கிக் கொண்டு சுயமதிப்பீட்டில் ஈடுபடவும் தமது தோல்விகளைக் குறைத்துக் கொள்வதற்கான வழிவகைகளைத் தாமே அமைத்துக் கொள்ளவும் வழி ஏற்படுகிறது.
3. மாணவர்கள் தமது முயற்சியின் முக்கியமான படி ஒவ்வொன்றிலும் தமது முன்னேற்றத்தை அறிவதால் ஏற்படும் மனத்திருப்தி சுயஊக்கியாகத் தொழிற்பட வல்லது.
4. தமது அடைவு மட்டத்தை வகுப்பில் அல்லது குழுவில் ஏனைய மாணவர்களின் அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.
5. தனது தவறுகளை உடனுக்குடன் திருத்திக் கொள்ளவும் அதன் மூலம் கற்றலில் முன்னேறவும் வாய்ப்பு கிடைக்கிறது.
6. பரீட்சைகளும் மதிப்பீடும் மாணவரைக் கற்றலின் பால் வழிப்படுத்தும்.

**கல்வித்திட்டம் சார்ந்தோருக்கான பயன்கள்**

கலைத் திட்டத்தைத் திட்டமிடுவோர், கல்வி முகாமையாளர்கள், ஆராச்சியாளர்கள், கொள்கை வகுப்போருக்கு, கல்வி மதிப்பீடு பின்வரும் வகையில் பயன்படுகிறது.

1. மதிப்பீடானது கலைத்திட்ட அபிவிருத்திக்குப் துணையாகிறது. கலைத் திட்டத்தினதும் கற்பித்தல் சாதனங்களினதும் செயன்முறைகளினதும் மறுசீரமைப்புக்கும் விளைதிறன் மேம்பாட்டிற்கு மதிப்பீடு துணையாகிறது.
2. கற்றல்- கற்பித்தல் செயன்முறையின் பலவீனங்கள் கல்வி முகாமையாளர்களின் கவனத்திற்கு உள்ளாவதால் ஆசிரியர் அபிவிருத்தி நடவடிக்கைகளை அதற்கேற்ப திட்டமிட வழிகோலப்படும்.
3. மதிப்பீட்டினூடாக கல்வி ஆராச்சியாளர்கள் கல்வி வேலைத்திட்டங்களின் பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு தரவிருத்திக்கான பரிகார வழிகளை பிரேரிக்கச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
4. பெருந்தொகையானோரின் கல்வி முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதன் மூலம் கிடைக்கும் தகவல்கள் கல்விப் பிரச்சினைகளை இனங் கண்டு கொள்வதற்கும் கல்விக் கொள்கைகளை மறுசீரமைப்பதற்கும் புதிய கொள்கைகளை வகுப்பதற்கும் துணையாகும்.
5. கல்வி ஆராச்சியாளருக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும் ஆராய்ச்சி மூலம் கற்றல்- கற்பித்தல் செயன்முறையின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பயன்படுகிறது.

**பெற்றோருக்கான பயன்கள்**

1. மதிப்பீட்டின் மூலம் கிடைக்கும் விளக்கத்தினூடாக பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்கு துணையாக அமைகிறது.
2. பெற்றோர் தமது பிள்ளைகளின் அடைவு மட்டத்தை அறிந்து கொள்வதனூடாக மேற்படிப்புக்கான துறையையும், அவர்களது கல்வியையும், தொழிலையும், திட்டமிடுவதற்குக் கல்வி மதிப்பீடு பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளவியலாளர் ஜெம் சேமர் புறூணரின் கருதுகோள் ஆராயச்சி முடிபு அல்ல

**கலாநிதி கோணமலை கோணேசபிள்ளை**

B.ED. (First Class Hons.); M.A.; M.Sc.; ED.D.; PH.D

**'கோட்பாட்டுப் பின்புலம்: எந்தப் பாடத்தையும் எந்தப் பிள்ளைக்கும் எத்தகைய விருத்தி நிலையிலும் வினைத்திறனுடன் கற்பிக்க முடியும்'**

**இது உளவியலாளர் ஜெறோம் எஸ். புறூனருடைய நாற்பது ஆண்டு கால ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட ஆதாரபூர்வமான முடிவு.**

இது ஆராய்ச்சி முடிபு அல்ல. இது ஒரு கருதுகோள்.

உலகப் பிரசித்தி பெற்ற உளவியலாளர் ஜெறோம் சேமர் புறூணர் (Jerome Seymour Bruner) 1915 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் தேதி ஐக்கிய அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் பிறந்தார்.

தனது பட்டப் படிப்பை டியூக் பல்கலைக்கழகத்தில் (Duke University) ஆரம்பித்து 1937 ஆம் ஆண்டு பீ.ஏ. பட்டம் பெற்றபின் உலகப் பிரசித்தி பெற்ற ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் (Harvard University) சேர்ந்து உளவியல் கற்று 1939 இல் கலை முதுமாணிப் பட்டத்தையும் 1941 இல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். கலாநிதிப் பட்டத்துக்காக பெலிங்கிறன் நாடுகளின் வானொலி ஒலிபரப்பின் உளவியல் பகுப்பாய்வு என்னும் தலைப்பில் ஆய்வுகளை நடத்தி ஆய்வறிக்கை சமர்ப்பித்தார். (His doctoral this was entitled "A Psychological Analysis of International Radio Broadcasts of Belligerent Nations")

இவரது ஆய்வு, ஹாவாட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய புகழ் பெற்ற உளவியலாளர் பேராசிரியர் கோர்டன் ஓல்போட் (Gordon Allport) அவர்களின் மேற்பார்வையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் காலப் பகுதியில் இப் பேராசிரியரின் உதவியாளராக பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

இதன்பின் அமெரிக்கப் படையில் துப்பறியும் குழுவிலே பணியாற்றி 1945 ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் ஹாவாட் பல்கலைக்கழகத்தில் அவரோடு பணியாற்றிய லியோ போஸ்ட்மன் (Leo Postman) என்பவருடன் இணைந்து, ஊக்கல், தேவைகள், எதிர்பார்ப்புகள் என்பன



அகக் காட்சியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை ஆராய்ந்தார். இந்த ஆய்வு அகக் காட்சி பற்றிய அறிவை புதிய பாதையில் செலுத்தியதாகக் கருதப்படுகிறது. தொடர்ந்து சிந்தனை தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டு ஜே.ஜே. குட்னவ், ஜி.ஏ. ஒஸ்ரின் ஆகியோருடன் இணைந்து ஏ இஸ்ர டி ஓவ் திங்கிங் (A Study of thinking) 'சிந்தனை பற்றிய ஆய்வு' என்னும் நூலை 1956 இல் வெளியிட்டார். தொடர்ந்து அறிகை தொடர்பாக ஆய்வுகளில் கவனம் செலுத்தினார். ஆரம்பத்தில் அப்போது பிரபல்யம் அடைந்திருந்த சுவிஸர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியலாளர் ஜீன் பியாஷேயின் (Jean Piaget) ஆய்வுகள் இவரது ஆய்வுகளில் செல்வாக்குச் செலுத்தின. பின்னர் ரஷ்ய உளவியலாளர் வைகொட்ஸ்கியின் ஆய்வுகளின் அடிப்படையில் மேலும் தனது ஆய்வுகளை மேற்கொண்டார். வைகொட்ஸ்கி கருதியது போல் பிள்ளைகள் பிறரோடு ஈடுபாடு வைத்திருத்தல் கருத்துப் பரிமாறல் ஆகியன கற்றல் செயற்பாட்டுக்கு மிக முக்கியம் என்பதையும் ஜீன் பியாஷே கருதியது போல் பிள்ளைகளின் தனியான செயற்பாடுகள் பிள்ளைகளின் தன்மயமாக்கலுக்கும் தன்னமைவாக்கலுக்கும், ஏற்கனவே அமைந்துள்ள அறிகை அமைப்புகளைக் கட்டி எழுப்புவதற்கு உதவுகின்றன என்பதையும் அவர் உணர்ந்தார்.

புறூணரின் அறிகை தொடர்பான ஆய்வுகளும் இந்த ஆய்வுகளில் இருந்து கல்வி தொடர்பான சிந்தனைகளும் இவருக்கு சர்வதேச ரீதியான செல்வாக்கை ஏற்படுத்தின.

ஐக்கிய அமெரிக்காவில் விஞ்ஞானக் கல்வியை விருத்தி செய்வதற்காக அமெரிக்க காங்கிரஸ் தேசிய விஞ்ஞான நிதியத்தை (National Science Foundation) என்னும் அமைப்பை 1950 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. இதன் தலைவராக பேர்டு பல்கலைக்கழகத்தின் பௌதிகப் பேராசிரியர் றன்டல் உவேலி நியமிக்கப்பட்டார். இதன் ஊடாக விஞ்ஞானக் கல்வி, கணிதக் கல்வி ஆகியவற்றின் மேம்படுத்தல் தொடர்பான செயற்பாடுகளுக்கு நிதி வழங்கப்பட்டது. இந்த நிதியத்தின் நிதியுடன் இலனோய் பல்கலைக்கழகம் (University of Illinois) கணிதக் கல்விப் பேராசிரியர் மக்ஸ் வேமன் (Max Berman) அவர்களின் தலைமையில் இலினோய் பல்கலைக்கழக கணிதச் செயல்திட்டத்தை 1951 இல் ஆரம்பித்தது. இந்த செயல் திட்டம் 9- 12ஆம் வகுப்புகளில் கற்கும் மாணவர்களை மையமாகக் கொண்டு இயங்கியது. இதன் செயற்பாடு, செல்வாக்கு அடையத் தொடங்கியதும் அதைத் தொடர்ந்து 1953 இல் தேசிய விஞ்ஞான நிதியம் கோடை கால கணித மேம்பாட்டு வகுப்புகளை கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நடத்தியது. அமெரிக்காவில் உள்ள கலைக் கல்லூரிகள் முதல் நிலைப் பட்டப் படிப்பை நடத்தி வருகின்றன. மசூசெற்ஸ் இன்ஸ்ரிரியூட் ஒப் ரெக்னோலோஜியில் பௌதிகவியல் பேராசிரியராக பணியாற்றிய ஜெரோல்ட் சச்சரியாஸ் 1940 இன் பிற்பகுதியில் இருந்து 1955 வரையும் தேசிய பாதுகாப்புக் கல்வி நெறியை நெறிப்படுத்தினார். அப்போது சோவியற் ரஷ்யா தனது அதி சிறந்த கல்வி முறையால் இத்துறையில் பெரும் நன்மை அடைந்துள்ளதாக அறிந்தவற்றை நினைவில் இருத்தி, இதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக முன் கல்வி நிலையில் பௌதிகவியல் கற்பதையும், கற்பித்தலையும் மேம்படுத்துவதற்கு அறிவுறுத்தக்கூடிய சாதனமாக திரைப் படங்களை உருவாக்க முயன்றார்.

இவர் அமெரிக்காவில் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பௌதிக விஞ்ஞானங்களில் கலைமாணி, முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்று பின்னர் பௌதிகவியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவரது சிந்தனை பௌதிகவியல் கற்பதையும் கற்பித்தலையும் மேம்படுத்துவதற்கு அறிவுறுத்தக்கூடிய சாதனமாக திரைப் படங்களை உருவாக்க முயன்றார்.

இவர் அமெரிக்காவில் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பௌதிக விஞ்ஞானங்களில் கலைமாணி, முதுகலைமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றுப் பின்னர் பௌதிகவியலில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். இவரது சிந்தனை பௌதிகஇயல் ஆய்வுக் குழு என்னும் அமைப்பை 1956இல் உருவாக்க உதவியது. இந்தக் குழு பாடசாலை பௌதிகவியல், பௌதிகவியல் தொடர்பான பாடவிதான அபிவிருத்திப் பணிகளில் முன்னெடுத்துச் சென்று விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கு முயற்சி எடுத்தது.

தேசிய விஞ்ஞான நிதியம், கல்லூரி புகுமுக பரீட்சையின் கணிதத்தின் தரத்தை ஆராய்வதற்கு 1955 இல் ஓர் ஆணைக்குழு நியமித்தது. இவ்வாறு பாடசாலைக் கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் மேம்பாடு செய்யும் முயற்சியில் ஐக்கிய அமெரிக்கா ஈடுபட்டிருக்கும்போது ரஷ்யா 1957 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ஆம் தேதி இஸ்புட்னிக்கை விண்வெளிக்கு அனுப்பி சந்திரனில் இறங்க வைத்த வியத்தகு சாதனையைப் படைத்தது. இந்த சாதனையைக் கண்ட அமெரிக்க அரசியல் வாதிகளும் விஞ்ஞானிகளும், கல்வியியலாளர்களும், உளவியலாளர்களும், பேராசிரியர்களும், ரஷ்யா விஞ்ஞானத்தில் முந்திச் செல்கின்றது என்றும் அமெரிக்க விஞ்ஞானக் கல்வி மேம்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்றும் குரல் எழுப்பினார்கள், இதன் பிரதிபலிப்பாக இலினோய் பல்கலைக் கழகத்தில் இயங்கிக் கொண்டிருந்த கணிதத் செயல்திட்டத்தில் பணியாற்றிய பேராசிரியர் டேவிட். ஏ. பேஜ் (David A. Page) என்பார் காணகி நிதியத்தின் (Carnegie Foundation) உதவியுடன் இலினோய் பல்கலைக்கழகத்தில் (University of Illinois) எண்கணித செயல்திட்டத்தை ஆரம்பித்தார். இவர் இதே பல்கலைக்கழகத்தில் இயங்கிக் கொண்டிருந்த கணித செயல் திட்டத்தின் தலைவரான பேராசிரியர் வெவமன்னின் (Beberman) உதவியாளராக இருந்து அனுபவம் பெற்றவர்.

இதனைத் தொடர்ந்து இதே ஆண்டில் பாடசாலை கணிதக் கல்வி ஆய்குழு (School Mathematics Study Group) உருவாக்கப்பட்டது. இக்குழுவுக்கு யேல் பல்கலைக்கழகத்தின் (Yale University), கணிதப் பேராசிரியர் எட்வேட் வீகில் (Edward G. Begle) தலைவராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றினார். அப்போது தேசிய விஞ்ஞான நிதியத்தால் மிக அதிக நிதி வழங்கப்பட்ட செயல்திட்டக் குழு இதுவேயாகும். இக் குழு பாலர் வகுப்புத் தொடக்கம் 12ஆம் வகுப்புக்குரிய அதாவது அமெரிக்க கல்வி முறையில் பாடசாலைக் கல்விக்குரிய 'புதிய கணிதப் பாடத்திட்டத்தை' வெளியிட்டு நூல்களையும் எழுதி வெளியிட்டது. இதே காலத்தில் கல்லூரி புகுமுக பரீட்சை தொடர்பான ஆணைக்குழுவும் 'புதிய கணிதம்' தொடர்பான மாற்றத்தை ஆதரித்து கருத்தை வெளியிட்டது. அதாவது பாடசாலை மட்டத்தில் கற்பிக்கப்படாத ஆனால் பல்கலைக்கழக மட்டத்தில் கற்பிக்கப்பட்ட சில கணிதப் பகுதிகளை பாடசாலை கணித பாடத்தில் சேர்க்கப்பட்டன. இதனால் சில அடிப்படை கணித செயல்கள் விடுபட்டன. கேத்திர கணிதம் முக்கியத்துவம் பெறவில்லை. இந்த சூழ்நிலையில் கணித கல்வியியலாளர் மத்தியில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன.

பிரபல கணித விற்பன்னரும், கணித வரலாற்று நிபுணரும் நியுயோக் பல்கலைக்கழக (New York University) கணிதப் பேராசிரியருமான மொறிஸ் கிளையின் (Professor Morris Kline) த. மதமற்றிக்ஸ் ரீச்சர் (The Mathematics Teacher) என்னும் சஞ்சிகையில் பாடசாலைக் கணிதத்தில் புதிய கணிதத்தைப் புகுவதை எதிர்த்து ஒரு காரசாரமான கட்டுரையை வெளியிட்டார். இதே வேளை புதிய கணிதத்தை ஆதரித்து ரஜ்ஜெஸ் பல்கலைக்கழக (Rutgers University) பீடாதிபதி பேராசிரியர் அல்வேர்ட் மெட்லர் (Albert E. Medler) இதே சஞ்சிகையில் ஒரு கட்டுரையை வெளியிட்டார். இந்த சூழ்நிலையில் கணித சமூகம் இரு எதிரான கருத்துடைய குழுக்களாக செயற்படத் தொடங்கியது. 'புதிய கணிதத்தை' பாடசாலைக் கல்வியில் இணைப்பதில் கருத்து வேறுபாடு இருந்தாலும் அமெரிக்க விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கு நாடளாவிய திட்டம் வகுக்கப்படல் வேண்டியது அவசியம் என்னும் கருத்தில் விஞ்ஞானிகள் மத்தியிலோ அல்லது கல்வியியலாளர் மத்தியிலோ வேறுபாடு இருக்கவில்லை.



இதே வேளையில் விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் சச்சாரியாஸ், அமெரிக்காவில் பாடசாலை நிலையில் கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான திட்டமொன்று அமைதல் வேண்டும் என்னும் கருத்தை தனது நண்பரும் அப்போது தேசிய விஞ்ஞானங்கள் கல்வி நிலையத்தின், கல்வி அலுவலகத்தின் பணிப்பாளராக பணியாற்றிய பேர்டியு பல்கலைக்கழக பௌதிகவியல் பேராசிரியர் றண்டல் உவேலியிடம் முன் வைத்தார். இதை ஏற்றுக் கொண்ட பேராசிரியர் உவேலி, தேசிய விஞ்ஞான நிதியத்தோடு இணைந்து விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டையிட்டு ஆராய்வதற்கு ஓர் உயர்மட்ட கருத்தரங்கை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டார். இந்த கருத்தரங்கு அமெரிக்காவில் உள்ள மசசூசெற்ஸ் மாகாணத்தில் அமைந்துள்ள வூட்ஸ் கோள் (Woods Hole) என்னும் இடத்தில் ஓசனியோகிறபிக் இன்ஸ்ரிரியூட்டில் (Oceano graphic Institute), 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்றது. அப்போது அமெரிக்காவில் வாழ்ந்த சிறந்த விஞ்ஞானிகள், கல்வியியலாளர்கள், உளவியலாளர்கள் கணித மேம்பாட்டு முயற்சியில் ஈடுபட்டிருந்த பேராசிரியர்கள், விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டு முயற்சிகளில் ஈடுபட்டிருந்த பேராசிரியர்கள், சரித்திரப் பேராசிரியர்கள், மருத்துவ பேராசிரியர்கள், பரீட்சை நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 34 பேர் அழைக்கப்பட்டனர். பத்து நாட்கள் நடைபெற்ற இந்த உயர்மட்ட கருத்தரங்கை தலைமை தாங்கி நடத்துவதற்கு சர்வதேசப் புகழ் பெற்ற உளவியலாளர் ஜெறோம் புறூணர் அழைக்கப்பட்டார்.



இக்கருத்தரங்கில் புறூணர் தனது தலைமை உரையில் "We begin with the hypothesis that any subject can be taught effectively in some intellectually honest form to any child at any stage of development" என்று குறிப்பிட்டார்.

அதாவது எந்தப் பாடத்தையும் எந்த வளர்ச்சிப் படியிலும் உள்ள எந்தப் பிள்ளைக்கும், அறிவுசார் நேர்மையுடன் நற்பயனளிக்கக்கூடிய வகையில் (செயல்த் திறமையோடு) கற்பிக்கலாம் என்னும் கருதுகோளோடு நாம் ஆரம்பிக்கின்றோம் என்னும் பொருளையுடையது இக்கூற்று.

இந்த கருதுகோளை 1959 இல் முன் வைக்கும்போது புறூணருக்கு வயது 44, எனவே 40 ஆண்டு கால ஆய்வின் பின் இதைக் கூறினார் என்று கூற முடியாது. மேலும் புறூணர் நாம் இந்த கருதுகோளோடு ஆரம்பிக்கிறோம் (We begin with the hypothesis) என்று கூறும்போது இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி முடிபு அல்ல என்பது தெளிவாகிறது. எனவே அவர் தலைமை தாங்கிய கருத்தரங்கில் விஞ்ஞானக் கல்வி மேம்பாடு தொடர்பாக ஆராய்வதற்குரிய வழிகாட்டியாகவே இந்தக் கருதுகோள் அமைந்துள்ளது என்று கொள்ளலாம்.

அதாவது இக்கருதுகோள், பாலர் வகுப்பிலிருந்த பல்கலைக்கழகம் வரையும் அமையும் கற்றலுக்கு அடிப்படையான கருத்துக்களை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று கொள்ளலாமென்று பேராசிரியர் ஹெய்ரெலே கூறுகிறார்.

எனினும் இக்கருதுகோளை முன்வைத்த பின் இதை உறுதிப்படுத்துவதற்கு 40 ஆண்டுகள் ஆய்வு செய்திருந்தால் முடிபை 1999 இலே தான் வெளியிட்டிருக்க முடியும். அப்படி வெளியிடவில்லை. ஆனால் 1991 இல் நியுயோக் பல்கலைக்கழகத்தின் சட்ட கல்விப் பீடத்தில் ஆராய்ச்சி பேராசிரியராக பணியாற்றும்போது 'அக்ஸ் ஒப் மீனிங்' (Acts of Meaning) 'கருத்துள்ள செயல்கள்' என்னும் நூலை வெளியிட்டார், இது இந்த கருதுகோள் தொடர்பானதல்ல,

இக்கருத்தரங்கு ஐந்து குழுக்களாக ஒழுங்கு செய்யப் பட்டு கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன. கருத்தரங்கிலே சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள், கருத்தரங்கில் முன் வைத்த கருத்துக்கள், கலந்துரையாடல்களில் உருவாகிய முடிபுகள், பங்குபற்றியோரோடு கருத்தரங்குக்குப் பின், புறூணரின் கடிதப் போக்குவரத்துக்கள், இக்கருத்தரங்கில் புறூணர் முன் வைத்த கருத்துக்கள் ஆகியவற்றைத் தொகுத்து கல்வியின் செயற்பாடு (Process of Education) என்னும் தலைப்பில் 1960 இல் ஒரு நூலை வெளியிட்டார். இந்நூல் நான்கு அடிப்படை பிரிவுகளாக அமைந்துள்ளது, இவையாவன

கட்டமைப்பு

கற்பதற்கான ஆயத்த நிலை

உள்ளுணர்வுச் சிந்தனை

கற்றலுக்கான எண்ணம் ஆகியன.

இந்த நூல் 97 பக்கங்களைக் கொண்ட சிறிய நூல் எனினும் இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அகில உலக ரீதியாக கல்வியியலாளர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இந்நூலின் அமெரிக்காவின் கல்விக் கொள்கைகளை உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தது. உலகளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ள கற்றல், கற்பித்தல், பாட விதானத்தின் உள்ளடக்கம் முதலியவற்றையிட்டு ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டியது, மீளாய்வு செய்ய வழிவகுத்தது.

இதன் முதற் பதிப்பே 400,000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியது. மேலும் இந்நூல் 18 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இவற்றில் இருந்து இந்த நூலின் முக்கியத்துவம் புலனாகின்றது.

அறுபதுகளில் சர்வதேச மட்டத்தில் ஏற்பட்ட கல்வி தொடர்பான முன்னேற்றங்களுக்கு குறிப்பாக கணிதக் கல்வி, விஞ்ஞானக் கல்வி தொடர்பான முன்னேற்றங் களுக்கு புறூணரின் இந்த நூல் முக்கிய பங்காற்றியது. அறுபதுகளில் சகலருக்கும் கணிதக் கல்வி, சகலருக்கும் விஞ்ஞானக் கல்வி என்ற அடிப்படையிலும் பல்கலைக்கழக மட்டத்தில் கற்பிக்கப்பட்ட விடயங்கள் பாடசாலை மட்டத் திலும் மாணவர்களுக்கு ஏற்ற முறையில் கட்டமைக்கப்பட்டு கற்பிக்கலாம் என்ற வகையில் பாடத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. இலங்கையிலும் 1964 ஆம் ஆண்டு கணிதத்தை சகலருக்கும் கற்பித்தல், புதிய பாட விதானத்தை தயாரித்தல், பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பாட நூல்களை எழுதுதல் ஆகியவை செயல்படத் தொடங்கின.

புறூணர் முன்வைத்த கருதுகோள் - ஆராய்ச்சி முடிபு அல்ல - அடித்தளத்தில் இருந்து ஆக்கபூர்வமான கல்விச் செயல்பாடுகளுக்கு சர்வதேச ரீதியாக பங்களிக்கத் தொடங்கியது என்று கருதலாம்.

## உசாத்துணை நூல்கள்:


Bruner, J.S. (1960). *Processes of Education.* Cambridge: Harvard University Press.

Bruner, J.S., Oliver, R.R. & Greenfield, P.M. (1966) *Studies in Cognitive Growth.* New York: Wiley

Bruner, J.S. (1966). *Toward A Theory of Instruction.* Cambridge: Belknap Press.

Bruner, J.S. (1991) *The Acts of Meaning.* Cambridge: Harvard University Press.

Konesappillai, K. (2010) உலகப் புகழ் பெற்ற உளவியலாளர் ஜெறோம் சேமோ புறூணர் - பேராசிரியர் க. சின்னத்தம்பி கல்விச் சேவை பொன்விழா மலர்

Matherne, B. (1999). *A Book review: The Process of Education Internet.*

Raimi, R.A. (2005). *Brief Chronology and Dramatis Personae of the New Math.* Internet.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் ஆளுமை விருத்தியும் தொடர்பாடல் திறனும்

**M.M. ஹிர்பஹரான்** (SLPS)
B.A., P.G.D.E. (Merit), D.C.Sc. (Merit), M.Ed.

பிள்ளைகளது உடலுள வளர்ச்சியோடு அவர்களது ஆளுமையும் வளர்க்கப்படவேண்டும் என இன்றைய கல்விச் சிந்தனையாளர்களும், சமூகவியலாளர்களும் எதிர்பார்க்கின்றனர். காரணம் இன்றைய வேலைத் தளங்களிலும், சமூகத்தளத்திலும் அறிவால் மாத்திரம் தலைநிமிர்ந்து நிற்பவர்களைவிட, நல்ல ஆளுமைப்பண்புகள் நிரம்பப்பெற்றவர்கள் அதிகம் வரவேற்கப் படுகின்றனர். ஒரு காலத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற, வெறும் சான்றிதழ் தகைமைகள் எதிர்பார்க்கப்பட்டு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டபோதிலும், இன்று சான்றிதலுடன் ஆளுமைப் பண்புகளையும் கொண்டவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது.


**ஆளுமை என்றால் என்ன (Personality) ?**

இலத்தீன் மொழிச் சொல்லான பர்சோனா (Persona) என்ற சொல்லில் இருந்து உருவானதே Personality எனும் ஆங்கிலச் சொல்லாகும். இதற்கு தமிழில் 'ஆளுமை' என பொருள் கூறப்படுகின்றது.

ஒருவரின் தோற்றம், உருவம், பேச்சு, நடை உடை பாவனை, இயல்புகள், பிரயாண முறை போன்ற வெளிப்புற இலட்சணங்களே சாதாரண வழக்கில் ஆளுமை எனக் கருதப்படுகின்றது. அதாவது ஒருவர் சமூகத்தில் தன்னை எவ்வாறு வெளிக்காட்டுகின்றாரோ அதுவே அவருடைய ஆளுமையாகக் சாதாரண மக்களால் கணிக்கப்படுகின்றது.

ஆளுமை என்றால் என்ன என்பதுபற்றி (G.W. ஒல்போட் 1935) குறிப்பிடும்போது/ஒருவன் தனக்கே உரித்தான ஒரு முறையில் சூழலுக்கு ஏற்றவாறு பொருத்த்தப்பாடடைகின்றான். என்பதனை அவனது உள, பௌதீக அமைப்பின் அப்போதைய ஒழுங்கமைப்பு ஆளுமையாகும் என்கின்றார்.

பல்வேறுபட்ட அறிஞர்களின் கருத்தை தொகுத்துக்கூறுவதாயின் அளுமை என்பது ஒருவரது ஒன்றிணைந்த நடத்தையாகும். அது பரம்பரை திறன்களையும், சூழலின் தாக்கத்தையும் கொண்டது.



அது அவனுடைய உடலமைப்பு, நடத்தைக் கோலங்கள் கவர்ச்சிகள், சொற்கள், சொல்லும் முறை , பலவித சூழ்நிலைகளில் வெளிக்காட்டும் தன்னம்பிக்கை மற்றும் பல்வேறு இயல்புகள் ஆகியவற்றின் முழுவெளிப்பாடாகும்.

ஆளுமைப் பண்புகள் பிறப்பிலிருந்தே நம்மோடுள்ளதா? அல்லது ஒருவரால் உருவாக்கிக் கொள்ளப்படுகிறதா? என்ற வினாக்கள் அறிஞர்களிடையே வாதப்பிரிவாதங்களை ஏற்படுத்தினாலும், நடுநிலைமை பேணுவோர் இரண்டும் கலந்தவகையில்தான் ஒருவனுடைய ஆளுமை தீர்மானிக்கப்படுகின்றது என கூறுகின்றனர். இத்தகைய ஆளுமைப்பண்புகள் ஆளுக்காள் வித்தியாசப் படக்கூடியதாகவும், விருத்திசெய்ய முடியுமானதாகவும் காணப்படுகின்றது. இதனால்தான் ஒருகாலத்தில் மோசமானவர்களாக இருந்த மனிதர்கள் பிறிதொருகாலத்தில் நல்லவனாக மாறுவதைக் காண்கின்றோம் என்கின்றனர்.

ஆளுமை வளர்ச்சியில் பங்குகொள்ளும் காரணிகள்

1. உடலியல் காரணிகள்: நரம்புத் தொகுதிகள் தொழிற்பாடு, குருதிச் சுற்றோட்டம். ஆகியன ஆளுமை வளர்ச்சியை பாதிக்கின்றன.
2. உடலமைப்பு: ஒருவருடைய உடல் வளர்ச்சிக்கமைய அவருடைய நடத்தைக் கோலங்களிலும் மாற்றம் ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


3. உளத்திறன்

4. மனவெழுச்சிகள்

5. சூழற்காரணிகள்

6. வீட்டு வாழ்க்கை முறை

7. நாளமில்லாச் சுரப்பிகள் : உதாரணம்: தைரொய்ட்சின் மிகையாகச் சுரந்தால் கோபம்வரும்.



8. தன்நம்பிக்கை (Self Confidence)

9. நேர்க்கணிய சிந்தனை ( Positive Thinking)

10. தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளல் (Learning from Failures)

11. சுயநலமற்ற சேவை (Selfless Service)

போன்றவை ஒருவரில் சிறந்த ஆளுமையை உருவாக்குவதில் பாதிப்புச் செலுத்துகின்றன.

**சிறந்த ஆளுமை என்பது என்ன?**

இதற்கு விடையளிப்பது கடினமாயினும், சிறந்த ஆளுமை சமூகத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது. ஒருவருடைய ஆளுமை அவனுடைய உடலியல், உளவியல் திறன்களிலும் தங்கியுள்ளது. உயிரியல் காரணிகள் சமூகச் சூழல் காரணிகளுடன் கொண்ட இடைவினையின் விளைவாகவே ஆளுமைக் கோலம் உருவாகிறது. பிறருடன் சுமுகமான தொடர்புகளைக் கொண்ட பிள்ளைகளின் ஆளுமைப்பண்புகள் பற்றி ஆய்வுகள் நடாத்தப்பட்டன. இப்பண்புகள் நேர்மை, இரக்கம், முகமலர்ச்சி, தாராள மனப்பான்மை, அடக்கம், கீழ்படிவு, நம்பிக்கை, கவர்ச்சி மற்றும் சிறந்த தொடர்பாடல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

சிறந்த ஆளுமை உருவாக்கத்திற்கான அணுகுமுறைகள்.

- இலக்கைத் தீர்மானித்தல் - Goal Setting
- நேர முகாமைத்துவம் - Time Management
- தொடர்பாடற் திறன்கள் - Communication Skills
- தலைமைத்துவப் பண்புகள் - Leadership Qualities

மேற்படி விடயங்கள் ஒரு மனிதனிடத்தில் சரியாக அமையப் பெறுமாயின் அவன் சிறந்த ஆளுமைப் பண்புடையவனாகத் திகழ்வான் என்பதில் ஐயமில்லை.

இங்கு நாம் கவனத்திற்கு கொண்டுவரும் விடயம் மாணவர்கள் தங்களை சிறந்த ஆளுமையுடையவர்களாக மாற்றிக்கொள்வதற்கு எவ்வாறான தொடர்பாடல் திறன்களைக் கொண்டிருக்கவேண்டும், அவற்றை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும்.

**தொடர்பாடல் திறன்** (Communication Skills)

தொடர்பாடற் திறன் என்பது தலைமைத்துவப் பண்புகளில் முதன்மையானதும் முக்கியமானதுமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. பொதுவாக இப்பண்பு , மாணவர்கள் தங்கள் ஆளுமையை விருத்தி செய்துகொள்வதற்கு இன்றியமையாதது. குறிப்பாக மாணவத் தலைவர்களுக்கும், ஏனைய தலைமைத்துவப் பதவி வகிக்கின்ற மாணவர்களுக்கும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. தொடர்பாடல்களில் ஏற்படும் தடங்கல்கள், தவறுகளினால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானவை. தகவல்கள் வழங்கும்போது சரியான முறையில் வழங்காவிட்டாலும், அதனைப் பெற்றுக்கொள்ளும்போது சரியான முறையில் பெற்றுக்கொள்ளாவிட்டாலும் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்புகளுண்டு. ஆதலால் இவற்றைத் தவிர்த்து, நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள தொடர்பாடற் திறன் இன்றியமையாததாகும்.

ஒருவரின் ஆளுமையை விருத்தி செய்வதற்கும், ஒரு காரியத்தை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கும் தொடர்பாடல் திறன் மிக இன்றியமையாததாகும். தொடர்பாடலில் முக்கிய மூன்று தோற்றப்பாடுகள் காணப்படுகின்றன.

1. தகவல்களைப் பெறல்

2. தகவல்களை சேமித்து மீளப் பயன்படுத்துதல்

3. தகவல்களை வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல்களைப் பெறல்**

தொடர்பாடல் திறனில் தகவல்களைப் பெறல் முக்கியமான ஓர் அம்சமாகும். தகவல்களைப் பெறும்போது அல்லது உள்வாங்கும்போது அவற்றை முழுமையாக விளங்கிக்கொள்ள பல்வேறுவகையான நுணுக்கங்களை அவதானிக்க வேண்டும். தகவல் பரிமாற்ற நிகழ்வு வாய் மொழியாகவோ, எழுத்தாகவோ, அல்லது சமிக்ஞையாகவோ இருக்கலாம். அவதானக் குறைவானது தகவல் மறந்து போவதற்கும், ஞாபகத்தில் பதியப்படாமல் விடுபடுவதற்கும் காரணமாக அமைகின்றது.

நீங்கள் பெற்றுக்கொள்ளும் தகவல் மறக்காது அல்லது ஞாபகத்தில் பதியப்படாமல் விடாது என்பதை உறுதி செய்ய இருவழிமுறைகள் உள்ளன.

1. குறிப்பெடுத்தல்: தகவல்களைப் பெறும்போது முக்கியமான தகவல்கள் (Key Information) எனக் கருதப்படுபவற்றை எப்பொழுதும் குறித்துக்கொள்ள வேண்டும்.
2. செவியுற்றதிலிருந்து நீங்கள் எதை விளங்கிக். கொண்டீர்கள் என்பதை திரும்பக்கூறுதல்.

இவ்வாறு தகவல்களை பெறும்போது இடம்பெறும் தொடர்பாடல் சிறப்பாக அமையவேண்டுமானால் தகவல்களைக் கூறுபவர் சுதந்திரமாகப் பேசுவதற்கு சந்தர்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பின்வரும் அம்சங்கள் பேசுபவர்கள் சுதந்திரமாகப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

- உடம்பை சற்று முன்னால் வளைத்தல், கவனத்தை நன்கு செலுத்தல், குறிப்பெடுத்தல் மற்றும் இதுபோன்ற செயற்பாடுகள் மூலம் ஆர்வத்தை வெளிப்படுத்துதல்.
- புதிய கருத்துக்களையும் சிந்தனைகளையும் பேசுபவர் வெளிப்படுத்தும்போது Superb!, Wow!,Excellent!, போன்ற வார்த்தைகளைக்கூறி ஆர்வத்தோடு வரவேற்றல்.
- கண்தொடர்பைப்பேணல் (Keep eye contact) பேசுபவரின் கண்ணைப் பார்த்தவாறே செவிமடுத்தல்.
- புன்முறுவல் செய்தல், அமைதியாகவும், ஆறுதலாகவும், Friendly யாகவும் இருத்தல்.
- பேசும்போது தொடர்பறாதவாறு கவனத்துடன் காதுகொடுத்தல்.

**தகவல்களை சேகரித்தலும் மீளப் பெறுதலும்**

நீங்கள் பெற்றுக்கொண்ட தகவல்கள் பின்னர் பயன்படுத்தத் தேவைப்படும்போது மீட்டவேண்டி ஏற்படலாம். தகவல்களைச் சேமித்து மீளப்பெறுவதற்கு இன்று பலவழிமுறைகள் காணப்படுகின்றன. கணனிகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். எந்த மொழியை பயன்படுத்துகிறீர்கள் என்பது முக்கியமாகக் கருதப்படுவதில்லை தகவல் சேமிக்கவும், தேவையானபோது மீட்கவும் பல நுட்பங்களைப் பயன்படுத்தலாம். குறிப்பெடுத்தல், மனனம்செய்தல், ஒலி. ஒளிப்பதிவுசெய்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.



**தகவல்களை வழங்குதல்**

தகவல்களை வழங்கும்போது முடியுமானளவு ஐம்புலன்களையும் பயன்படுத்த முயற்சியுங்கள். வழங்கப்படுகின்ற தகவல்கள் உரியவரை சரியான முறையில் சென்றடைய பின்வரும் அம்சங்கள் துணைசெய்கின்றன.

**தெளிவாகப் பேசுதல்**

- ஒவ்வொருவரும் விளங்கிக்கொள்ளும் மொழியைப் பயன்படுத்துங்கள்.
- தொனியை உயர்தியும் தாழ்த்தியும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அமைத்துக்கொள்ளுங்கள்.
- குறிப்பாச் சொல்ல நாடும் விடயத்திற்கு அழுத்தம் கொடுங்கள்.
- அட்டவணைகள், வரைபடங்கள் வரிப்படங்கள் போன்றவற்றை காட்சிப்படுத்தி விளக்குங்கள்.
- செவி மடுப்பவரின் கண்கள் மற்றும் நெற்றிப்பகுதியை பார்த்துப்பேசுங்கள். இவை தவிர இன்னும் பல வழிமுறைகளைப் பயன்படுத்தி தகவலை இலகுபடுத்தி யாவரும் விளங்குபடி செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைப் பொறுத்தவரையில் தொடர்பாடல் திறன் என்பது அவசியம் வளர்த்துக்கொள்வேண்டிய ஆளுமைப் பண்புகளில் ஒன்றாகும். வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்த விடயங்களைத்தவிர பாடப்பரப்புக்கு வெளியிலும் பல கட்டளைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்குவர். இவற்றை ஒழுங்கான முறையில் செவிமடுத்து சேமித்து தேவையானபோது மீட்டிப்பார்த்தும், தேவையானபோது மீளப்பயன்படுத்தும் போது அங்கு சிறந்த ஆளுமை வளர்கின்றன. சரியான முறையில் செவிமடுக்கத் தவறும்போது வேண்டப்பட்ட காரியம் சரியாக நிறைவேறாமல் பிழைத்து விடுவதுடன், ஒருவிடயத்தை உனக்குச் சொன்னால் அது உனக்கு உடனே விளங்க மாட்டாது அதனை சரியாகச் செய்யவுமாட்டாய் என்ற ஆசிரியரின் பேச்சுக்கு ஆளாவதுடன், பிற்காலத்தில் இது மாணவர்களின் ஆளுமையில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தி சமூகத்திலிருந்து ஒதுக்கப்படவும் காரணமாவும் அமையலாம்.

மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள், மற்றும் ஏனைய பொறுப்புக்களில் உள்ள மாணவர்களும் ஏனைய உயர் பொறுப்புக்களில் உள்ளவர்களிடமிருந்து தகவல்களை சரியான முறையில்பெற்று அதன்படி ஒழுகத் தவறின் அங்கு ஒழுக்காற்று, மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட ஏதுவாக அமைந்துவிடும். இவற்றிலிருந்து தவிர்த்துகொள்ள தொடர்பாடல் திறன் என்ற ஆளுமைப் பண்பை மாணவர்கள் அவசியம் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

பெறுகின்ற தகவல்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள எப்போதும் தம்முடன் சிறிய குறிப்புப் புத்தகத்தை வைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாகும். கட்டளைகள், மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்போது ஏதாவது தகவல்கள் விளங்காவிட்டால் அல்லது மயக்கம், குளப்பம் காணப்பட்டால் அந்த இடத்தில் தமது சந்தேகங்களை கேட்டுத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். பிழையாக விளங்கி தவறாகக் காரியமாற்றுவது ஆளுமை விருத்துக்கு உகந்ததல்ல. பாடசாலையில் நீங்கள் பல பொறுப்புக்களை வகிக்கலாம். உங்களுக்கு தலைமைத்துவப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கலாம். இச்சந்தர்பத்தில் மேலிடத்தில் வருகின்ற உத்தரவுகளையும், தகவல்களையும் உங்களுடைய சில தீர்மானங்களையும் உங்களுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களுக்கு வழங்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். நீங்கள் தகவல்களை வழங்கவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். நீங்கள் தகவல்களை வழங்கும்போது அமைதியாகவும், ஆறுதலாகவும், நிதானமாகவும், தெளிவாகவும் பேசுங்கள். தேவைப்படும்போது அட்டவணை, மரவரிப்படங்கள், வரைபடங்கள், மற்றும் இது போன்ற தகவல்களை இலகுபடுத்தக்கூடிய அம்சங்களைப் பயன்படுத்துங்கள். இதற்காக Bristol Board, Art Board, Poster Paper, போன்றவற்றையும்; Multi Media, Over Head Projector போன்ற நவீன சதனங்களையும் பயன்படுத்லாம்.

**பேசும்போது**

பேசும்போது குறைவாகப் பேசுவதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். பலர் உரையாடும்போது அனாவசியமாக நீண்ட நெடி விளக்கங்கள் கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர். ஆள் மனதில் தங்கியிருக்கும் தாழ்வு மனப்பான்மை அல்லது பாதுகாப்பின்மை போன்ற உணர்வுகள் இதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

அளவுக்கதிகமாகப் பேசுவது ஒரு குறையாகும். ஆனால் அளவுக்கதிகம் என்பதை எந்த அளவு கோலைக்கொண்டு நிர்ணயிப்பது என்ற கேள்வி எழலாம். மேடைப் பேச்சென்றால் இங்கும் கொஞ்சம் பேசமாட்டாரா என்று பிறர் நினைக்கும் நேரத்தில் முடிக்கவேண்டும் என்பர். பொதுவாக குறிப்பிட்ட இடத்திற்கும் சந்தர்பத்திற்கும் ஏற்றவாறு போதுமான தகவல்களையும் விடயங்களையும் மாத்திரம் பேசவேண்டும் நிறையப் பேசினால் நம் கூற்று மட்டுமல்லாது நம் ஆளுமையும் சிதைந்து போகும் அபாயம் ஏற்படுகிறது. இது தவிர நம் பேச்சு செல்லும் திசை நமது கட்டுப்பாட்டிலிருந்து விலகி ஏதோ பேசி வம்பில் கொண்டுவிடும் அபாயம் ஏற்படுகிறது.

குறைவாகப் பேசுபவர்கள்மேல் எப்பொழுதும் ஏனையோர் தன்னை அறியாமல் ஒருவித அச்சம் கலந்த மரியாதையுடன் அணுகுவார்கள். அதிகமாகப் பேசப் பேச ஏதாவது முட்டாள்தனமாகப் பேசிவிட ஏதுவாகும். ஒவ்வொரு சொல்லும் நம் முழுக்கட்டுப்பாட்டுடனும் நம் சிந்தனை அடிப்படையில் முடிவு செய்யப்பட்டும் வெளிவரவேண்டும். அதுபாட்டுக்கு வழிந்தோடும் நீர்க்குழாய் போலக் கொட்டக்கூடாது.

முக்கியமான தகவல் பரிமாறுவதற்காக கூட்டப்பட்ட கூட்டத்தில் தேவையற்ற விடயங்களை அளவுக்கதிமாகப் பேசும்போது எது தேவைானது எது தேவையற்றது என்ற விடயத்தில் செவிமடுப்பவர்கள் குழம்பிவிடுவர். எனவே அளவாகப் பேசி ஆளுமைவளர்க்க முயற்சிக்கவேண்டும். மாணவப் பருவத்தில் வளர்த்துக்கொள்ளும் இவ்வாறான ஆளுமைப்பண்புகள் பாடசாலை வாழ்க்கையுடன் முற்றுப் பெறுவதில்லை. சமூக வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என அனைத்திலும் தாக்கம் செலுத்துகிறது. எனவே தொடர்பாடற் திறனை வளர்த்து முழுமையான ஆளுமையை விருத்தி செய்ய முயற்சிப்போம். இதற்கான பயிற்சிகளையும், சந்தர்ப்பங்களையும் வழங்க வேண்டிய பொறுப்பு அதிபர்கள், ஆசிரியர்களுக்குமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் நலன்களைப் பேணுதலும் பாதுகாத்தலும்

**சொ. அமிர்தலிங்கம்**

*ஆளுநரின் செயலாளர்*

*கிழக்கு மாகாணம்*

நமக்குக் கிடைத்த மனிதவளங்களுள் விலை மதிப்பற்ற வளமாக சிறுவர்கள் காணப்படுகின்றனர். எனவே இவர்களுக்கு அன்பு, ஆதரவு கொடுக்க வேண்டியது எம்மவரது கடமையாகும். இவர்களை நல்ல ஆரோக்கியமானவர்களாக, சமூகத்தில் ஒருவராக, எதிர்காலச் சவால்களைச் சந்திக்கக் கூடியவர்களாக, மன உறுதிபடைத்தவர்களாக, தன்னம்பிக்கை, ஆக்கபூர்வமான மனப்பாங்கு, துணிவு, விடாமுயற்சி என்பவற்றுடன் திடகாத்திரமுடையவர்களாக வழிநடத்த வேண்டிய பொறுப்பு எம்மனைவருக்கும் உண்டு. சிறுவர்கள் பெற்றோருடன், குடும்பத்துடன், ஆசிரியர்களுடன், சிநேகிதர்களுடன், சமூகத்துடன் இணைந்து வாழக்கூடியவர்களாகவும், வளமான சூழலில் வாழக்கூடியவர்களாகவும் ஏற்ற சந்தர்ப்பத்தை உருவாக்குவது எம்மைப் பொறுத்தது. எதிகால உலகம் இன்றைய சிறுவர்களில் தங்கியள்ளது. எனவே சிறுவர் நலன்களைப்பேணுவது எம் ஒவ்வொருவரது கடமையும் பொறுப்புமாகும்.

இன்று உலகில் பல நாடுகளிலும் அமைதியற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. எங்கு பார்த்தாலும் வன்செயல்கள், மோதல்கள், தகராறுகள், யுத்த நெருக்கடிகள் மிகுந்து காணப்படுகின்றன. இலங்கையிலும் கடந்த முப்பது வருடங்களாக யுத்த சூழ்நிலை, மோதல்கள் காணப்பட்டு அமைதியின்மை தலைதூக்கியிருந்தது. இப்படியான சூழ்நிலை சிறுவர்களின் மனதையும், அவர்களின் வளர்ச்சியையும் பாதித்தது. அச்சம், பயந்த சுபாவம், தாழ்வு மனப்பான்மை, பிறரில் நம்பி இருக்கும் நிலைமை என்பன சிறுவர்களின் மனதில் எழுந்த வண்ணமிருக்கின்றன. சிறுவர்கள் பெரியோரால், சமூகத்தால் மிரட்டப்படுகிறார்கள். எனவே தாமாகச் சிந்திக்கும் தன்மையை இழந்து காணப்படுகிறார்கள். சிறுவர்களுக்கு கட்டுப்பாடு தேவைதான். அது அளவுக்கதிகமாக அவர்களை சீரழிக்க வழியமைக்கக் கூடாது. சிந்திக்கும் தன்மை, கிரகிக்கும் தன்மை, தன்னம்பிக்கை, உண்மை என்பன அவர்களது எண்ணங்களாக உருவாகி அவர்களும் நாட்டில் வாழும் மனிதர்கள்தான் என்ற சிந்தனையை ஏற்படுத்த வேண்டும். இன்று சிறுவர்கள் சிறுவர் உழைப்பினாலும், கொடுமைப்படுத்துவதினாலும், பாலியல் துன்புறுத்தல்களினாலும் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியுள்ளனர். இவற்றைப்போக்கி சிறந்த சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

எனவே சிறுவர்களுக்கு வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை சமாளிக்கக்கூடிய பயிற்சியை நாம் இளமையிலிருந்தே கொடுக்க வேண்டும். உழைக்கும் உணர்வையும் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற ஆக்கபூர்வமான மனப்பாங்கையும் வளர்க்க வேண்டும். சிறுவர்களை ஒருவருக்கொருவர் ஒப்பிட்டுப் பார்ப்பது தவறானது. அவர்களிடம் தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும் விதத்தில் நாம் அணுகக்கூடாது. அவர்கள் அனைவருமே சிறந்த எதிர்காலத் தலைவர்கள். எனவே அவர்களிடம் அன்பைப் பகிர வேண்டும். சீராகக் கவனித்து வளர்க்க வேண்டும். மேலும் வீட்டுக்குள்ளும், பாடசாலைக்குள்ளும் வாழும் வாழ்க்கையை விடுத்து ஏனைய சமூகத்தினருடன், நண்பர்களுடன் வாழவும் சந்தர்ப்பமளிக்க வேண்டும். சிறுவர்கள் ஏதாவது திறம்படச் செய்தால் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். சுயமாக இயங்கப் பழக்க வேண்டும். அவர்களது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து ஊக்குவிக்க வேண்டும். பிள்ளைகளின் திறமைகளை அவதானித்து அவற்றை மேலும் வளர்க்க வழி செய்ய வேண்டும்.

### சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்

உலகில் பிறக்கும் 1/3 பிறப்புக்கள் பதிவு செய்யப்படுவதில்லை எனவே இதன்மூலம் உரிமை மறுக்கப்படுகிறது. சுகாதார வசதிகள், கல்வி வசதி என்பன மறுக்கப்படுகின்றன. தடுப்பூசி மூலம் தடுக்கக்கூடிய நோய்களினால் கூட வசதியற்ற சிறுவர்கள் மரணமடைகின்றனர். 5 வயதுக்குட்பட்டவர்களில் 20 சதவீதத்தினர் இன்று சுகாதார வசதியின்றி அவதியுறுகின்றனர். 1980ம் ஆண்டு உலகக் கணக்கெடுப்புத்தகவல்களின் படி 'ஷிளீஸ்' வைரஸ் தாக்கிய இரண்டு இலட்சம் சிறுவர்கள் பிறந்துள்ளனர். 1992ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபிரிக்காவில் ஷளீஸ் வைரஸ் பாதித்த 2 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பிறந்துள்ளனர். இவர்கள் சுகநலமற்றவர்களாக வாழ நேரிடுகிறது. மேலும் ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பின் ஆய்வுப்படி பத்து மத்திய, தென் ஆபிரிக்க நாடுகளில் மட்டும் 5 வயதுக்குட்பட்ட 7 மில்லியன் சிறுவர்கள் எயிட்ஸ் நோயினால் பலியாகியுள்ளனர். இப்படி உலகளாலிய ரீதியிலும் சிறுவர்கள் தான் அதிகமாக எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகள் போஷாக்கின்மையாலும் ஊட்டச்சத்து குறைபாட்டாலும் வாடுகின்றனர். இவர்களில் 50 சதவீதத்தினர் ஆப்கானிஸ்தான், பங்காளதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை போன்ற நாடுகளில் வாழ்கிறார்கள் 100 மில்லியனுக்கு அதிகமான சிறுவர்கள் அடிப்படை ஆரம்பக்கல்வி மறுக்கப்பட்டள்ளனர். சிறுவர்களுக்கு கல்வி கற்கும் உரிமை அடிப்படையான ஒரு உரிமையாகும். தரம் வாய்ந்த கல்வியைப் பெற இது வழிவகுக்கிறது. எனவே இப்படி கல்வி உரிமையை அளிக்க வேண்டியது அரசின் கடமை. உறுதி செய்வது சமுதாயத்தின் பொறுப்பாகும். எனவே கல்வி கற்கும் சிறுவர்கள் சுகநலம், போஷாக்கு, சுகாதாரம், பாதுகாப்பு ஆகிய சேவைகளையும் பெற வேண்டும். வளர்முக நாடுகளில் வறுமை, போஷாக்கின்மை, பஞ்சம், உடல்நலகுறைபாடுகள் மற்றும், யுத்தம், அகதி வாழ்வு, அடக்குமுறைகள் என்பன சிறுவர்களை நலிவடையச் செய்துள்ளன. இவற்றிலிருந்து சிறுவர்களை மீட்டெடுத்து உரிய இடத்தை அளிப்பதும் அவர்களது உடல் உள வளர்ச்சிகளிலும், ஆக்கபூர்மான மனப்பாங்கிற்கு வழிவகுப்பதும் நம் அனைவரதும் கடமையாகும். எனவே சிறுவர்களுக்கு அன்பு, ஆதரவு, பாதுகாப்பு என்பன சமுதாயத்தில் வாழும் சகலரதும் ஒத்துழைப்போடும் வழங்கப்பட வேண்டியவையாகும். விரோத மனப்பான்மையையும், குரோத எண்ணங்களையும் விடுத்து இன்றைய சிறுவர்களின் விடிவிற்காக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். யுத்தம் காரணமாக ஆப்கானிஸ்தானில் பசி, நோய்கள், எழுத்தறிவின்மை, சிறுவர் உழைப்பு, படைகளில் சேவையாற்றல் போன்றவற்றில் ஈடுபட்டு சிறுவர்கள் தமது வாழ்வை அழித்துள்ளனர். பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமபாத்தில் 200,000 அகதிகள் வந்துசேர்ந்தனர். அதில் அரைவாசிப்பேர் சிறுவர்களாவர். மேலும் ஆப்கானிஸ்தானில் 95 சதவீதமான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை என ஐக்கிய நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இன்று தெருவோரரு பிச்சைக்காரர்களாகவும் பிள்ளைகள் மாற்றப்பட்டுள்ளனர். இப்பிள்ளைகள் மிக வறிய குடும்பத்தினைச் சேர்ந்தவர்கள். உழைப்பிற்காக இவர்கள் பிச்சை எடுக்கின்றனர். சிலர் பிச்சை எடுத்து தமது குடும்பச்சுமையைக்கூடச் சுமக்கின்றனர். மேலும் சிலர் வர்த்தக நோக்கத்தில் பிள்ளைகளை பிச்சையெடுக்க வைத்து சம்பாதிக்கின்றனர். அவர்களுக்கு கூலி கொடுத்து தொழில்புரிய வைத்துள்ளனர். பிச்சை எடுக்கும் சிறுவர்களுக்கு சம்பளம் வழங்கி ஊக்குவிக்கின்றனர். மேலும் விபச்சார நோக்கில் உல்லாசப்பிரயாணிகள் வருவதற்காகவும் சிறுவர்களைப் பயன்படுத்துகிறார். பிரபல விடுதிகளில் விபச்சாரத்தில் இச்சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். பெரும்பாலும் இப்படியான விபச்சார நடவடிக்கைகள் மிக இரகசியமாகவே நிகழ்கின்றன. அனாதைகளாவும், சிறுவர்கள் பிச்சை எடுத்தும், விபச்சாரத்தில் ஈடுபட்டும் வாழ முற்படுகின்றனர். இவற்றையும் போக்க நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

**சிறுவர் தொழிலாளர்கள்**

இன்று உலகில் வறுமை காரணமாக சிறுவர்கள் உழைக்கும் தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட 250 மில்லியன் சிறுவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இன்று சிறுவர்கள் தொழிலாளாராக பணிபுரிவது மாத்திரமன்றி இவர்கள் சுரண்டப்படுகின்றனர். இந்தச் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் செயலானது உலகளாலியாரீதியில் சமூக பொருளாதர பிரச்சினையாக உருவாகியுள்ளது. 1900ம் ஆண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் போது சிறுவர்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பொருளாதார நலன் கருதி பயன்படுத்தப்பட்டனர். உலகில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள 250 மில்லியன் சிறுவர்களில் 120 மில்லியன் சிறுவர்கள் முழுநேர வேலைபுரிகின்றனர். இப்படியாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களில் 61 சதவீதத்தினர் ஆசியாவிலும், 32 சதவீதத்தினர் ஆபிரிக்காவிலும், 7 சதவீதத்தினர் இலத்தின் அமெரிக்காவிலும் பணிபுரிகின்றனர். இந்தியாவில் 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட 55 மில்லியன் சிறுவர்கள் உழைக்கிறார்கள். பெண் பிள்ளைகளில் அதிகமானோர் வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறார்கள். ஆய்வுகளின் படி சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதால் உடல் உள தாக்கங்களை பெண் பிள்ளைகளுக்கே கூடுதலாக ஏற்படுத்துகிறது. இவர்கள் குடும்பத்திலிருந்து பிரக்கப்பட்டு பல வன்முறைகளுக்கு உட்பட்டுள்ளனர். இப்படியாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்த வறுமை, யுத்தம், அகதி வாழ்வு என்பன காரணமாக அமைகின்றன. சர்வதேச தொழில் ஸ்தாபனம் 1919ம் ஆண்டு சிறுவர் வேலைக்கு அமர்த்துவதை தடைசெய்து சட்டமாக்கியது. 1997ம் ஆண்டு சிறுவர் உழைப்பு தொடர்பான மகாநாடு ஒஸ்லோவில் நடைபெற்றது. இதில் நோர்வே பிரதமரான யெல் மக்னே பொன்லிக் என்பவர் குறிப்பிடும்போது சிறுவர்கள் அதிகளவில் வேலைக்கு அமர்த்தப்படுவதன் காரணம் வறுமையே என கூறினார். வறியவர்கள் தான் கல்வி கற்க முடியாது அவதியுறுகின்றனர். இலங்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வயதுக்கட்பட்ட சிறுவர்கள் வேலைக்கு அமர்த்த முடியாது என சட்டமிருந்தும் சிறுவர் தொழிலாளர்கள் பலர் பதிவு செய்யப்படாது தொழில் புரிகின்றனர்.

**சிறுவர் உரிமை தொடர்பாக சர்வதேசப் பிரகடனங்கள்**

1924ல் ஜெனிவாவில் சிறுவர் உரிமைப்பிரகடனம் உருவாக்கப்பட்ட போதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1948ல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தில் சிறுவர் உரிமையைப் பாதுகாகக்க ஒழுங்குகளிருந்தது. 1959ல் ஐக்கய நாடுகள் பொதுச்சபையினால் சிறுவர் உரிமைப்பிரகடணம் உருவாக்கப்பட்டது. 1989ல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் உரிமை பற்றிய சமவாயம் உருவானது. இச்சமவாயத்தை 1991ல் இலங்கை பின்னுறுத்தி சிறுவர்பட்டயம் என்பதனை உருவாக்கியது. 2000ம் ஆண்டில் அரசியலமைப்பின் அடிப்படையில் உரிமைகளில் சிறுவர் உரிமைகளும் சேர்க்கப்பட்டிருந்தன. இவ்வாறாக சிறுவர்கள் உரிமைகள் தொடர்பாக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

**சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம்**

இன்று சிறுவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். சிறுவர் துஷ்பிரயோகங்கள் பல வழிகளிலும் நடைபெறுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையானது 1989.11.20ம் திகதி சிறுவர் உரிமைச்சாசனம் ஒன்றைப்பெற்றது. இது 1991ம் ஆண்டில் இலங்கையிலும் உறுதி செய்யப்பட்டது. இந்த சாசனத்தின் முக்கிய அம்சங்களாக உயிர் வாழ்வதற்கான உரிமை, முழு ஆற்றலை அபிவிருத்தி செய்ய வாய்ப்பளித்தல் உள, உடல் ரீதியாக ஊனமுற்றவர்கள், அனாதைகள், சிறுவர்-தொழிலாளர்கள், பாலியல் ரீதியாக துன்பப்பட்டடோர் போன்றவர்களுக்குப் பாதுகாப்பளித்தல், கருத்து வெளிப்பாடு, சமயம், தகவல் பரிமாற, தம் உரிமைகளை பேணல் என்பன உள்ளன. மேற்கூறிய உரிமைகள் மறுக்கப்படின் அவற்றை சிறுவர் துஷ்பிரயோகம் எனக்கூறலாம். ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனப்படி சிறுவர்களின் உரிமைகளை மீறுதல் சிறுவர் துஷ்பிரயோகமாகும். சிறுவர் உரிமைச்சாசனத்தில் 54 சரத்துக்கள் உள்ளன. அதில் 1 முதல் 42 வரையுள்ள சரத்துக்கள் சிறுவர் உரிமை தொடர்பாக உள்ளன.

**சிறுவர் உரிமை தொடர்பான இலங்கைச் சட்டங்கள்**

தண்டனைச் சட்டக் கோவை (1995ம் ஆண்டு 22ம் இலக்க சட்டம், 1998ம் ஆண்டு 29ம் இலக்கச் சட்டம்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரச் சட்டம், பராமரிப்புச் சட்டம், சிறுவர் இளம் பராயத்தினர் பெண்கள் தொழிற் சட்டம், தொழிற்சாலைக்கட்டளைச் சட்டம், சிறுவர் இளம் பராயத்தினர் கட்டளைச்சட்டம், சிறுவர் இளம் பராயத்தினர் (தீங்கு மிக வெளியீடுகள்) சட்டம், வேலையாட்கள் விசேடபடிகள் சட்டம், ஆபாச வெளியீடுகள் கட்டளைச்சட்டம், தொழிலாளர்கள் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டம், சிறுவர் மகவேற்புச் கட்டளைச் சட்டம் என்பன இலங்கையில் சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனினும் இந்த வன்செயல் நிகழ்வுகள்பற்றி முறையிடுபவர்கள் மிகக்குறைவாகவே உள்ளனர். தங்களது பெயருக்கு குந்தகம் ஏற்படும் என்ற அச்சத்தில் அல்லது பயம் காரணமாக பெரும்பாலோர் முறைப்படுவதில்லை. எனவே இப்படியான வன்செயல்கள் ஏற்படும் போது முறைப்பாடு செய்ய அவர்களுக்கு ஆலோசனை கூறுவது மிக அவசியமாகும்.

**தண்டனைச்சட்டக்கோவை /குற்றவியல் கோவை**

இந்த தண்டனைச் சட்டக்கோவை சிறுவர் தண்டனைகளைக் குறிக்கின்றது. இதில் 18 வயதுக்கு குறைந்த அனைவரும் சிறுவர்கள் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அரசாங்க குற்றவியல் கோவையிலும் திருத்தங்கள் செய்யப்பட்டுளளன. இந்தக் குற்றவியல் கோவையில் 18 வயதுக் குறைந்தவர்கள் தொடர்பான குற்றச் செயல்கள் எவை எனவும் அவற்றிற்குரிய தண்டனைகளும் விளக்கப்பட்டுள்ளன. குற்றவியல் சட்டக்கோவையில் ஆறாம் பிரிவில் தண்டனைகள் எவை எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் பாராளுமன்றத்தில் கூட இன்று சிறுவர் பாதுகாப்புக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சார்க் நாடுகளிடையேயும் சிறுவர் பாதுகாப்புக்கட்டமைப்புக்கள் உள்ளன. இலங்கையின் சட்டங்களில் ஏற்பட்ட திருத்தங்களின் படி சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டோரை பிடியாணை எதுவுமின்றி கைது செய்யலாம். மேலும் பிணை வழங்காதும் தடுக்கலாம். குறைந்த பட்சத்தண்டனையாக 2 வருடங்களுக்குக் குறையாமலும் 5 வருடங்களுக்கு மேற்படாமலும் சிறைத்தண்டனை விதிக்கலாம். குற்றவியல்கோவை 1955ம் ஆண்டு 22ம் இலக்க திருத்தச் சட்டத்தில் 286m என புதிய பிரிவு உட்புகுத்தப்பட்டுள்ளது. இதில் சிறுவர்கள் ஆபாசப் படங்களில் தோன்றுவதற்கு அல்லது ஆபாசத் தொழில்களில் அமர்த்தப்படுவதற்கு, உபயோகிக்கப்படுவதற்கு, தூண்டுவதற்கு குற்றமாகக் கருதித் தண்டிக்க இடமுண்டு. மேலும் ஆபாசப்படங்களை விற்றல், விநியோகித்தல், உடைமையில் வைத்திருத்தல் என்பனவும் குற்றமாகக் கருதப்படும்.

**சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

1998ம் ஆண்டு 50ம் இலக்கச் சட்டத்தின் வாயிலாக சிறுவர் பாதுகாப்பிற்காக இலங்கையில் தேசிய அதிகார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை சட்டமூலம் உருவானது. இச்சட்டமூலமானது சிறுவர் பாதுகாப்பை முன்னிலைப்படுத்துகிறது. இதன்மூலம் பிச்சை எடுக்கும் தொழில் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆபாச வேலைகளில் ஈடுபடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. தகாத முறையில் உறவாடல் தடைசெய்யப்பட்டுள்ளது. வேலைக்கு அமர்த்துதல் தடைசெய்யப்பட்டள்ளது. போதைப்பொருட்களை கொண்டு சென்ற விற்றல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதன் மூலம் சிறுவர் உரிமைகள் பாதுக்கப்பட்டுள்ளன. எனினும் இது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைப்பது அரிது. மேலும் பலர் இரகசியமாகவே துஷ்பிரயோகங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். இந்தச் சபையின் பணிகளாக சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க அரசுக்க ஆலோசனை வழங்கல், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க தேசியக்கொள்கைக் கேற்ப சட்ட, நிருவாக சிபாரிசுகளைச் செய்தல், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க சமுதாயத்தில் விழிப்புனர்வு ஏற்படுத்துதல் என்பனவே முக்கியமானவையாகும். இலங்கையில் ஜனாதிபதி செயலணிக்குழுவினரும் அமைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் காலத்திற்குக் காலம் சிபார்சுகளைச் செய்வர். இச் சிபாரிசுக்கள் அரசாங்கத்தினால் கவனத்தில் கொள்ளப்படும்.

### பெற்றோர், ஆசிரியர், பெரியோரின் பங்களிப்பு

சிறுவர் பருவமானது உடல், உள சமூக ரீதியாக வளர்ச்சியடையும் பருவமாகும். எனவே சிறுவனானவன் தன்னைச் சூழ்ந்துள்ளவற்றை புரிந்து கொள்ளவும், எதிர்க்கால வாழ்விற்கு தன்னைத் தயார்ப்படுத்தவும், கல்வி கற்று பெரியோனாக வளர முற்படும் காலமாகும். இந்தக் காலத்தில் அவனுக்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியது பெற்றோர், ஆசிரியர், பாதுகாப்பாளர்களின் முக்கிய கடமையாகும். கள்ளங்கபடமற்றவர்களாக சிறுவர்கள் வாழ்கிறார்கள். எனவே இவர்கள் தம்மைச்சுற்றியுள்ளோரின் நடத்தை, செயல்முறைகளை அவதானிக்கின்றனர். அதன்படி பின்பற்றவும் முற்படுகின்றனர். எனவே பிள்ளைகளின் வளர்ச்சியில், பெற்றோர், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள் ஊக்குவிப்பவர்களாக இருக்க வேண்டும். பணிவு. பண்பு, நன்நடத்தை என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். உண்மையான சிறுவர்களாகப் பழக்க வேண்டும் வஞ்சனை எண்ணங்களை மனதில் விதைக்கக் கூடாது. மாறாக ஆக்கபூர்வமான மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும். தன்னம்பிக்கையைப் புகுத்த வேண்டும். அறிவுள்ள விடயங்களை எடுத்துரைத்து அறிவாளிகளாக்க வேண்டும். இப்படியாக பெரியோர்கள் பிள்ளைகளின் ஆளுமையை வளர்க்க உறுதுணையாக இருக்க வேண்டும். பிள்ளைகள் நல்ல செயல்களைச் செய்யும் போது பாராட்டியும், தீய செயல்களைச் செய்ய முற்படும் போது கண்டித்தும் திருத்த வேண்டும். சிறுவர்கள் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டு தோறும் 10 இலட்சம் சிறுவர்கள் உலகில் பாலியல் வர்த்தகத்திற் குட்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிறுவனம் கூறுகிறது. தாய்லாந்து நாட்டில் 80,000 சிறுவர்கள் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் 30,000 சிறுவர்கள் இவ்வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். 1986 – 1993ம் ஆண்டுகளுக்கிடையில் கொலம்பியாவில் 8 முதல் 13 வயது வரையிலான சிறுவர்களுக்கான பாலியல் வல்லுறவுக் கோரிக்கையானது 500 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. பெரும்பாலும் சிறுவர்கள் தமது குடும்ப கஷ்டநிலை காரணமாகவே இதில் ஈடுபடுகின்றனர்.

சிலர் பணத்திற்கும் வெகுமதிக்கும் ஆசைப்பட்டு பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 1989ம் ஆண்டு 187 உலக நாடுகள் உடன்படிக்கை ஒன்று செய்தன. இதில் சட்டவிரோத பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகும். பிள்ளைகளின் பாதுகாப்பும் அடங்கும். இன்று அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு, அவுஸ்திரேலிய ஆகிய சில நாடுகளில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான நாடுகளில் தண்டனைகள் இருந்தும் அவற்றைக்கடைப்பிடிப்பதில்லை. எமது நாட்டில் சிறுவர் விபச்சாரமும் இன்று நடைபெற்று வருகிறது. வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள் பலர் துன்புறுத்தலுக்குள்ளாயுள்ளனர். இன்று உல்லாசப் பயணிகள் சிறுவர் துஷ்பிரயோகத்திற்காக இலங்கை, பிலிப்பைன், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு பெருந்தொகையாகப் படையெடுக்கின்றனர். இவற்றை இல்லாதொழிக்க பெரியோராகிய நாம் முக்கிய பங்காற்ற வேண்டும்.

எனவே உலகில் ஏன்? இலங்கையில் கூட பல்வேறு சிறுவர் அதிகாரசபைகள், சட்டங்கள், திருத்தங்கள் இருந்துங்கூட சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெறுகின்றன. எனவே பெற்றோர் ஆசிரியர்கள், சுற்றத்தார் இவர்களது நலன் கருதி இவ்ளுக்குப் புனர்வாழ்வளித்து, ஆலோசனை வழங்கி முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முன் வர வேண்டும். மேலும் எமது மனப்பாங்கை மாற்றி இவர்கள் நலனுக்குப்பாடுபட வேண்டும். இன்றைய சிறுவர்கள் எதிர்காலச் சிற்பிகள். எனவே இவர்களை உண்மையான, தன்னம்பிக்கையுடைய ஆக்கபூர்வமான மனப்பானங்குடையவர்களாக எதிர்காலத்தில் திறப்பட செயலாற்றக் கூடியவர்களாக அத்திவாரமிட வேண்டியது எம்மனைவரது கடமைகளாகும். எனவே எதிர்காலச்சிற்பிகளான எமது சிறுவர்களின் வாழ்வை நாம் பலப்படுத்துவோம். வாழ்க! வளர்க! சிறுவர்களது ஆற்றல்கள், திறமைகள், மனப்பாங்குகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒதுக்கப்பட்ட மூவர்

செ. ரூபசிங்கம்
BSc. Dip in Ed M. Ed.

இவ்வாக்கம் கதையா கட்டுரையா அல்லது வேறெந்தவிதமான ஒன்றுமா என்பதை வாசகர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். கல்வித்துறை சார்ந்த மூவரைப் பற்றிய உண்மைச் சம்வங்களது பதிவு. ஒருவர் பேராசிரியர். மற்றவர் ஆசிரியர். இன்னொருவர் மாணவர். மூவருடனும் தொடர்பான சில சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையான போதும் வெவ்வேறு காலப்பகுதிகளுக்குரியவை. எவ்வாறாயினும் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தமிழர் வரலாற்றில் பல்லவர் காலப்பகுதியை அறக்காலம் என அடையாளப்படுத்துவது வழமை. இக்கட்டுரையாசிரியனைப் பொறுத்தவரை சமகாலப்பகுதி கல்விப் புலத்திலுள்ளவர்களது மறக்காலமாகும். கௌரவம், அடக்கம், ஊனத் தொடர்புகள், ஞானத் தொடர்புகள் என்பன கருதி பேராசிரியர், ஆசிரியன், மாணவன் என்ற பதங்கள் மூலம் மேற்படி மூன்று பாத்திரங்களும் இங்கு எடுத்தாளப்படுகின்றன.

பேராசிரியரின் தந்தையார் நிலஅளவையாளர் நாயகமாகப் பதவி வகித்தவர். தாயாரினது தந்தையார் வ. மு. கனகசுந்தரம் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வித்துவான் பட்டம் பெற்று ஆதீனத்திலேயே ஆதீன வித்துவானாகப் பணிபுரிந்தவர். தமிழ்த் தொண்டன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளது ஆசிரியர். கொழும்பு தமிழ்ச்சங்க ஸ்தாபக அங்கத்தினர்களுள் ஒருவர்.

பேராசிரியர் 10. 01. 1946. அன்று மாத்தறையில் பிறந்தவர். இதற்கு இவரது தந்தையார் அக்காலப்பகுதியில் அங்கு பணிபுரிந்தமை காரணமாயிற்று. வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் 1951- 1954 வரையான ஆரம்பக் கல்வியையும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் 1955 - 1965 வரையிலான, திரு க. பூரணம்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்த காலப்பகுதியில் கனிஸ்ட சிரேஸ்ட இடைநிலைக் கல்விகளையும் கற்று 1965 இல் பேராதனைப்பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு தெரிவாகி அங்கு 1970 இல் மருத்துவமாணி சத்திரசிகிச்சை மாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். கொழும்பு தேசிய வைத்தியசாலை, தெனியாய மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் மருத்துவப் பணியைத் தொடர்ந்து 1977 இல் இலண்டன் எடின்பரோ பல்கலைக்கழக மருத்துவ நிறுவனத்தில் நரம்புசத்திர சிகிச்சைத்துறையில் உயர்கல்வியைத் தொடர்ந்து 1980 இல் FRCS பட்டத்தைப் பெற்றார்.

1981 இல் இலங்கைக்கு மீண்டு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நரம்புசத்திரசிகிச்சை நிபுணத்துவ ஆலோசகராக நியமனம் பெற்றார். இக்காலப்பகுதியில் யாழ்பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நரம்பு உடற்கூற்றியல் நரம்புசத்திரசிகிச்சை பாடங்களின் பொருட்டான வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றியிருந்தார். அக்காலப்பகுதியில் வடபகுதியில் நிலவிய சூழல்நிலமைகளால் தவிர்க்க முடியாதபடி தற்காலிகமாக இலண்டன் திரும்பி அங்கு தனது மருத்துவ சேவையைத் தொடர்ந்தார். அக்காலப்பகுதியில் Hull Royal Infirmary - இணை நரம்பு சத்திரசிகிச்சை நிபுணத்துவ ஆலோசகர் பதவியை பெற்றுப் பணிபுரிந்தார். 1997 இல் Hull பல்கலைக்கழகத்தினது மருத்துவத்துக்கான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தில் 1993 - 1997காலப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வுகளின் பொருட்டு தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இக்காலப்பகுதியில் யாழ்பல்கலைக்கழக மருத்துவபீடத்தினது இடர்மிகு நிலைமை காரணமாக பல்வேறு பகுதியினராலும் விடுக்கப்பட்ட வேண்டுகோளினை ஏற்று வருகைதரு சத்திர சிகிச்சைப் பேராசிரியராக பல்கலைக் கழகத்திலும் யாழ் போதனா வைத்தியசாலையில் நரம்புசத்திரசிகிச்சை நிபுணத்துவ ஆலோசக ராகவும் நியமனங்களைப் பெற்று கடமை புரியலானார். சத்திரசிகிச்சை, நுண்ணங்கியியல், பிணியியல், நரம்பு உடற்கூற்றியல் ஆகிய பாடங்களை போதித்தார். மேலைத்தேய மருத்துவதுறை சார்ந்த பரிணாம மாறுபாடுகளை இக்காலப்பகுதியில் அறிமுகம் செய்து அமுல்படுத்துவதில் முன்னணியில் திகழ்ந்தார். பல்வேறு பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் வகிக்கச் செய்தார். யாழ்மருத்துவ சங்கத்தினால் நடாத்தப்பட்ட மருத்துவக் கண்காட்சியில் யாழ்ப்பாணம் புதிய தரிசனங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கு காரண கர்த்தாவாக விளங்கினார். 2006 ஆம் ஆண்டு புத்தாயிரம் புதுவெள்ளம் நிகழ்வினை நடாத்திச் சேகரிக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி ஏழ்மையான மருத்துவ மாணவர்க்கு உதவும் வகையில் நம்பிக்கை நிதியத்தை ஸ்தாபித்தார்.

மக்களினதும் மருத்துவ மாணவர்களதும் நன்மைகருதி அயராது உழைத்தார். இக்காலப்பகுதியில் இலண்டனிலிருந்து CT Scanner இனை யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தருவித்திருந்தார். புதிய போதனா வைத்தியசாலையின் பொருட்டான திட்டங்களைத்தீட்டி அமுல்படுத்தும் வகையில் பல்வேறு செயற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். 1997 - 2004 காலப்பகுதியில் சர்வதேச தரம்வாய்நத 6 மருத்துவ ஆய்வுக்கட்டுரைகளை வெளியிடச் செய்தார். எவ்வாறாயினும் படிப்படியாக அப்போதைய பீடாதிபதி மற்றும் கனிஷ்ட நிலையிலான ஒரு சிலவிரிவுரையாளர்கள் சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர் போன்றவர்களால் ஓரங்கட்டப்படலானார். ஒருவிதத்தில் பொதுநலன்களின் பொருட்டும் சுயதேவைகளின் பொருட்டும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் ஒதுக்கப்பட்டார்.

பேராசிரியர் மருத்துவ மாணவர் மனங்களில் பதிந்தவர். அவர்கள் வாழ்வுகளில் கலந்தவர். மரியாதையும் மதிப்பும் மிக்க மாணவர் குழாத்தை கட்டி எழுப்பியவர். இது இவர் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தை நிர்மாணிப்பதற்காக யாழ்பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் சென்ற பின்னர் பிராந்திய பத்திரிகைகளில் வெளிவந்த தொடர் கட்டுரைகளாலும் கடிதங்களாலும் வெளிப்படுத்தப்பட்ட விடயமாகும்.

தொடர்ந்து கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக சுகாரதார மருத்துவ பராமரிப்புபீட ஸ்தாபிதத்தின் பொருட்டான பணிகளில் ஈடுபட்டு உழைத்தார். நேரடியாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம்தான் கொண்டிருந்த தொடர்புகளையும் செல்வாக்குகளையும் பயன்படுத்தி பீடத்திற்காக உருவாக்கிக் கொண்ட ஆளணிகளின் பொருட்டான அங்கீகாரங்களைப் பெற்றிருந்தார். அதன் பதில் பீடாதிபதியாக பணிபுரிந்திருந்தார். ஆனால் அங்கிருந்தும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் ஒதுக்கப்பட்டார். இக்காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது அங்கத்தவராக 2006 மார்ச் மாதத்தில் நியமனம் பெற்றார். இலங்கையினது சகல பல்கலைக்கழகங்களதும் நிர்வாக நடைமுறைகளுடன் தொடர்பான பணிகளில் ஈடுபடவேண்டிய நிலைமை உண்டானது. 2006 மேமாதமளவில் திடீரென நோய்வாய்ப்பட்டார். அற்ககோல் சாராத ஈரலழற்சியினால் பீடிக்கப்பட்டார். இந்நோய்க்கான பிரதான காரணிகளுள் ஒன்று பணிரீதியான அழுத்தங்களால் உருவாகும் தகைப்பாகும். இலங்கை தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இலண்டன் சௌதம்டன் பெரியாஸ்பத்திரியில் 2006 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நினைவு திரும்பாமலேயே அமைதியாக இவ்வுலகவாழ்வை நீத்தார். ஆக மொத்தம் 60 ஆண்டு காலப்பகுதியே இவரது வாழ்வுக் காலமாகும்.

இவரது வாழ்வில் முகிழ்த்த இனிய கனவொன்று குடும்பப் பொறுப்புக் காரணமாகவும் சமூகப் பின்னணியினாலும் கருகியதுண்டு. திருமணநாளில் மலர் கொண்டு மாலை தொடுத்தவன் இனிவரவுள்ள பகுதியில் இடம் பெறும் ஆசிரியன். இல்லறம் நல்லறமாகத் தொடர்ந்தது. அதில் தழைத்த மகள் தந்தையைப் போலவே ஒரு மருத்துவ சத்திரசிகிச்சை நிபுணர். மகன் இரசாயனவியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்.

ஆசிரியன் தந்தையார் ஒரு சாதாரண இலிகிதர். தாயாரினது தந்தையார் அதே வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்களே. எனவே மேற்படி பேராசிரியர் குறித்த ஆசிரியனுக்கு ஒன்றுவிட்ட சகோதரர். ஆரம்பக் கல்வி சிங்களத்திலானது. இடைநிலைக்கல்வியின் பிரதான பகுதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பெறப்பட்டது. தற்போதைய பல்கலைக்கழக அனுமதி தொடர்பான விவகாரம் போல 1979 இலும் தேசிய உயர்கல்விச் சான்றிதழ் க. பொ. த உயர்தரம் என்ற இரண்டு வெவ்வேறு பரீட்சைகள் காரணமாக மருத்துவ பீடத்திற்கான அனுமதி வாய்ப்பு கைநழுவிப்போன போதும் மூன்றாம் நிலைக் கல்வி பிரதானமாக பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தேசியக்கல்வி நிறுவகம் என்பனவற்றிலும் பெறப்பட்டன. பன்முகப் பரிமாணங் கொண்டவை. ஹாட்லிக் கல்லூரியிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்ற அனுபவங்கள் வாழ்வின் நிறைவுக்கும் பூரணத்துவத்துக்குமான அடிப்படைகளாயின.

24 வயதில் முதல் நியமனம். அக்காலப் பகுதியிலிருந்தே சிங்களத்தில் பெறப்பட்ட ஆரம்பக் கல்வி காரணமான தேசியரீதியிலான சமூகத்தின் அடையாளப்படுத்துகையினாலும் பணியினை வாழ்வாக வரித்துக் கொண்டமை காரணமாகவும் பொதுக் கல்வித்துறையில் தேசிய ரீதியில் சுமந்த சுமைகள் பல. நூல்களது ஆக்கம், மொழி பெயர்ப்புக்கள், பாடநூல்களது மதிப்பீடு, பாடத்திட்டங்களது வடிவமைப்பு, ஆசிரியர் கைநூல்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளது ஆக்கம் மற்றும் பல்வேறு நிறுவனங்களுடனும் இணைந்து சமூகரீதியில் மேற்கொண்ட அறிவியல் சார்ந்த வெவ்வேறு செயற்பாடுகளும் ஆய்வுகளும் இவற்றுள் சில.

குறிப்பாக விலங்கியல், உயிரியல் ஆகிய பாடங்களின் பொருட்டு 20 வருட காலப்பகுதியுள் 18 பாடநூல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல துணைநூல்களுமாக 25 இற்கு மேற்பட்டவை வெளியிடப்பட்டவை. இவற்றுள் பல நூல்கள் பதிப்புகள் பல கண்டவை. மொழிபெயர்ப்புக்களுள் 50 ற்கு மேற்பட்ட தேசியக் கல்வி நிறுவக தொலைக்கல்விப் பாடநெறி நூல்களும், பேராசிரியர்களான கந்தையா டேவிட் அருட்பிரகாசம், வை. என். அமரமாலிஜயதுங்க, எம். ஜயந்த. எஸ் விஜயரட்ண, தமரா. கே. ஹேவாபதிரண, சிரிசேன தசநாயக்க, வை. எம். விக்கிரமசிங்க போன்றவர்களது நூல்கள் முக்கியமானவை. பெரும்பாலும் சிங்களத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. தவிர தேசியக்கல்வி நிறுவக இலத்திரனியல் ஊடகத்துறையினால் சிங்களத்தில் வெளியிடப்பட்ட 14 கல்வி நிகழ்ச்சிகளும், பாடத்திட்டங்கள், ஆசிரியர் கைநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், மற்றும் தேசியக்கல்வி ஆணைக்குழுவினது பல்வேறு அறிக்கைகள் அமைச்சரவையின் பொருட்டான குறிப்புகள் போன்றவையும் மொழிபெயர்க்கப்பட்டன. இவை அனைத்துமே பரந்துபட்ட விநியோகங்களையும் கவன ஈர்ப்புக்களையும் சம்பாதித்துக் கொண்டவையாகும். குறிப்பாக தேசியக்கல்வி நிறுவக தயாரிப்புகளான இலத்திரனியல்துறை வெளியீடுகள் அனைத்தும் ஏறத்தாழ சகல தமிழ்மொழிமூல பாடசாலைகளையும் அடையச் செய்த ஆவணங்களாகும்.

கொழும்புப் பல்கலைக்கழக விலங்கியல்பீட இலங்கைப் பறவையியல் களக்கற்கைக் குழாத்துடன் இணைந்து பேராசிரியர் சரத் விமலபண்டார கொடகம, கலாநிதி தேவகே ஆகியோரது வழிகாட்டுதல்களின் கீழும் அவர்களது பங்குபற்றுதல்களுடனும் மேற்கொண்ட செயற்பாடுகள் சமூகரீதியிலானவை. சிங்கராஜா வனத்திற்கான பாடசாலைகளது விஜயங்கள் மற்றும் பறவைகளது களநிலை அவதானிப்புகளில் ஈடுபடுகின்றமை போன்றவை இத்தகைய சில முயற்சிகள். டில்மா நிறுவனம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் தேசிய நூதனசாலை இளம் விஞ்ஞானிகள் அமையம் போன்றவற்றுடன் இணைந்து மேற்கொள்ளும் கடற் பசுக்கள், வௌவால்கள், புலிமுகச் சிலந்திகள் போன்றவை பற்றிய ஆய்வு நடவடிக்கைகளுள் பல சர்தேச ரீதியிலானவை. எனினும் மன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்டவை.

பறவைகளது களநிலை அவதானிப்புச் செயற்பாடுகள் காரணமாக இலங்கை பறவையியல் களக்கற்கைக் குழாத்தினால் வெளியிடப்படும் சகல நூல்கள், கையேடுகள், சுவரொட்டிகள் போன்ற ஆவணங்கள் தமிழ்மொழியிலும் தகவல்களை தாங்கி வெளிவரலாயின. மற்றும் வடக்கு கிழக்கில் கடந்த 30 ஆண்டு காலமாக தெற்கைச் சேர்ந்த பல்கலைக்கழக ஆய்வுச் சமூகங்களது பிரசன்னமின்மை காரணமாக நிலவிவந்த இடைவெளி இல்லாமலாக்கப்பட்டுள்ளதுடன் சுற்றாடல் மற்றும் உயிர்ப்பல்வகைமை சார்ந்த பலபுதிய ஆய்வு நடவடிக்கைகட்கு வேண்டிய ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பறவைகள் தொடர்பான செவ்வை பார்த்தல் பட்டியல்களை பிராந்தியங்களின் பொருட்டு புதிதாக திருத்தியமைக்க வேண்டிய நிலைமைகள் உருவாகின. இவ்விஜயங்களின் போது பல அரிய இனங்கள் அடையாளப் படுத்தப்பட்டன. செந்தரவு அறிக்கையின் பொருட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

மும்மொழித்திட்ட அங்குரார்ப்பண வைபவத்தின் பொருட்டு இலங்கைக்கு விஜயம் செய்த முன்னைநாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களது சிறப்புரையுடன் தேசிய விஞ்ஞான விருதுகள் வழங்கும் நிகழ்வுகள் தலைநகரில் இடம்பெற்ற அதே நாளில் பல தசாப்த காலமாக குடாநாட்டுக் கல்விச் சமூகத்தினது அறிவியல் குறியீடுகளுள் ஒன்றாக திகழ்ந்து யுத்தத்தின் கோரவடுக்களால் நிலைகுலைந்து போன தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் புனருத்தாபனத்தின் பொருட்டான அடிக்கல்நாட்டும் வைபவம்கூட இடம்பெறுகின்ற நிகழ்வுவரை நகரச் செய்தது. அதேவேளை குறித்த விருது வழங்கல் வைபவத்தில் இரண்டாவது தடவையாக குறித்த ஆசிரியனுக்கு தேசிய விஞ்ஞான விருதும் கிடைக்கலாயிற்று.

சமூகரீதியில் சிறுபான்மைச் சமூகங்களது பல்கலைக்கழக அனுமதி தொடர்பான குறைபாடுகள் ஊழல்கள் முதலானவற்றின் பொருட்டு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காரணமாக இருந்தவன். 1995 புலம்பெயர்வுகளைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வுகளின் காரணமாக பல்கலைக்கழக அனுமதியின் பொருட்டான மாவட்டத்தைத் தீர்மானிக்கும் காலப்பகுதி 5 வருடத்திலிருந்து 3 வருடங்களாக குறைக்கப்பட ஆதாரமாக அமைந்தவன். பின்னர் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வழங்கிய சாட்சியத்தின் மூலம் 28 வரையிலான பல்கலைக்கழக பாடநெறிகளின் பொருட்டான அனுமதித்தேவைகளுள் ஒன்றான மேலதிக உளச்சார்புப் பரீட்சைகள் நீக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தவன். இதன்மூலம் சகல மாவட்டங்களினின்றும் சகல கற்கைநெறிகட்குமான அனுமதிக்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

மேற்படி செயற்பாடுகள் அனைத்தின் பொருட்டும் ஒருசில புத்திஜீவிகளதும் நேர்முகமான சமூகப்பார்வை கொண்டவர்களதும் அனுசரணைகளும் வாய்க்கப்படச் செய்தன. ஒருதடவை முன்னைநாள் ஜனாதிபதியினால் ஒப்படைக்கப்பட்ட பணியினை நிறைவு செய்வதற்காக குறித்த ஆசிரியனில் தங்கியிருப்பதாக கல்விஅமைச்சின் செயலாளருக்கு அப்போதைய தேசிய கல்வி ஆணைக்குழு பிரதித்தலைவர் பேராசிரியர் கந்தையா டேவிட் அருட்பிரகாசம் ஜனாதிபதியையும் குறித்த ஆசிரியனையும் குறிப்பிட்டு எழுதிய கடிதம் இன்னமும் காப்பிலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை பணிகளையும் மேலதிக பொறுப்புக்களாக சுமந்தபோதும் கால்நூற்றாண்டு கடந்த பணிவாழ்வில் என்றைக்குமே தனது ஆசிரியத்துவ காலப்பகுதியில் வகுப்பறைக்கு பிந்திப் பிரவேசித்ததில்லை. சராசரியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விடுதலைநாள்கள் வருடாந்தம் 10 - 15 வரையிலானவையே. அவையும் சுகவீனம் தவிர்க்கமுடியாத காரணங்கட்கானவை. ஆயினும் கல்விக்கட்டமைப்புகளுக்காக விடுவிக்கப்பட்ட கடமையின் பொருட்டான விடுதலைநாள்கள் வருடாந்தம் 30 - 40 நாள்களாக அமைவதுண்டு. எவ்வாறாயினும் தான்பொறுப்பேற்றுக் கொண்ட பாடத்துக்கும் மாணவர் நடத்தைகளுக்கும் தானே பொறுப்பு, அதுவகுப்பினில் நடைபெறும் கொலையேயாயினும் என்று வகைகூறல் கடப்பாட்டினை நிறைவேற்றியவன். பாடத்துடன் வாழ்க்கை நெறிமுறைகளையும் இலக்கியம், சமயம், சமூகம் எனப்பல்வேறு தளங்களையும் ஒருங்கிணைத்து கற்பிக்கவும் கற்பிக்கப்படும் எண்ணக்கருக்கள், நியதிகள், தேர்ச்சிகள் முதலானவை மாணவர்களால் உள்வாங்கப்படும் கற்பித்தல் பொறிமுறைகளையும் சேர்த்தே சொல்லித் தருபவன். வாழ்க்கையின் நெடுந்தூரம் முழுவதும் இவனுக்கு தளர் நடையாகவன்றி ஒரு குறுந்தூர ஓட்டப்போட்டியாகவே அமைந்தது. இக்காலப் பகுதியில் கேட்ட ஒருதலை ராகங்கள் பல. ஆனால் எதற்குமே பக்கவாத்தியம் வாசித்திருக்கவில்லை. ஒருதடவை வந்தமடலொன்று வரைந்தவருக்கு சுக்குநூறாகக் கிழிக்கப்பட்ட நிலையில திருப்பியனுப்படவும் செய்தது. இல்லறத்தினால் பிறந்த மூவரும் தற்பொழுது பல்கலைக்கழகங்களிலுள்ளனர்.

இவ் ஆசிரியன் பணிவாழ்வில் இரண்டு தடவைகள் ஒதுக்கப்படலானான். ஒன்று வவுனியாவிலிருந்தானது. முறைசாரா ஒழுங்கமைப்புக்களைப் போசிப்பதற்காக முறைசார் ஒழுங்கமைப்பிலிருந்த மாகாணக் கல்விப் பணிப்பாளரது தனிப்பட்ட பலவீனததைப் பயன்படுத்தி இடமாற்றம் வழங்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இவனால் கையாளப்பட்ட அத்தனை விடயங்களையும் சவால்களாக எதிர் கொள்வதற்கான அருகதையற்றிருந்த தன்மையும் ஆற்றாமையும் பலவீனங்களும் சாதியை இழுத்துத் தூற்றுமளவுக்குச் சென்றிருந்தது. இந்தக் காரணத்தினாலேயே அடுத்ததடவை அதே சாதியைச் சார்ந்தவர்களை பெருமளவாகக் கொண்டிருந்த பகுதியில் பாடசாலையினை தெரிவு செய்யலானான். அங்கும் படிப்படியாக ஸ்தாபிதமுற்று பாடசாலைச் சமூகத்திலும் அதற்கப்பாலும் முழுவீச்சினில் இயங்கலானான். இவனுடன் சேர்ந்து பாடசாலையில் துறைசார்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் ஒத்தியங்கினர். விளைவு, பாடவிதான புறப்பாடவிதான அடைவுகள் படிப்படியாக வளரச்சி கண்டு கல்விப்பெறுபேறுகள் அதியுன்னத நிலையினை எய்தலாயின. தேசியரீதியில் 30வீத ஒதுக்கீடுகளையே



கொண்டிருந்த பாடநெறியொன்றின்பொருட்டு தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் இருமாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கொண்டதுடன் வவுனியாவில் இருந்த காலப்பகுதியில் தேசியரீதியில் வவுனியா மாவட்டம் எத்தகைய தனித்துவமான பல்கலைக்கழக பாடநெறிகளது தெரிவில் பிரதிபலித்த அத்தனை பண்புகளும் மாவட்ட ரீதியில் அங்கும் வெளிப்படலாயின. இத்தகைய கட்டத்திலேயே இராணுவ ஆக்கிரமிப்பு நிறைவடைந்து போக்கு வரத்துப்பிரச்சினைகள் தீர்ந்தமை காரணமாக தூரத்துப் பச்சையாக தெரிந்த தேசியரீதியில் இறுதி நிலையிலுள்ள யாழ்ப்பாணக் கல்விக்காக சுயநலன்களுக்காக பொதுநலன்களை காவுகொடுக்கும் அதிபரது தான்தோன்றித் தனமான செயற்பாடு காரணமாக மீண்டும் ஒதுக்கப்படலானான். தவிர கொடிய யுத்தத்தின் கோரவடுக்களைச் சுமந்து நிற்கும் ஏதிலிகள் அனாதைகள் போன்றோரைச் சாக்காக கொண்டு தம்மை விருத்தி செய்து கொள்ளும் உத்தியோக பூர்வ முயற்சிகள் சிலவற்றில் இவன் இவர்களுக்கு வளைந்து கொடுக்காமையும் கூட இதற்கான காரணங்களுள் ஒன்றாகும்.

வலயக் கல்விப்பணிப்பாளர் ஏன் என்றார். சகோதர பாடசாலை வரவேற்பதற்கு ஆயத்தமாக இருந்தது. முறைசாரா கல்வி ஒழுங்கமைப்புக்களிலுள்ளவர்கள் கூட தூது வந்தனர். ஆயினும் மிகக்குறுகிய காலத்தில் அத்தனை நடைமுறைகளையும் மேவி இடமாற்றம் பெற்று வேற்று வலயத்துக்கு பாடசாலையினை கோரிச் சென்ற போது வலயக்கல்விப் பணிப்பாளர் எங்கள் வலயம் உங்களை அன்போடு வரவேற்கின்றது என வரவேற்றார். அத்துடன் இவ்வாக்கத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட மறக்காலம் தொடர்பாகவும் குறிப்பிடச் செய்தார். இத்துடன் ஆசிரியனுக்குரித்தான இப்பகுதி நிறைவுறுகின்றது.

மாணவன் இலங்கைத்தீவின் மேற்குக் கரையேயாரத்தில் அமைந்துள்ள எழில் நிறைந்த கிராமம் அவனது உதிப்பு சம்பவித்த இடம். கரையோரத்திலானதாயினும் மழை வெள்ளம் பெருமளவில் கட்டுப்பட்டு நிற்பதனால் மருதநில வயல்வெளிகள் நிறைந்த இடம். இராஜ இராஜனது தஞ்சைப் பெருங்கோயிலை நிகர்த்த கோயிலுக்கு சாசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணப்பட்ட குளத்தினை கொண்ட கிராமமாக கூட இருந்த வரலாற்றுப் பெருமை கொண்ட ஊர். அங்கு ஒரு குடும்பம். அதில் தசரத குமாரர்களை நிகர்த்த நால்வருள் இவன் இரண்டாமவன். இவர்களிடையே இராம இலட்சுமண பரத சத்ருக்கர்களை ஒத்த ஒருமைப்பாடுகளை ஒருசில வேளைகளில் வெளிப்படுத்தக் கூடியதாக இருந்ததுமுண்டு.

பாரம்பரியமானதாய் இல்லாவிடினும் இரண்டாமவனிடம் அறிவும் அருளும் பண்பும் படிப்பிலான ஆர்வமும் நிறையவே நிரம்பியிருந்தன. மூத்தவனுக்கு துணையாக பாலகன் பத்து வயதிலேயே நகரத்துப் பள்ளியின் விடுதியில் சேர்க்கப்பட்டான். இக்காலப்பகுதியிலேயே விளையாட்டாக ஒன்றுவிட்ட சகோதரனுடன் விளையாடிய வேளை கொலைமுயற்சிப் பழியும் அபாண்டமாக சுமந்து நின்றனன். ஐந்தாம் ஆண்டினில் அவனைப் புலமைப்பரிசில் பரீட்சையில் தக்க வைப்பதற்காக அவன்மீது பாசத்துடன் பாடுபட்ட ஆசிரியரது முயற்சி அரும்பொட்டினில் சறுக்கியபோதும் சிறுவனின் படிப்பின்மீதான நாட்டம் குறையவேயில்லை. பெற்ற இயல்புகளின் வளர்ச்சியாக அது தொடர்ந்தது. இதற்கு சூழலின் தாக்கம் காரணமாயிற்று. பெற்றவர்களும் கூடப் பிறந்தவர்களும் அதனைப் புரிந்து கொள்ளும் நிலையினில் இராமை சின்னவனின் துரதிஸ்டம் என்பதைத் தவிர வேறொன்றுமாக இருப்பதற்கு நியாயமில்லை.

பத்தாம் ஆண்டினில் பல்துறை ஆளுமை படிப்படியாக விருத்தியடையலாயிற்று. ஒருதடவை நாடகப்போட்டியில் தேசிய மட்டம்வரை சென்று வந்தான். படிப்படியாக பாடசாலைச் சமூகத்தின் பழிதீர்க்கும் பார்வை இவன்மீது பதியலாயிற்று. சிறுவனின் சிறிய தந்தையார் பட்ட கடனுக்காக சிறுவன் வட்டிகட்ட வேண்டிய நிலைக்காளானான். பாடசாலையின் அதிபர் முறையற்ற முறைசாரா ஒழுங்கமைப்பொன்றின் வல்லாதிக்கத்துக்கு கட்டுப்படுமாறு சிறுவனை தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்தார். பாலகனோ பரிதவித்துத் துடித்தான்.

சாதாரண தரத்தினில் மாவட்ட மட்டத்தில் ஏழாவது இடத்தினில் பல்வேறு தடைகளையுந் தாண்டி சித்தியெய்திய போதும் படிப்பின்மீதான நாட்டம் தொடர்ச்சியாக அதிகரிக்கவே செய்தது. சாதாரண தரத்தினை இரண்டாவது தடவை எழுத வேண்டியிருந்த அண்ணனையும் நெறிப்படுத்தினான். உயர்தரத்தினை திருப்பிப் படிக்கப் புறப்பட்ட தமையனை தடுத்தாட் கொண்டனன். தம்பியருக்காக மாடாக மாய்ந்தான். மணிக்கணக்கில் பாடங்கள் நடத்தினான்.

சாதாரண தரத்திலும் உயர்தரத்திலும் கிடைக்கப் பெற்ற மேற்படி ஆசிரியனது தொடர்பு காரணமாகவும் சுயமுயற்சியினாலும் உயிரியல் பிரிவில் மாவட்டமட்டத்தில் உச்சநிலையினை எய்திச் சிறப்புற்றனன். இக்காலப்பகுதியில் இம்மாணவன் பல்வேறு இன்னல்களையும் சுமக்கவேண்டி யேற்பட்டது. அத்தனையிலும் குறித்த ஆசிரியன் அவனைத் தடுத்தாட்கொண்டனன். கல்வியில் கணணியியலிலும் சிறந்து விளங்கலானான். சிங்களமும் சமஸ்கிருதமும் கூட கற்கலானான்.

இக்காலப் பகுதியில் இவனுக்கு அறிவியல் மேதை அப்துல் கலாமினது நேரடிப் பிரசன்னம் கிடைக்கப் பெற்றிருந்தது. கல்வியியல் பேராசிரியர் ஒருவர் தனது மாடி வீட்டிலிருந்து வீதிவரை வந்து சென்று வாருங்கள் டொக்டர் என்று கூறி கைலாகு கொடுத்து வழியனுப்பி வைத்திருந்தார். இப்படிப்பல ஆன்மிக, லௌகிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் பல இவன் வாழ்வில் வந்து போயின. மேலே குறிப்பிடப்பட்ட பேராசியரைப்போல இவன் உருவாக வேண்டும் என்ற கனவினை நிழலாக குறித்த ஆசிரியன் இம்மாணவன் மனதினில் படியவிட்டிருந்தான்.

ஆனால் வியாதி உடன்பிறந்தே கொல்லத் தொடங்கியது. வேண்டாத சகவாசங்களும் நெறிபிறழ்வுகளும் வேண்டி நின்ற இளையவர்களுள் மூத்தவர் பின்னிய வலையினில் சிக்கிய தாயினால் பிரஸ்டம் பண்ணப்படலானான். இதற்கிடையில் அதுகாறும் அவனுக்கு ஆதாரமாக இருந்த ஆசிரியனும் அவனிடமிருந்து பிரியவேண்டிய தாயிற்று. தனது சொந்தப் பிள்ளைகளையே போல்பேணிவந்த மேற்படி மாணவன் அதுவும் தனது பிறந்தநாளில் தெய்வத்தின் பேரால் வக்கிர உணர்வுகளுக்கு வடிகாலாக மிருகபலி நிறைவேற்றப்படும் இடத்தினின்று 'உன்மீது மரணபயங் கௌவிய அந்த விலங்கின் பார்வை படியாதபடி விலகி நின்று விடு' என்று கேட்டுக் கொண்டமை சாக்காக அமைந்தது. அதனை சாட்டாக வைத்து சகோதரரிருவரும் தமது நீண்ட காலத்திட்டத்தை செவ்வனே பல பொய்களைச் சொல்லி கனகச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டனர். மேற்படி பொய்கள் அனைத்தும் பொய்களே என ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்ட போதும் அவனை குடும்பத்திலிருந்தே ஒதுக்கலாயினர். ஆக ஒட்டு மொத்தத்தில் இந்த மாணவனுக்கு கிடைக்கப் பெற்ற மருத்துவக் கல்வி வாய்ப்பு தேசத்துக்கு பயனாகுமா என்ற நிலை உருவாகியுள்ளது. ஊரபிமானம் என்ற போர்வையிலான மூடநம்பிக்கைகள் பால் அனைவரும் கட்டுண்டு கிடக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள், தமது சொந்த பிறழ்வு முனைப்புக்களுக்கு சகோதரன் தடையாய் விடுவானோ என்ற அச்சங்கள், பாரம்பரியமாகவே நிலவிவந்த பெண்ணாதிக்கப் போக்குள் இந்த மாணவனது கையறு நிலைக்கு காரணமாய்விட்டன. இனிக்காலம் தான் பதில் சொல்ல வேண்டும். முடிவாக முன்னவரிருவரும் சமூகத்திலிருந்து ஒருசில சமூக விரோதிகளது நலன்களுக்காக ஒதுக்கப்பட்டனர். பின்னவனோ குடும்பத்திலிருந்தே ஒதுக்கப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்பள்ளிக் கல்வியின் உலகளாவிய முக்கியத்துவம்


**பேராசிரியர் சோ. சந்திரசேகரம்**

முன்னாள் கல்விப் பீடாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகம்


57 நாடுகளின் 15 வயதுப் பிள்ளைகளின் வாசிப்பு, விஞ்ஞான கணித அறிவை ஆராய்ந்த சர்வதேச மதிப்பீட்டுப் பரீட்சைகளின்படி பின்லாந்து மாணவர்களே உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இதன் காரணமாக அமெரிக்கா உட்படப் பல நாடுகளின் கல்வியியல் ஆய்வாளர்கள் பின்லாந்து மாணவர்களின் உயர் தேர்ச்சிக்கான காரணங்களை ஆராய முற்பட்டனர்.

அமெரிக்கா மற்றும் பல உலக நாடுகளின் பிள்ளைகள் 5 வயது தொடக்கம் முறையான பாடசாலைகளில் அனுமதி பெறுகின்றனர். ஆனால் பின்லாந்து மற்றும் ஸ்காந்திநேவிய நாடுகளில் 7 வயதிலேயே மாணவர்கள் ஆரம்பக் கல்வியைத் தொடங்குகின்றனர். ஆயினும் ஆரம்பக் கல்வியைத் தொடங்கு முன்னர், முன்பள்ளி வயதில் சகல பின்லாந்துப் பிள்ளைகளும் மிகவும் உயர்தரமான முன்பள்ளிக் கல்வியில் ஈடுபடுகின்றனர். பாடநூல் புலமையை வழங்காது, இந்நிலையில் பிள்ளைகளின் சமூக நடத்தை, சுய பிரதிபலிப்பு என்னும் விடயங்களில் அக்கறை செலுத்தப்படுகின்றது. பிறநாடுகளில் வலியுறுத்தப்படாத ஒரு பிரதான அம்சம் பின்லாந்துக் கல்வியில் முன்பள்ளி நிலையில் வலியுறுத்தப்படுகின்றது.

பின்லாந்துப் பிள்ளைகளின் பிரதான பண்பு தமது கல்வி மேம்பாட்டுக்கான பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொள்வதாகும். கற்றலைப் பொறுத்த வரையில் இவ்வகையான பொறுப்பேற்கும் பண்பைப் பிள்ளைகள் வளர்த்துக் கொள்ளும் வகையில், முன்பள்ளிக் கல்வி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை பின்லாந்துப் பிள்ளைகளின் உயர்ந்த கல்வித் தேர்ச்சிக்கு ஒரு பிரதான காரணமாகும்.

பின்லாந்தின் இத்தகைய அணுகுமுறை 1830களில் ஜெர்மன் நாட்டுக் கல்விச் சிந்தனையாளரான F. Froebel என்பாரின் 'குழந்தைப் பூங்கா' (Kindergarten – Children's garden) என்ற கொள்கையுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். பிள்ளைகளுக்கு விளையாடும் வாய்ப்புகளை வழங்கி அவையூடாகக் கற்கும் நிலைமைகளைக் குழந்தைப் பூங்கா ஏற்படுத்துகின்றது. 'இவ்வாறான வாய்ப்புகளை முன் பள்ளிப் பருவத்தில் வழங்கி, எதிர்காலத்தில் பாடசாலையில் முறையான கல்வி பெறுவதற்கான அத்திவாரத்தை வழங்குதல் வேண்டும் என்று Froebel கூறினார். அவரது மற்றொரு கருத்து, 'சகல சமூக வகுப்புகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் எதிர்காலத்தில் சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு, முன்பள்ளிப் பருவத்தில் ஏற்படும் உள, உடல் வளர்ச்சி காரணமாகும் என்பதாம்.



## சுவீடன்

மற்றொரு ஸ்காந்திநேவிய நாடான சுவீடனின் கல்வி முறையும் உலகில் வெற்றிகரமாக செயற்பட்டு வரும் கல்வி முறைகளுள் ஒன்று; இதற்குப் பிரதான காரணம் அந்நாட்டின் முன்பள்ளி நிலையில் செய்யப்பட்டுள்ள கல்வி ஏற்பாடுகளாகும். அந்நாட்டின் முன்பள்ளிக் கல்வி முறை ஏறத்தாழ 1970 களில் தொடங்கப்பட்டது; இக்காலப் பகுதியிலேயே முதலாவது முன் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டப்படி 6 வயதுப் பிள்ளைகளுக்கு இலவச முன்பள்ளிக் கல்வி வழங்கப்பட்டது; மேலும் இச்சட்டப்படி 6 வயதுப் பிள்ளைகள் 525 மணிநேரம் முன்பள்ளிக் கல்வி பெற உரித்துடையவர்களாயினர்; இக்கல்வி பிள்ளை பேணல் நிலையம், குடும்பப் பிள்ளை பேணல் நிலையம் என்பவற்றால் வழங்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இக்கல்வியை வழங்கும் அதிகாரம் மாநகர சபைகளுக்கு வழங்கப்பட்டது. 1990களின் பிற்பகுதியில், முன்பள்ளிக் கல்வியானது குடும்பத்தை விடுத்து கல்விக் கொள்கையுடன் தொடர்புபடுத்தப்பட்டது. அக்காலத்தில் சுவீடன் அரசாங்கம் கட்டாயப் பாடசாலைக் காலத்தின் ஆரம்பத்தில் பெறும் கல்வியை முன்பள்ளிக் கல்வி வலுப்படுத்தும். என்று கருதியது. இச்சிந்தனையானது 1-6 வயதுப் பிள்ளைகளின் முன்பள்ளிக் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பிரதானமாக, அரசாங்க மட்டத்தில் குறிக்கோள்களும், கற்றல் நோக்கங்களும் உள்ளடக்கிய ஒரு முன்பள்ளிப் பாட ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது; இப்பாட ஏற்பாடு சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் பிள்ளைப் பேணல் சேவை வழங்குவோரையும் உள்ளடக்கி அமைந்தது. மேலும் பிள்ளை பேணல் சேவைக்குப் பதிலாக முன்பள்ளிக் கல்வி என்னும் சொல் பயன்படுத்தப்படலாயிற்று.

பின்னர் படிப்படியாக 4-6 வயதுப் பிள்ளைகள் யாவருக்கும் இலவச முன்பள்ளிக் கல்வி வழங்கப்படலாயிற்று. 2000 மாம் ஆண்டளவில் நாடாளாவிய ரீதியில் ஆசிரியர் தகுதிகள், வகுப்பறையில் பருமன், ஆசிரியர்- மாணவர் விகிதம் போன்ற விடயங்களில் சமமான தரங்கள் வலியுறுத்தப்பட்டன.

சர்வதேசப் பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெற்ற டென்மார்க், நோர்வே, சுவீடன், பின்லாந்து முதலிய ஸ்காந்திநேவிய நாடுகளின் முன்பள்ளிக் கல்வி தொடர்பான கட்டமைப்பு ஏற்பாடுகள், கல்வி முறையோடு ஒன்றிணைக்கப்பட்ட ஏற்பாடுகளாக அமைந்தமை ஒரு பிரதான அம்சமாகும்.

**ஐக்கிய அமெரிக்கா**

இருபதாம் நூற்றாண்டில் கல்வியாளர்களும் பிள்ளைகளின் நலன்களில் அக்கறை காட்டியவர்களும் முன்பள்ளிக் கல்வியை விரிவுபடுத்துமாறு பெரிதும் வலியுறுத்தினர். இதன் விளைவாக 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துண்டுபடுத்தப்பட்ட, ஒழுங்கற்ற ஒரு முன்பள்ளிக் கல்வி முறையே ஐக்கிய அமெரிக்காவில் வளர்ச்சி பெற்றிருந்தது. இது சமூகத்தினதும் பிள்ளைகளினதும் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானவை அல்ல என்பதும் உணரப்பட்டது. ஆயினும் கல்வி, வேலை, நலனளித்தல் (welfare) தொடர்பான சமூக சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அமெரிக்காவில் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தின. அது குடும்பம் சம்பந்தப்பட்ட விடயமல்ல; தேசிய கல்வியுடன் தொடர்புள்ள விடயம் என்பது அமெரிக்காவில் புரிந்து கொள்ளப்பட்டது. 1980 களிலும் 1990 களிலும் ஆரம்ப, இடைநிலைக் கல்வி வளர்ச்சியில் காட்டப்பட்ட விசேட ஆர்வம் காரணமாக, முன்பள்ளிக் கல்வியிலும் மிகுந்த அக்கறை காட்டப்பட்டது.

1998, 2000 ஆகிய ஆண்டுகளில் சில ஐக்கிய அமெரிக்க மாநிலங்களின் (உதாரணம் நியூ ஜேர்சி, கரோலினா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றங்கள், 'அபாயங்களை (Risk) எதிர்நோக்கும் பிள்ளைகள்', பிற்காலத்தில் பாடசாலைகளில் பல கற்றல் பிரச்சினைகளை எதிர்நோக்கக்கூடும்; எனவே அவர்களுக்கு முறையான முன்பள்ளி ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என மாநிலக் கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.


2000 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் செய்யப்பட்ட சில ஆய்வுகளின்படி இளம் பிள்ளைகள் கற்பதற்கான ஆற்றல் படைத்தவர்கள் எனக் கண்டறியப்பட்டது. வழமையான அமெரிக்கச் சிந்தனை சற்று மாறுபட்டது. பழைய சிந்தனையின்படி, முன்பள்ளிக் கல்வியானது சமூக மயமாக்கலைப் பிரதான பணியாகக் கொண்டது; அதாவது சகபாடிகள் மற்றும் குடும்பத் தொடர்பற்றவர்களுடன் பழகும் முறையைப் பயிற்றுவதே முன் பள்ளிக் கல்வி. ஆனால் புதிய ஆய்வுகள் முதல் ஐந்து ஆண்டுகளில் பிள்ளைகளின் சமூக தேர்ச்சி, மொழி ஆற்றல், எண்ணக்கருவாக்க ஆற்றல் என்பன அதிக அளவில் விருத்தியாவதாக இவ்வாய்வுகள் எடுத்துரைத்தன. (தேசிய ஆராய்ச்சிக் கழக ஆய்வுகள்).

இந்த ஆய்வுகள் எடுத்துக் கூறிய வேறு விடயங்கள்:

- நன்கு திட்டமிடப்பட்ட, குறிக்கோள்களை உள்ளடக்கிய உயர்தரமான முன்பள்ளிகளுக்குச் சென்ற பிள்ளைகள், ஆரம்பப் பள்ளியின் சிக்கலான பாட ஏற்பாட்டைக் கற்க சிறந்த முறையில் ஆயத்தப்படுகின்றனர்.
- முன்பள்ளி வயதுப் பிள்ளைகள் எவ்வாறு விருத்தியடைகின்றார்கள்? இப்பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிக்க வேண்டும்? இவ்விடயங்கள் தொடர்பான ஆசிரியர்கள் ஒரு கட்டாயமான தேவை.
- கல்வியும் பேணலும் (Care) முன்பள்ளி வயதில் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்; வேலை செய்யும் பெற்றோர்கள் தாம் வேலை செய்து கொண்டிருக்கும்போது, தமது பிள்ளைகள் கற்பதோடு கவனிப்புக்கும் உள்ளாக வேண்டும்.

என்பதை அறிந்தவர்களாய் இருத்தல் வேண்டும். அக்காலத்து முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டங்கள் பிள்ளைகளை முறைசார் பள்ளிக்கு ஆயத்தப்படுத்தல், வேலை செய்யும் பெற்றோருக்கு உதவுதல் முதலிய விரிவான நோக்கங்களைக் கொண்டிருக்கவில்லை. ஏதேனும் ஒரு குறிக்கோளே இருந்தது. இதன் விளைவாக முன்பள்ளிக் கல்வி ஏற்பாடுகளில் ஒரு பொதுத் தன்மை காணப்படவில்லை. நிர்வாக ஏற்பாடுகள், கல்வி வழங்கும் முறை, குறிக்கோள்கள் என்பவற்றில் வேறுபாடுகள் காணப்பட்டன.

இப்பின்புலத்தின் 21 நூற்றாண்டின் ஆரம்பத்தில், இளம் பிள்ளைகளின் முன் பள்ளிக் கல்வி விடயத்தில் ஐக்கிய அமெரிக்கா ஏனைய ஐரோப்பிய நாடுகளை விடப்



பின் தங்கிக் காணப்பட்டது. இவ்விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் பல முன்னேற்றங்களைக் கண்டிருந்தன:

- பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகள் 3-6 வயதுப் பிள்ளைகளுக்கு விரிவான இலவச முன்பள்ளிக் கல்வியை வழங்குகின்றன; 1999- 2000 இல் 95-99% பிள்ளைகளுக்கு முன்பள்ளிக் கல்வி கிட்டியது. அவுஸ்ரேலியா, நெதர்லாந்து, ஸ்பெய்ன், ஜெர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளில் 70% பிள்ளைகளுக்கு இவ்வசதி கிட்டியது.
- மற்றொரு பிரதான அம்சம் இவ்வுயர்ந்த தொகையினரான பிள்ளைகளுக்கு முறையான முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சித் திட்டமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தகுதி வாய்ந்த ஆசிரியர்களாலேயே இவை நடாத்தப்பட்டன. இவற்றுள் பிள்ளைகளைப் பேணும் நிலையங்கள் அடங்க மாட்டாது. ஐரோப்பிய முன்பள்ளி ஆசிரியர்கள் பட்டப் படிப்புக்கு இணையான தகுதிகளைக் கொண்டவர்கள்.

சகல ஐரோப்பிய நாடுகளிலும் முன் பள்ளிக்கான நிதியை அரசாங்கம் ஒதுக்குகின்றது. வசதியுள்ள பெற்றோர்கள் மட்டும் செலவுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவில் கல்வியின் மீதான அரசாங்கச் செலவுகள் பாரதூரமான முறையில் சமச்சீரற்றவை; முன்பள்ளிக் கல்விக்கான செலவு 2000 கோடி டொலர்; பாடசாலைக்கான செலவு 40000 கோடி டொலர்; உயர் கல்விக்கான செலவு 10000 கோடி டொலர். அமெரிக்கர்கள் திறன்களை மேம்படுத்த முன்பள்ளிக் கல்விக்கு மேலதிக நிதி தேவையாக உள்ளது. அடிப்படைக் கல்வியும் சமூகமயத் திறன்களும் மேம்பட இந்நிதி அதிகரிப்பு தேவை என வலியுறுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிவாற்றலும் சமூகவியலும்

**வட கோவை பூ.க. இராசரத்தினம் SLEAS**

'அறிவையும் சமுதாய நலனையும் கொண்ட ஓரினம் தனக்கென உரிய தனித்துவமான இணைப்பில் நிற்கும் வரை வளமும் வளர்ச்சியும் பெறும். இந்த இணைப்பு சிதைந்து விட்டால் வளம் குலையும். வளர்ச்சி சிதைவடையும். சமுதாயம் என்ற உருவம் குலைந்து சிதைந்து போகும்.' (பேரறிஞர் பிளட்டோ.)

**சமூக மாற்றங்களும் வரலாறும்**




காலத்துக்கு காலம் சமூகங்களில் பெருமாற்றங்கள் நடைபெறும் பொழுது மனிதர்கள் நடந்து கொள்ளும் முறை புரியாத புதிராகப் பலருக்கு இருந்து வருகிறது. சமூகத்தில் ஏற்பட்ட பல பிரச்சனைகள், சம்பவங்கள் மனிதரையும் மனித சமுதாயத்தையும் நன்றாக ஆராயும் படி சிந்தனையாளர்களை அக்கறையும் ஆர்வமும் கொள்ள வைத்தது எனலாம். வரலாற்று அடிப்படையில் சமூகத்தை அறிய முற்பட்டனர் சிலர். வேறு சிலர் சமூக நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினர். இச் செயற்பாடுகளை சமுதாய வளர்ச்சிக்குக் கைகொடுத்து வந்ததை நாம் உணரலாம். உதாரணமாக பிரெஞ்சு புரட்சி போன்ற நிகழ்ச்சி சமூக விழிப்பை ஏற்படுத்தியது. இத்தகைய நிகழ்வு வேறு நாடுகளிலுமுள்ள சமுதாயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பலர் சமூகத்தை ஆராய்ந்து சமூகத்தைப் பற்றி எழுதத் தொடங்கினார்கள். சமூகவியலின் பிதா என்று அழைக்கப்படும் கோன்ட் சமுதாயத்துக்கு இயல்பான அமைப்பு ஒன்று உண்டு எனக் கூறினார். சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்கு முன் அதன் விதிகளைப் பூரணமாக அறியவேண்டுமெனக் குறிப்பிட்டார். சமூகத்தில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டன. இவை வாழ்வு வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக அமைவது அறிவாற்றல் என்பதையும் நாம் உள்வாங்க வேண்டும்.

**வாழ்வும் வளர்ச்சியும்**

வாழ்வு ஒரு வகையான வளர்ச்சி, வளர்ந்து கொண்டே இருக்கும்.

அழுத்தமான மனவெழுச்சி பல்பரிமாணங்களைக் கொண்டுள்ளது. உணர்ச்சி அனுபவங்களைப் பெறச் செய்கின்றது. துணிச்சலான மனம் ஆற்றலையும் பொருட்களையும் பெற வழிவகுக்கின்றது.

அறிவு, உணர்ச்சி, பலம் வாழ்க்கையின் பெரும் செல்வங்கள் எனலாம். ஆனால் வாழ்க்கை என்பது ஒரு வகையான ஆற்றல் என்று மட்டும் கருதுவது மனிதப் பண்பாக அமையாது. நீராவியைப் போல், மின்சாரத்தைப் போன்று ஆற்றல்களால் ஓரளவு பயனுண்டு என்றாலும் பூரண இலட்சியத்தை அடைய முடியாது. இத்தகைய வல்லமையுடைய வாழ்பை மேற்கொள்பவர்கள் தனி மனிதன் மீது கருணை காட்டுவதில்லை. அநியாயமான செயற்பாடுகளில் ஈடுபடவும் தனிமனிதர்களைப் பலியிடுவதற்கு அஞ்சமாட்டார்கள். போதினைகள் அவர்களுக்கு வேதனைகளாக அமைவது போல் தெரிகிறது.

எனவே சமுதாயம் மனிதாபிதான செயலாக, படைப்பாக மலரும் பொழுது முழுமை பெறுகிறது. பூ மலர்ந்தது மணம் வீசும் பொழுது சிறப்படைவது போல். படைப்பும் திறனும் பண்புடன் இயங்கும் பொழுதே வாழ்வு தனது முழு நிறைவைப் பெறுகிறது. சமூக வளர்ச்சி தேவை. ஆனால் உயிர் வளர்ச்சி கட்டிடத்தின் வளர்ச்சி போலன்று இவை மலரத் தொடங்க முன் தமது முழுமையை புலப்படுத்தி விடுகின்றன.

சில நூற்றாண்டுகளாக விஞ்ஞானத்தின் துணை கொண்டு இயந்திரங்களைப் பெருக்கி அதிக இலாபம் பெறும் நோக்கம் வளரத் தொடங்கியது. இப்பேராசையால் சமூதாயம் ஒழுக்கப் பாதையிலிருந்து விலக நேர்ந்தது. சமூதாயத்தின் அறிவுச் சமநிலை சரியத் தொடங்கியது. பணத்தின் ஆதிக்கம் மேலோங்கியது. பணம் இன்று அபிப்பிராயங்களை ஏற்படுத்த உதவுகின்றது. உண்மை நசுக்கப்படுகிறது. அரசியலை ஆட்டி வைக்கிறது. அறிவுப் புலமையும் ஆன்மீக நலமும் பேணப்படாததால் சமுதாய சம நிலை சீர்குலைய வேண்டியுள்ளது. நாகரிகம் தலை குனிந்து நிற்கிறது.



**விஞ்ஞானமும் விழுமிய வாழ்வும்:**

விஞ்ஞானம் நமது அறிவியலும் மனோநிலையிலும் புதிய பழக்கங்களை உண்டாக்கி வருகின்றது. விழுமிய வாழ்விலிருந்து விலகிச் செல்லவேண்டிய நிலைவியப்படைய வேண்டியுள்ளது. இயந்திரங்களின் ஆட்சியும் போர்க்கருவிகளின் ஆதிக்கமும் அதிகரித்து வருகின்றன. புயல் கடுமையாக வீசும் பொழுது கப்பலில் உள்ள பொருட்களை வீசிக் கப்பலைக் காப்பாற்ற முயல்வது போல சமுதாயத்தைக் காப்பாற்றுவதாகக் கூறி மனிதன் இக்கெட்டான நிலைக்கு தள்ளப்படுகின்றான். நாடற்ற வீடற்ற நாடோடிகள் பற்றிய செய்திகள் பல உண்டு. கொலை, கற்பளிப்பு, களவு, போதைவஸ்து உபயோகம், போன்ற குற்றச்செயல்கள் வளர்ச்சியடையும் போலத் தென்படுகின்றன. அரசாங்கம் விழிப்பாக இருப்பதனால் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் உண்டு எனலாம்.

எனவே மனிதப் பண்பை, மாண்பை உயர்த்த முயற்சிப்பதே இன்றைய தேவையாகும். நாம் எவ்வளவு தூரம் கடந்து விட்டோம் என்பதைவிட இன்னும் எவ்வளவு தூரத்தைக் கடக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவது தான் எப்போதுமே எமது ஊக்க சக்தியின் அச்சாணியாக இருக்க வேண்டும். அனுபவத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் அறிவு உயர்தரமான வாழ்க்கை நெறியைக் கற்றுக் கொடுக்குமமேயானால் நாம் அதைக் கடைப்பிடிப்பது நன்று. அந்த நல் அறிவைக் கொடுப்பதற்காகத்தான் அந்த அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் ஏற்பட்டது என்பதை உணர வேண்டும். நாம் மாற்றங்களைப் புரிய ஏற்றுக்கொள்ளத் தயாராக வேண்டும். ஏன் என்றால் நாம் எங்கு சென்றாலும் எம் எண்ணங்களையும் கலைகளையும் நம்முடன் கூட்டிச் செல்கின்றோம். நம் மனோபாவத்தை மாற்றுவதன் மூலம் அவற்றை மாற்றிவிடலாம். உலகப் புகழ் பெற்ற நாடாக ஆசிரியர் சேக்ஸ்பியர் 'காலத்தால் குற்றமில்லை. மனோநிலையால்தான் குற்றம்' என்கிறார். எனவே சிந்தனைப் புரட்சி மூலம் மனித ஆளுமைப் பலத்தை பேணிப்பாதுகாக்க வேண்டும். விஞ்ஞானம் பல வசதிகளை வழங்கிய போதிலும் மக்கள் மனதில் நிம்மதியை ஏற்படுத்தத் தவறியுள்ளது. மனிதனின் தன்னல உணர்ச்சி அதிகார உணர்ச்சி அதிகரித்துள்ளமையால் சமுதாயம் பயப்பீதியால் பாதிப்படைந்து வருகிறது. ஏற்கனவே இருந்த பொருட்களை புதிய முறையில் சேர்த்து ஆக்கவும் உதவுமேயன்றி ஒன்றை உருவாக்க விஞ்ஞானத்தால் முடிவதில்லை. எனவே மனிதன் மேற்கொள்ள வேண்டிய படைப்புத்திறன் தனிய விஞ்ஞானத்தின் உதவியோடு அமைக்க முடியாது. அறிஞர் பேற்றாண்ட நசெலின் கூற்று இந்நிலையை நன்கு விளக்குகின்றது.

"விஞ்ஞானிகள் சில செயற்திறன்களைக் கண்டு மகிழ்வதாக அல்லது அவர்களின் அழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதங்களைக் கண்டு கவலைப்படுவதா என்பது எனக்கு புரியாத புதிர்."

"விஞ்ஞானம் மக்கள் மத்தியில் கூடிவாழும் தன்மையை, அன்பை, சமத்துவத்தை அடிப்படை, உரிமைகளை அனுபவிக்கும் சுதந்திரத்தை வளர்க்கத் தவறியுள்ளது.

**மறுமலர்ச்சி**

மாறும் பருவ காலங்கள் வளரும் பயிரில் மாற்றங்களை புகுத்துவது போல, பிரஜைகளின் அறிவுப் பலத்திலும் மன நலத்திலும் மாற்றங்களைத் தேவைக்கேற்ப புகுத்த வேண்டும். எல்லா நாடுகளும் அறிவுப்பொருளாதாரமாக (Knowledge Economy) அறிவுச் சமூகமாக (Knowledge socirty) மாறுவதில் ஈடுபட்டு வருகின்றன. அறிவுப் பொருளாதாரத்தில் பிரதான உற்பத்திக் காரணி அறிவு, எனவே அறிவுப் பொருளாதாரங்கள் உலகளாவிய அறிவை உள்வாங்குதல், நாட்டின் பொருள் உற்பத்திக்கேற்ப அறிவை உருவாக்குதல், அறிவை முழு சமூக மத்தியில் பரப்புதல், அறிவைப் பொருள் உற்பத்திப்படுத்தல் என்னும் பணிகளில் ஈடுபடவேண்டும். இதன் காரணமாக உயர்கல்வியின் விரிவிலும் தராதரத்திலும் மிகுந்த அக்கறை செலுத்தப்பட வேண்டும். எமது நாடு உலகம் என்ற கிராமத்தின் சிறு குடி (Global Village) புதிய சர்வதேச நிலைமைகளிலிருந்து ஒதுங்கி வாழ முடியாது. கற்க உரிய இடம் அளிக்கும் உன்னதப் பண்பு (Schoalstic Meritocracy) வலுப் பெறவேண்டும். கல்விச் சீர்குலைவு மன்னிக்க முடியாத பாவமாகும். கல்விச் சீர்திருத்தம் காலத்துக்கு காலம் தயாரிக்கப்பட்டு வெள்ளை அறிக்கை (White paper report) மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும். மக்களுடன் கருத்துப்பணிமாறல்கள் மேற் கொள்ளப்படுதல் அவசியமாகும். அறிவுப் பிரவாகம் (Knowledge explosion) ஏற்பட்டுள்ளது. கற்பித்தல் முறைகளில் மாற்றங்கள் விரும்பத்தக்கவையாகும். ஆசிரியர் கூறுவதை மாணவர் கேட்பது இன்றைய முறை. (Transmission role) இது ஓர் ஒற்றை வழிப்பாதை. இரண்டு வழிப்பாதை தேவை (வுசயளெயஉவழைெ சழடந) இதனால் ஆய்வுகள் (சுநளநயசஉா யவவவைரனந) மிகக் குறைவாகச் காணப்படுகின்றன. இன்றைய தேவைக்கேற்ப தரம் வாய்ந்த கல்வியை வழங்கத் தவறின் மாணவர்கள் வீறுகடைபோடும் உலகத்தோடும் மாற்றங்களோடும் இணைந்து போகமுடியாத நிலை ஏற்படலாம். சமுதாயத்தின் அடிமட்டத்தில் (Grass root level) உள்ள மக்களும் கல்வி பெற சம வாய்ப்புக்கள் வேண்டும். கல்வித்துறை புதுமைகளை ஏற்கும் வற்றாத நீரோடையாக மிளிர வேண்டும். அறிவு வளர்ச்சியில், மறுமலர்ச்சியில் தனிமனித வளர்ச்சி தங்கியுள்ளது. உயர் வாழ்வு நெறிகளுடன் கூடிய தனிமனித வளர்ச்சி இருக்கின்றதென்பதை மக்கள் உணர்வார்கள். பல் பரிமாண சிந்தனைகளை (Multi Dimensional perpectives) உள்வாங்கி முன்னேற்றப் பாதையில் வீறு நடை போடுவார்கள். பல நாடுகள் அறிவின் துணை கொண்டு பல இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து முன்னேற்றம் அடைந்தமை பற்றிச் சரித்திரம் சான்று பகருகின்றது. எனவே சமூக ஒற்றுமை தேவை. இது சமுதாய வளர்ச்சிக்கு வித்தாகும். சமுதாய உணர்ச்சி மேலோங்கும்.

மனிதனுடைய அனுதாப அலைகள், இரக்கமான உணர்வுகள், தியாகச் செயல்கள் அறச் செயல்கள் அன்பைப் பரப்பும் திறன் நம்பிக்கையோடு உழைத்தல் போன்ற படைப்பினால் மாத்திரம் மனித உண்மை புலப்படும். துலங்கும் சமூகத்தை அன்பாலயமாக மனிதன் படைக்க முற்பட்டால் மாத்திரம் அவனுடைய பெருமை பெருக்கமடையும். அமைதியும் சாந்தமும் நிவைகொண்டு மனழத வாழ்வு பண்படையும், மேலோங்கும் என்பது பேருண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதவள அபிவிருத்திக்குரிய அடிப்படை எண்ணக்கருக்கள்

**கணபதி சாம்பசிவம்**

தேசிய ஆலோசகர் - கல்வி முகாமைத்துவம் தலைமைத்துவம்

அறிவுசார் சமூகத்திற்கான கல்விச்செயற்திட்டம் / ஆசிய அபிவிருத்தி வங்கி

கல்வி நிறுவனங்களினுள் மனிதவள அபிவிருத்திக்குரிய அடிப்படைகளை விளங்கிக் கொள்ளல் பாடசாலை முகாமையில் இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது. நிறுவனமொன்றினுள் மனித நடத்தையை விளங்கிக் கொள்ளல், புலக்காட்சியொன்றினை உருவாக்கல், மனிதவள அபிவிருத்தியின் முதன்மையை புரிந்து கொள்ளல், நிறுவன மற்றும் தொழில்சார் விருத்தியூடாக வினைத்திறன் விளைதிறனை அதிகரித்தல் மற்றும் தரமான கற்றல் விளைவுகளைப் பெறல் போன்ற முக்கிய விடயங்கள் மனிதவள அபிவிருத்திக்குரிய அடிப்படை அம்சங்களை விளங்கிக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. மேலும் மனிதவள அபிவிருத்திக்குரிய பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கும், பயிற்றுத் தேவைகளை அறிந்து கொள்வதற்கும், இனம் கண்ட தேவைகளுக்கான பயிற்சிகளை வடிவமைப்பதற்கும் நடைமுறைப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பனவற்றிற்கு இவ் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். கல்வி நிறுவனத் தலைவர்கள் தமது பாடசாலை ஆளணியினரின் தனியாள் திறன்களையும் (Personal Skills) வாண்மைத்துவ திறன்களையும் (Professional Skills) வளர்த்தெடுப்பதற்கும் அத்துடன் உயர்வாண்மையாளர் என்ற நிலையில் தம்மை நிலைப்படுத்திக் கொள்வதற்கும் மனிதவள அபிவிருத்திக்குரிய அடிப்படை அடிப்படை அம்சங்களை விளங்கிக் கொள்ளல் அவசியமாகும். நிறுவனத் தலைவரானவர் தன்னை உயர்வாண்மையாளர் என்ற நிலைக்கு உயர்த்திக் கொண்டால் மாத்திரமே அவரால் ஆலோசனை கூறி வழிகாட்டல், புத்திமதி வழங்கல், தொழில்சார் விருத்திக்கான நெறிப்படுத்தல் மற்றும் பயிற்சியளித்தல் போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் இவற்றிற்கான ஓர் நிகழ்ச்சித் திட்டத்தை விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் தன்னகத்தே வளர்த்துக் கொள்ள முடியும்.

**மனிதவள அபிவிருத்தியின் வரைவிலக்கணம்**

பொதுவாக மனிதவள அபிவிருத்தி என்பது தொழிலாளரின் அல்லது ஆளணியினரின் ஆளுமை விருத்தி, நிறுவனம்சார் திறன் விருத்தி, மற்றும் அறிவு, மனப்பாங்கு விருத்தியென வரைவிலக்கணப்படுத்துவர். (Swason & Holton 2011) இவ் வரைவிலக்கணமே பொதுவாக பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதுவரை இவ் வரைவிலக்கணமானது பல்பொருள் அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் சிறப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நிறுவனங்களிலும் இவ் வரைவிலக்கணப் பிரதிபலிப்புக்களே தென்படுகின்றன. மனித பரிமாணங்கள், உரிமைகள், உரிமையளித்தல்கள், வலுவாக்கம், மனித அபிவிருத்தி, என்பனவற்றிற்கு கருவியாக அமைகின்றது. அத்துடன் நிகழ்கால, எதிர்கால தொழில் தகமைக்கும் இட்டுச் செல்கின்றது.

தனிநபர், நிறுவனத்தின் நிகழ்கால, எதிர்கால செயற்பாடுகள், திட்டமிடப்பட்ட கற்றல் நடவடிக்கைகள் ஆகியவற்றின் சிறப்பான மேற்கொள்ளல் மூலம் மனிதவள அபிவிருத்தியின் பிரதான தேர்ச்சிகள் அடையப்படுகின்றன. (Swanson 2008). ஒன்றிணைக்கப்பட்ட பயிற்சி, நிறுவனத்தின் தொழில் விருத்தி, தனிநபர் மற்றும் குழுவாக மேற்கொள்ளும் முன்னேற்றகரமான முயற்சிகள் என்பன நிறுவனத்தின் விளைதிறனுக்கு இட்டுச் செல்கின்றன. (Kelly 2006) நிறுவனங்களுள் இருக்கும் குழுக்களுடாக மனிதவள அபிவிருத்தி ஆரம்பித்து மாற்றத்தை முகாமிக்கிறது. (Delahale 2005)

மேற்கூறிய வரைவிலக்கணங்களை நோக்கும்பொழுது மனிதவள விருத்தியூடாக தனிநபருக்கும் நிறுவன தேவைகளுக்கும் இடையே ஒரு போட்டிநிலை உருவாகின்றது. அத்துடன் மனிதவள விருத்தியானது நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட குழுக்கள், திறன்மிகு முகாமையாளர்கள் மற்றும் உதவும் ஆளணியினர் ஆகியோரையும் உருவாக்குகின்றது. நிறுவன மட்டத்தில் திட்டமிடப்பட்டு செயற்பாடுகள் ஒழுங்கமைத்து வடிவமைக்கப் படுவதனால் நிகழ்கால, எதிர்கால தொழில் தகமைக்கு தேவையான கற்றல் தேர்ச்சிகளை அடையும் வாய்ப்புக்களை நிறுவனத்தின் அங்கத்தவர்கள் பெறுகின்றனர். நிறுவன விருத்தியும் பயிற்சி விருத்தியும் நிபுணத்துவம் வாய்ந்த ஆளணியினர் உருவாக காரணமாகின்றது. எனவே மனிதவள விருத்தியின் முழுமையான நோக்கு நிறுவன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள் அல்லது ஆளணியினரின் செயற்பாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும். மரபுரீதியான இவ்விரு கூற்றுக்களும் மனிதவள அபிவிருத்தியின் சாராம்சமாக கருதலாம்.

மரபு ரீதியான கூற்றுக்களின் முன்னோடிகளாக நாம் பீட்டர் டக்கர் (Peter Durker, 1975) மற்றும் அடம் ஸ்மித் (Adam smith 1776) ஆகியோரைக் கொள்ளலாம். இவ் இருவரும் தொழிற்துறையைச் சார்ந்தவர்கள். என்னும் அவர்களது கூற்றுக்கள் இன்றைய முகாமைத்துவ செயற்பாடுகளில் முக்கியத்துவத்தை செலுத்திக் கொண்டிருக்கின்றன. "நிறுவனத்தின் நல் அதிட்டம் நிறுவனத்தின் நாளைய முகாமையாளரின் செயற்பாடுகளில் தங்கியுள்ளது" என்று பீட்டர் டக்கர் கூறுகின்றனர். மறுபக்கத்தில் ஸ்கொட்லாந்து பொருளியலாளர் அடம் ஸ்மித் தனது "நாடுகளின் செல்வம்" நூலின் முதற் பதிப்பில் கூறுவதாவது "தனிநபரின் ஆற்றலளவு மட்டம் அவர்களின் கல்வியிலும் பயிற்சியிலும் தங்கியுள்ளன" என்கிறார்.

**மனிதவள விருத்தியின் பிரதான தொழிற்பாடுகள்**

மனித வள விருத்தியை நாம் நோக்குவோமேயானால் அதில் மூன்று தொழிற்பாடுகள் உள்ளன. அவையாவன அ. பயிற்சியும், விருத்தியும் ஆ. நிறுவன விருத்தி இ. தொழில்சார் விருத்தி இம்மூன்று முக்கிய தொழிற்பாடுகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்த தொடர்புடையவை என்பதை பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.




அ. பயிற்சியும் விருத்தியும் (Training and Development)

பயிற்சியினதும் விருத்தியினதும் நோக்கமானது நிறுவன ஆளணியினரின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றில் முன்னேற்றம் அல்லது மாற்றம் அடையச் செய்தல் என்பதாகும். நிறுவன ஊழியர்கள் குறிப்பிட்ட கருமங்களை திறம்பட ஆற்றுவதற்கு தேவையான அறிவு, திறன்கள் என்பன பயிற்சியூடாக வழங்கப்படுகின்றன. அதே நேரம் விருத்தி செய்யப்பட்ட செயற்பாடுகளூடாக எதிர்கால பொறுப்புக்களை அதிகரிக்கும். (Job unlargement) பரிமாணத்திற்கு ஊழியர்கள் தயார்படுத்தப்படுகின்றனர். அத்துடன் தனிநபர்களின் இன்றைய தொழிற் செயற்பாடுகளுக்கும் செழுமையளிக்கின்றது. நிறுவனமொன்றில் இணையும் ஊழியர் ஒருவர் திசைமுகப்படுத்தல் மற்றும் திறன் விருத்திக்கான பயிற்சிகளைப் பெறும்போது அவரது தனியாள் விருத்தியும் ஆரம்பமாகின்றது. மனிதவள செயற்பாட்டு முறைகள், நுட்பங்கள், பயிற்சி அளித்தல், ஆலோசனை கூறுதல், அறிவுரைகள் வழங்குதல் ஆகியவற்றினால் தனியாள் செயற்பாடுகள் விருத்தியடைகின்றன. இறுதியில் தொழில் வாண்மையுடையவனாக மாற்றமுற செய்கின்றது.

ஆ. நிறுவன ரீதியான விருத்தி (Organizational Development)

நிறுவன ரீதியான விருத்தியினை பொதுவாக OD என சுருக்கமாக ஆங்கிலத்தில் அழைப்பார்கள். ஒரு நிறுவனத்தின் விளைதிறனை அதிகரிக்கின்ற செயல் முறைக்கு நடத்தை விஞ்ஞானம் என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது. நன்றாக இயங்குகின்ற நிறுவன ஊழியர்களின் செயற்பாடுகள், நன்கு திட்டமிடப்பட்ட தலையீடுகள் என்பன இவ் எண்ணக்கருவின் முக்கிய கூறுகளாகும். நிறுவன ரீதியான விருத்தி என்பது நிறுவனத் திட்டமிடலின் முக்கிய இரு வகை கூறுகளான நுண்மட்ட திட்டமிடல் (micro planning) பருமட்ட திட்டமிடல் (macro planning) ஆகியவற்றை அமுலாக்கம் செய்வதனூடாகவே நிறுவன ரீதியான விருத்தியை ஏற்படுத்த முடிகின்றது. பருமட்ட மாற்றங்களின் ஈடுபாட்டினால் நிறுவனமானது முழுமையான விளைதிறன் மிக்க முன்னேற்றத்தை பெறுகின்றது. நுண்மட்ட திட்டமிடலானது தனிநபர் விருத்தி அல்லது குறிப்பிட்ட குழுக்களை மையப்படுத்திய சிறப்பு நோக்கங்களை கொண்டதாக விளங்குபவையாகும்.

ஊழியர்களின் ஈடுபாட்டினை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டமானது வேலை எதிர்பார்ப்புக்களில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்துதல், அறிக்கையிடல், ஒழுங்கு முறைமைக்குட்படுத்துதல், ஊக்கிவிப்பு வழங்குதல் ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியதாகும். இவை மனிதவள விருத்தி செயற்பாடுகளுக்கு உதாரணங்களாகும். இந் நோக்கங்கள் நிறைவுபெறும்பொழுது நிறுவன விளைதிறன் அதிகரிக்கின்றது. மனிதவள விருத்தி வாண்மையாளரின் ஈடுபாட்டினால் நிறுவன விருத்தி தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் ஆக்கபூர்வமான தலையீட்டு செயற்பாடுகளினால் அவர் மாற்று முகவராகின்றார். மாற்று முகவரின் தந்திரோபாய மிக்க நடவடிக்கைகள், வழங்கும் ஆலோசனைகள், அறிவுரைகள் காலத்திற்கு தேவையான நிறுவன ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சில சந்தர்ப்பங்களில் இத் தந்திரோபாய நுட்ப நடவடிக்கைகள் மாற்று முகவரின் நேரடி ஈடுபாட்டினூடாகவும் அமுல்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இ. தொழில் விருத்தி – (Carrier Development)

தொழில் விருத்தி என்பது தொடர்ச்சியான செயன் முறையினூடாகவும் தனிநபரின் முன்னேற்றத்தினூடாகவும், தொழிலின் பல்வேறு படிநிலைகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய தனித்துவமான பிரச்சினைகளும் வேலைகளுமாகும். இதில் தொழில் திட்டமிடல், தொழில் முகாமைத்துவம் என இரு செயற்பாடுகள் உள்ளன.

தொழில் திட்டமிடலானது ஊழியரை தொழிற் செயற்பாடுகளில் ஈடுபாட்டினை ஏற்படுத்தவும் ஆலோசகரினதும் ஏனையோரினதும் அனுசரணைகள் அவருடைய ஆற்றல்களுக்கும், திறன்களுக்கும் ஏற்றதான உயிர்த்துடிப்புள்ள தொழில் அமைப்பை உருவாக்கும் முறமையாகும். இதன் மறுபக்கத்தில் தொழில் முகாமைத்துவமானது பெறுபேற்று அடைவுகள் கருதிய வெற்றி பெறும் தந்திரோபாய நடவடிக்கைகளாகும். இதற்காக பல்வகை நிறைவேற்று வியூகங்களை உருவாக்கி பல்வகை படிமுறைகளினூடாக பல்வகை வலுக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும். இங்கு பல்வகை சக்திகளினதும் (Forces) வலுவினை அறிந்து கொள்வதற்காக சக்திகள் ஆய்வு (Force Field analisers) மேற் கொள்ளல், சிலிக்காவோ பகுப்பாய்வினை மேற்கொள்ளல் (Fish bone analisis) என்பன முக்கியத்துவம் பெறும் நடவடிக்கைகளாகும். அத்துடன் நிறைவேற்றம் கருதிய வலுப் பிரயோகங்களும் முக்கியமானதாகும். சட்டபூர்வமான வலு (Legal power) மரபுரிமை வலு (Legitimate power) நிபுணத்துவ வலு (Expert power) கவர்ச்சி வலு (Referent power) பணித்துறை வலு (beamro cracy) ஆகிய வலுக்களை சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தி கருமங்களை வென்றெடுக்கும் பெறுபேறு கருதிய முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியமாகும். பொதுவாக தொழில் முகாமைத்துவமானது பல்வகை படிமுறைகளில் பல்வகை தந்திரோபாயங்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும். இவ்விடத்தில் முகாமையாளன் தன்னை ஒரு வளர்ப்பு பெற்றோர் போல் (Loco Parents) கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் சாலச் சிறப்புடையதாகும்.

### 2. மனிதவள அபிவிருத்தி – வாண்மையாளரின் வகிபாகங்கள்

மனித வள அபிவிருத்தியாளரின் வகி பாகங்கள் சமூக, சுற்றாடல் மாற்றத்திற்கு ஏற்பவும் மற்றும் பொருளாதார, கலாச்சார கல்வி நிலைக்கும் ஏற்ப மாற்றமடையும் தன்மையினதாகும். (Gilley, Egg Land & Gilley 2002) இதனையே மனிதவள முகாமையின் இணைதகவு மாதிரியும் விளக்கிக் காட்டுகின்றது.




மனிதவள முகாமை இணைதகவு மாதிரி (The matching model of HRM Duvanna, Fombrum & Tichy -1992.)

மேற்காணும் காரணிகளின் அடிப்படையில் இன்றைய மனிதவள அபிவிருத்தி வாண்மையாளரின் வகிபாகங்களை பின்வருமாறு வகைப்படுத்தி கூறுகின்றனர்.

#### i. தந்திரோபாய ஆலோசகர்

மனிதவள அபிவிருத்தி வாண்மையாளர் நிறுவன மனிதவள அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் நம்பிக்கையுள்ள ஆலோசகராகவும் உதவுபவர்களாகவும் விளங்குபவர் களாவர். மேலும் மனிதவள விருத்திக்கான ஆளணி அமைப்புக்களின் வடிவமைப்பாள ராகவும் அதன் விருத்திக்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை உரிய நேரங்களில் நியாயபூர்வமாக ஏற்றுக் கொள்ளும் வகையில் தந்திரோபாய நுட்பங்களை பயன்படுத்தி எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் வழங்குவர். இவ் வகிபாகத் மேற்கொள்கையில் இவரிடம் காணப்படும் சிறப்புப் பண்புகள் இவரை ஏற்புடையவராக்கும் நிலைக்கு இட்டுச் செல்வனவாக அமைய வேண்டும்.

#### ii. நிலைமாற்று முகவர்

மனிதவள அபிவிருத்தி வான்மையாளர் நிறுவனத்தின் மாற்றங்களை காலத்திற்கு உகந்தவாறான மாற்றத்தை மேற்கொள்ளும் முகவர்களாகவும் கருமமாற்றுதல் மிக அவசியமான தொன்றாகும். மாற்று முகவர் வகிபாகம் மிகவும் கடினமானதாகும். பாடசாலை என்ற ஒழுங்கமைப்பின் அடித்தளமாக விளங்குபவை பாடசாலைக் கலாச்சாரம், விழுமியங்கள், நம்பிக்கைகள், நியமங்கள், தூர நோக்கு மற்றும் நடத்தை விதிகள் என்பனவாகும். இவை பனிப்பாறை போன்ற குறுகிய கடினத் தன்மை வாய்ந்த பனிப்பாறைகள் போன்றவை என தலைமைத்துவ முகாமைத்துவ நிபுணரான கலாநிதி கமெரன் நொப்ஸ் (Camaran Nobbs- 2011) கூறியுள்ளார்கள். நிறுவனத் தலைவரானவர் மிகவும் உறைந்த நிலையிலுள்ள இப்பண்புகளுடன் முட்டி மோதும் நிலையை உருவாக்காமல் தன்னை ஒரு ஆற்றுக் கொள்பவராக மாற்றி தனது கருத்துக்களை நியாயப்படுத்தி இயல்பாகவே உருக வைத்து தனது அபிவிருத்தி கருதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை நிறுவனத்தினுள் பாய்ச்ச வேண்டும், மடை திறந்த வெள்ளம் போல் மாற்றங்கள் நிறுவனத்தை செழிப்புற செய்ய வேண்டும்.

### iii. நிறுவன வடிவமைப்பு ஆலோசகர்

பாடசாலை என்ற ஒழுங்கமைப்பானது ஓர் 'அச்சுவார்புரு' (matrix organization) ஒழுங்கமைப்பாகும். என சாள்ஸ் ஹன்டி (Chales Handy 1986) அவர்கள் கூறியுள்ளார்கள். நிறுவன முகாமையாளர்கள் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பவர்களாகவும் (Facilitator) பணிகளை சிறப்புற மேற்கொள்ளும் ஆற்றல் மிகுந்தவையாக பணிக் குழுக்கள் விளங்குகின்றன. முகாமையாளர்கள் நேர்நிலையிலும் பணிக்குழுவினர் கிடக்கை நிலையிலும் ஓர் அச்சில் இணைந்து செயல்படும் நிலையே இவ் 'அச்சுவார்புரு' ஒழுங்கமைப்பானது விளக்குகின்றது. எனவே குழு உருவாக்கம், பணி விவரணங்கள் என்பன இவ்வகி பாகத்தில் முக்கியம் பெறுபனவையாகும். இவ்வகி பாகத்தில் இருக்கும் மனிதவளங்களை வினைத்திறனாக பயன்படுத்தும் ஆலோசகராகவும் கருமமாற்ற வேண்டும்.

### iv. அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பாளர்

மனிதவள அபிவிருத்தி வான்மையாளர் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பாளராக அல்லது சிறப்புத் தேர்ச்சியுடைய கல்வி நிகழ்ச்சித் திட்டளாளராகவும் பணியாற்றுபவராவர். ஊழியர்களினதும் மற்றும் ஏனைய ஆளணியினரதும் பயிற்சித் தேவைகளை இனங்காணுதல் இவ்வகிபாகத்தின் பிரதான செயற்பாடாகும். அறிதல், ஆட்சிப்புலம், உள ஆற்றல் ஆட்சிப்புலம், மனப்பாங்கு அல்லது பழக்க நடத்தைகள் ஆட்சிப்புலம் ஆகியவற்றின் பயிற்சித் தேவைகளை இனம் காணல் என்பது மிகவும் கடினமான கைங்கரியமாகும். இதற்கான கருவிகளை தயாரித்தலில் பல்வகை வினாநுட்பங்கள், அவதானிப்பு முறைகளைப் பயன்படுத்துதல் இன்றியமையாததாகும். எனவே நிகழ்ச்சித் திட்டங்களுக்கான முன் ஆயத்தங்களை மிகவும் அவதானத்துடனும் போதியளவு நேரத்தை செலவிட்டு தயார் செய்தல் என்பது பொறுமையுடனும், அர்பணிப்புடனும் மேற்கொள்ளும் செயலாகும். நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது அதற்கு தேவையான கற்றல் உபகரணங்கள் மற்றும் வளங்களை ஒழுங்குபடுத்துதலும், வழங்கலும் சிறப்பான தொழிற்பாடாக அமைவதும் அவசியமாகும்.

### v. வாழ்க்கைப் பணி முன்னேற்ற ஆலோசகர்

மனிதவள அபிவிருத்தி வான்மையாளர் இவ் வகிபாகத்தில் தொழில் விருத்தி ஆலோசகராக செயற்படுகிறார். தொழில் தேர்ச்சி, தொழில் செழுமையாக்கம் ஆகியவை இவ்வகிபாகத்தின் பிரதான அம்சங்களாகும். இவற்றை பூர்த்தி செய்யும் பட்சத்திலேயே ஊழியர்களிடையே தொழிற் திருப்தியை ஏற்படுத்த முடியும். நிறுவனத்தில் ஊழியர்களின் நிலைத்த தன்மைக்குத் தொழிற் திருப்தி மிக அவசியமாகும். இத் தொழிற் திருப்தி ஏற்படும் பட்சத்திலேயே தமது நிறுவனம் பற்றியும் தாம் மேற்கொள்ளும் தொழில் பற்றியும் மற்றவர்களிடம் பெருமையாக பேசுவர். நிறுவன ஊழியர்கள் தமது பணிசார் அறிவு, திறன்களை தாமே சுயமதிப்பீட்டுக்கு உட்படுத்தும் தொடர் நடவடிக்கையை மேற்கொள்வர். தொழிலாற்றல் மிக்கவராக ஊழியர்களை உருவாக்கியெடுப்பதே இவ்வகிபாகத்தின் குறிக்கோளாகும்.

### vi. பயிற்றுவிப்பாளர் அல்லது செயன்முறை ஆலோசகர்

இவ்வகிபாகமானது நிறுவனமானது தனது உள்ளக பயிற்சிகளை மேற்கொள்வதற்கு அத்தியாவசியமானதொன்றாகும். பாடசாலையைப் பொறுத்த வரையில் அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர், பாட இணைப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கு இவ்வகிபாகம் கூடப் பொருத்தமுடையதாகும். பயிற்றுவிப்பாளர் அல்லது செயன்முறை ஆலோசகர் எனும்பொழுது பயிற்சிக்கு ஊக்குவிப்பவர், தனிப்பாடங் கற்பிப்பவர், தேர்வுக்கு பயிற்றுவிப்பவர், போட்டிக்கு பயிற்சியளிப்பவர், மாதிரி வகுப்புக்களில் கற்பித்து காட்டுபவர் போன்ற உப வகிபாகங்களும் அடங்குகின்றன. (A Trainer should be a coach in and out) பயிற்றுவிப்பாளர் அல்லது செயன்முறை ஆலோசகர் என்பது கற்றல் மற்றும் அபிவிருத்தி ஊடாக ஒருவரது ஆற்றுகையை மேம்படுத்துவதாகும். இவ்வகிபாகத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பயிற்றுவிப்பாளருக்கு அத்துறை சார்ந்த அறிவு, செயற்பாட்டு முறைகள் (Process) பல்வகைப் பயிற்சிப் பாணிகள் (Styles) திறன்கள், நுட்பங்கள் ஆகியவற்றை தெரிந்திருத்தல் வேண்டும் இவை யாவும் சூழமைவுப் பொருத்தமுடையதாகவிருத்தல் அவசியமாகும். Parsole E, - The manager as coach and mentor (1999) ஒருவர் இன்னொருவருக்கு வரம்பிற்கு அப்பால் உதவும் செயற்பாடு (off line help) இவ் உதவும் நடவடிக்கையானது அறிவு மற்றும் தொழில் சார்ந்த சிந்தனைகளை போதியளவு 'ஊடுசெல்கை'யுடையதாக இருத்தல் வேண்டும். clutter buck, D megginison, D – mentoring Excutives and Directors (1999). எனவே மனித வளத்தினது உள்ளார்ந்த ஆற்றல்களை முழுமையாக தனியாளிடமும், குழுவினரிடமும் வெளிக்கொணரும் தன்மையினதாக விளங்க வேண்டும். இதனை மேற்கொள்வதற்கு துறைசார்ந்த நிபுணத்துவமும் திறன்குவியலும் பயிற்றுனருக்கு இருத்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**vii. ஆய்வாளர்**

மனிதவள அபிவிருத்தி வாணமையாளர் ஓர் நிறுவனத்தின் ஆய்வாளராக தொழிற்படுவதன் ஊடாகவே அபிவிருத்தி தேவைகளை இனம் காண முடியும். ஆய்வு என்பது ஓர் விடயம் அல்லது சம்பவத்தை ஒழுங்கு முறையில் விசாரணை செய்து அறிவுப் பரப்புடன் இணைத்துக் கொள்வதாகும். ஆய்வு என்பது மீள் தேடுதல் எனவும் பொருள்படும். இதிலிருந்து தெரிவது என்னவெனில் குறிப்பிட்ட விடயம் ஏற்கெனவே தெரிந்ததொன்றாகும் என்பதாகும். ஆனால் ஏதோ ஒரு தேவைக்காக அல்லது காரணம் கருதி மீண்டும் தற்காலப்படுத்தல் கருதிய மீள்கற்றல் நடவடிக்கையாகும். (cressal 2008, postle waite 2005) பொதுவாக ஆய்வாளர்கள் விதி விளக்க முறை, விதிவருமுறை என்பவற்றின் கூறுகளை இனம் காணக்கூடிய வழிமுறையை அறிந்தவர்களாக இருப்பர். அத்துடன் பின்வருவனவற்றிலும் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்குவர்.

- பிரச்சினைகளை இனம் காணுதலும் வரையறை செய்தலும்.
- கருதுகோள்களை உருவாக்குதல்- பிரச்சனைக்கான பொருத்தமான ஒரு தீர்வு
- விவேகமான அனுமானம் அல்லது முன் உணர்வு
- தரவுகளை திரட்டுதல், ஒழுங்கு செய்தல், பகுப்பாய்வு செய்தல்
- முடிவுகளை உருவாக்குதல்
- உண்மைத் தன்மையை விசாரித்தறிதல், நீக்குதல் அல்லது கருதுகோள்களை மெருகுபடுத்துதல்.

நடத்தை ஆய்வு (behavioral research) கல்வி செய்முறையாளர்களுக்கு முக்கியமானதென கெர்லிந்தர் (1973) தனது நடத்தை ஆய்வு நூலில் கூறியுள்ளார். ஏனெனில் கல்விச் செய்முறைகளை விளங்கிக் கொள்வதுடன் நிற்காமல் அதன் வினைத்திறன் விருத்திக்கும் வழிவகுக்கின்றது. வினைத்திறனை கண்டுபிடிப்பதுடன் மட்டுமன்றி அவற்றின் பெறுபேற்றையும் யதார்த்தமாக பங்குதாரர்கள் அனைவர்க்கும் பரவச் செய்வார்கள். அத்துடன் உயர்மட்ட முகாமையாளர்க்கும் தெரிவிக்கின்றனர்.

அதிபரின் 3 வகிபாகங்களை திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியாது. ஏனெனில் முறைசார் கலைத்திட்டம், இணை கலைத்திட்டம், பாடசாலை சமூக உறவு ஆகியவற்றைப் பொறுத்து அவரது வகிபாகங்கள் வேறுபடுகின்றன. ஆனால் மேற்கூறிய வகிபாகங்கள் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு உரமூட்டும் செயற்பாடுகளாகும். இவற்றை பூரணத்துவமான முறையில் அதிபர் நிறைவேற்ற வேண்டுமெனில் அவர் மனிதவள அபிவிருத்திக்குரிய அடிப்படை அம்சங்களை நன்கு உணர்ந்தவராகவும் அவற்றை மதிப்பவராகவும் விளங்குதல் மிக அவசியமாகும்.

# இலங்கை பத்திரிகைகள்

## ஓர் வரலாற்று அறிமுகம்

இலங்கையின் கடற்கரைப் பிரதேசத்தைப் பிரித்தானியர் 1796 ஆம் ஆண்டில் கைப்பற்றினர். 1802 ஆம் ஆண்டில் இலங்கையின் கரையோர பிரதேசம் பிரித்தானிய அரசரின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. அதே ஆண்டில் இலங்கையின் முதலாவது பத்திரிகையான இலங்கை அரசாங்க வர்த்தமானி ஆங்கில மொழியில் ஆரம்பிக்கப்பட்டது. அரசின் உத்தியோக பூர்வமான பத்திரிகையான அது இன்னும் பிரசுரிக்கப்படுகின்றது. ஆனால் இன்று அது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளிவருகிறது. இன்று அது அரசாங்க விளம்பரங்களையும் தகவல்களையும் மட்டும் பிரசுரிக்கின்றது. ஆரம்ப காலத்தில் இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், இரங்கலுரைகள் முதலியவைகளை அது தாங்கி வந்தது. அதனால் அது சாதாரண பத்திரிகையாகவும் தொழிற்பட்டது.

இலங்கையின் இரண்டாவது பத்திரிகை 1832 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பெயர் கொழும்பு ஜேர்னல். அது அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது. அரசாங்க அச்சகத்தின் மேலதிகாரியால் வெளியிடப்பட்டது. கவர்னர் சேர் ரொபேற் வில்மற் ஹேட்டன் அதற்கு ஆதரவு வழங்கினார். பல்வேறு புனைப்பெயர்களில் அதற்கு கட்டுரைகளையும் எழுதினார். இலங்கை அரசாங்க வர்த்தமானி அதிகார பூர்வமாக வெளியிடப்பட்ட போது கொழும்பு ஜேர்னல் அதிகாரத்திலுள்ளவர்களின் மேற்பார்வையில் பிரசுரிக்கப்பட்டது. ஆனால் பிரித்தானிய உள்நாட்டு அமைச்சரின் உத்தரவின் பேரில் அடுத்த ஆண்டில் அது மூடப்பட்டது. பத்திரிகைகள் தனியார் துறையினரால் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று பிரித்தானிய அரசு கருதியது.

இலங்கையில் பத்திரிகை ஒன்று தேவை என்பதை கொழும்பு ஜேர்னல் நிருபித்துக் காட்டியது. எனவே, அத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கொழும்பில் வசித்த பிரித்தானிய வர்த்தகர்களில் சிலர் இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது சுதந்திர பத்திரிகையான 'சிலோன் ஒவ்சேபர் அன்ட் கமேர்சல் அட்வேட்டைசர் என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். அப்பத்திரிகை 1834 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி வெளிவந்தது. ஒப்சேபர் என்ற பெயரில் இன்று வெளிவரும் பத்திரிகை இதுதான். ஆசியாவில் மிகப் பழைய ஆங்கிலப் பத்திரிகை அதுவே.

டாக்டர் கிறிஸ்தோபர் எலியட் ஆசிரியராக இருந்த காலத்தில் (1833–1859) ஒப்சேபர் சுதந்திரமான ஒரு போக்கைக் கடைப்பிடித்து அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தது. 1848 ஆம் ஆண்டு புரட்சியின் போது அரசாங்கம் நடந்து கொண்ட விதத்தைக் கண்டித்து பாராபட்சமற்ற விசாரணை நடத்தியதன் விளைவாக கவர்னர் டொரிங்டன் பிரபுவும் அவரின் உதவியாளர்களும் திருப்பி அழைக்கப்பட்டனர். டாக்டர் எலியட் இளைப்பாறியதும் ஏ.எம். பேர்குசன் ஆசிரியரானார். அவரின் கீழ் ஒப்சேபர் பத்திரிகையின் செல்வாக்கு மேலும் அதிகரித்தது.

ஒப்சேபர் பத்திரிகை பிரித்தானிய வர்த்தகர்களால் நடத்தப்பட்டமையினால் அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் பிரதிபலித்தது. ஆனால் இலங்கை மக்களின் நலன்களையும் அது பிரதிபலிக்கத் தவறவில்லை. அதற்கு இரண்டு உதாரணங்களைக் கொடுக்கலாம். முதலாவது, மேலே காட்டிய 1848 ஆம் ஆண்டு புரட்சி பற்றிய விசாரணைக் குழு நியமிக்கக் கோரியமை. இரண்டு கிறிஸ்தவ மதகுருமாரும் அரச நிதியிலிருந்து சம்பளம் வழங்கியதை நிறுத்தச் செய்தனர். அங்கினிக்க மேற்றிராணியாருக்கும் அவரின் கீழ் பணிபுரிந்த மதகுருமாருக்குமே அரசு சம்பளம் கொடுத்தது. அரச நிதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட மதப் பிரிவினருக்கு உதவியளிப்பது தவறு என்று ஒப்சேபர் வாதிட்டு வெற்றியும் பெற்றது. செய்தி சேகரிப்பில் ஒப்சேபர் ஒரு உலக சாதனையை ஏற்படுத்தியது. அந்தக் காலத்தில் அதிகமான கப்பல்கள் காலித் துறைமுகத்திற்கே வந்தன. அங்கிருந்து செய்திகளைப் பெறுவதற்கு பத்து மணித்தியாலங்கள் பிடித்தது. எனவே 1850 ஆம் ஆண்டில் புறா மூலம் செய்தி அனுப்பும் சேவை ஒன்றை ஒப்சேபர் ஆரம்பித்தது. அதன் மூலம் காலியிலிருந்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் செய்திகளைப் பெற்றுக் கொண்டது.

பேர்குசனுக்குப் பின்பு ஒப்சேபர் ஆட்டங்காண ஆரம்பித்தது. வேறு பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டமை அதற்கு முக்கிய காரணம் ஒப்சேபர் பத்திரிகை ஒருவர் மாறி ஒருவர் பலருக்கு விற்கப்பட்டது. இறுதியில் 1923 ஆம் ஆண்டில் டி. ஆர். விஜய விஜேவர்த்தனாவினால் வாங்கப்பட்டது. இன்று அதன் செல்வாக்குக் குறைந்து டெயிலி நியூசின் துணை பத்திரிகையாக இயங்குகிறது.

ஒப்சேபர் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளில் 1837 ஆம் ஆண்டில் சிலோன் குரொனிக்கின் என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கத்தை ஆதரித்த அப்பத்திரிகை ஒரு வருடம் மட்டுமே வெளிவந்தது. அதைத் தொடர்ந்து சிலோன் ஹெரால்ட் என்ற பத்திரிகை 1838 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அது 1846 ஆம் ஆண்டில் மூடப்பட்டு த டைம்ஸ் என்ற பத்திரிகை தொடங்கப்பட்டது. பிரித்தானிய வர்த்தகர்கள், தோட்டச் சொந்தக்காரர், உயர் அரச ஊழியர்கள் ஆகியோருடன் பணக்கார இலங்கையரும் டைம்ஸ் பத்திரிகைக்கு ஆதரவளித்தனர். அதனால், திறம்பட தயாரிக்கப்படாத போதிலும் த டைம்ஸ் பத்திரிகை அதன் வெளியீட்டாளர்களுக்கு பணம் சம்பாதித்துக் கொடுத்தது. ஜோன் கப்பர் (1858 – 1885) ஆசிரியராக இருந்த காலத்தில் த டைம்ஸ் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு டைம்ஸ் பத்திரிகை ஆட்சியாளரை எதிர்க்கும் போக்கைக் கடைப்பிடித்தது. அத்துடன் லங்காதீப என்ற சிங்களப் பத்திரிகையும் தொடங்கியது. அதே காலத்தில் பிரித்தானிய வர்த்தகர்கள் இலங்கை அரசியலில் அக்கறை இழந்து விட்டதனால், இலங்கையருக்கு அப்பத்திரிகையையும் அச்சகத்தையும் கட்டடத்தையும் விற்றனர். அதன் பின்பு அப்பத்திரிகையின் வீழ்ச்சி துரிதமடைந்து 1885 ஆம் ஆண்டில் மூடப்பட்டது.

எக்சாமினர் என்ற பத்திரிகையை கொழும்பில் உள்ள சில வர்த்தகர்கள் வர்த்தகம் பற்றிய செய்திகளைப் பிரசுரிக்கும் நோக்குடன் ஆரம்பித்தார். அதனால் கஸ்டம் ஏற்பட்டதால் சால்ஸ் அம்புரோஸ் லொரன்ஸ் தலைமையிலுள்ள சட்டவல்லுனர் குழு ஒன்றிற்கு விற்றனர். பறங்கி சமூகத்தைச் சேர்ந்த இவர்கள் இலங்கை மக்கள் தமக்காகத் தாமே பேசக்கூடிய நிலையை அடைந்து விட்டனர் என்ற சுலோகத்தை முன்வைத்து இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தங்கள் கோரி அப்பத்திரிகை போராடியது. பத்திரிகையை நடத்தியவர்களில் பலர் பெரிய பதவிகளை பெற்றதன் விளைவாக 1900 ஆண்டில் அப்பத்திரிகை மூடப்பட்டது. அப்பத்திரிகை மூடப்பட்டமைக்கு த இன்டிபென்டன்ட் என்ற பத்திரிகை செல்வாக்குப் பெற்றமையும் ஒரு காரணம். 1888 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இன்டிபென்டன்ட் இலங்கையரின் குரலாக ஒலிக்க ஆரம்பித்ததோடு ஐந்து சதத்திற்கு விற்கப்பட்டது. 1846 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த ஜோர்ஜ் வேஸ் என்பவரை ஆசிரியராகக் கொண்டிருந்தது.

1907 ஆம் ஆண்டில் த இன்டிபென்டன்ட் இற்கு எதிராக சிங்கள வர்த்தகர்களால் சிலோன் மோர்னிஸ் லீடர் என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள கோவாவைச் சேர்ந்த ஆர்மன்ட் டி சௌசாவை ஆசிரியராகக் கொண்டிருந்த அப்பத்திரிகை செல்வாக்குப் பெற ஆரம்பித்தது. டி. சொய்சா குடும்பத்தினர் அப்பத்திரிகையை நடத்தினர். 1913 ஆம் ஆண்டு சிலன்ஸ் என்ற பத்திரிகையை இலங்கை தேசிய வாதிகள் சிலர் தொடங்கினர். அரசியல் சீர்திருத்தங்களுக்கும் போராடுவதற்காகவே அது ஆரம்பிக்கப்பட்டது. சேர். பொன்னம்பலம் அருணாசலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெக்டல் ஜெயவர்த்தன, பிரான்சிஸ் டிசொய்சா ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள்.

1915 ஆம் ஆண்டு கிளர்ச்சி இலங்கையின் வரலாற்றில் முக்கிய ஒரு திருப்பம். அப்பொழுது, இலங்கையில் ஐந்து ஆங்கிலப் பத்திரிகைகள் இருந்தன. அவை த ஒப்சேபர், த டைம்ஸ், த இன்டிபென்டன்ட், மோர்னிங் லீடர், சிலனீஸ் என்பவையே அவை. இனங்களில் சிலனீஸ் பத்திரிகை மிகக் கஷ்ட நிலையில் இருந்தது. 1917ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அப்பத்திரிகையும் அதன் அச்சகமும் கடன் கொடுத்தவர்களால் ஏலத்தில் விடப்பட்டது. அதை டொன் ரிச்சர்ட் விஜேவர்த்தனா என்பவர் வாங்கினர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பாரிஸ்டராகப் பட்டம் பெற்று இலங்கை திரும்பிய விஜேயவர்த்தனா 1914 ஆம் ஆண்டில் தினமின என்ற சிங்களப் பத்திரிகையை வாங்கிப் பத்திரிகைத் துறையில் பிரவேசித்திருந்தார். சிலனிஸ் பத்திரிகையை அவர் வாங்கியதும் அவரும் நஷ்டப் படப் போகிறார் என்றே பலர் எண்ணினர்.

ஆனால் சிலனீஸ் பத்திரிகையை வாங்கிச் சில நாட்களுக்குள் சிலோன் டெயிலி நியூஸ் என்ற பத்திரிகையை அவர் ஆரம்பித்தார். அதன் முதல் இதழ் 1918 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி வெளிவந்தது. அந்த இதழை வாழ்த்தி சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஒரு கட்டுரை எழுதினார். ஐந்து சதத்திற்கு விற்கப்பட்ட அப்பத்திரிகையில் பிரதம ஆசிரியராகவும் பிரதம செய்தி ஆசிரியராகவும் மனேஜராகவும் விஜேவர்த்தன பணிபுரிந்தார். அப்பத்திரிகை சில முக்கிய செய்திகளைப் பிரத்தியேகமாகப் பிரசுரித்து மக்களின் மதிப்பைப் பெற்றது. பிரித்தானிய ஆட்சியாளருக்கு ஐரோப்பியச் சமூகத்தினர் இரகசியமாக அனுப்பிய மனுவையும் ஆட்சிப் பொறுப்பை இலங்கையருக்கு வழங்குவதை எதிர்த்துச் சிறுபான்மை இனங்களில் தலைவர்கள் கூட்டமாக அனுப்பிய மனுவையும் டொனமூர் கமிசன் சிபாரிசுகளையும் டெயிலி நியூஸ் பிரத்தியேகமாக வெளியிட்டு மக்களிடையே ஒரு பரபரப்பை உண்டுபண்ணியது.

இலங்கையின் பத்திரிகைத்துறைக்கு விஜேவர்த்தன பெரும் சாதனையைச் செய்தார். அவர் இலங்கை மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். மிகவும் சிறந்த ஆசிரியர்களை தமது பத்திரிகைகளுக்கு நியமித்தார். ஏச். ஏ. ஜே. ஹெலுக்கல்ல அத்தகையோரில் ஒருவர் டெயிலி நியூசின் ஆசிரியராக அவர் இருந்த காலத்தில் அப்பத்திரிகை மிகச் சிறந்து விளங்கியது. நவீன அச்சு இயந்திரங்களை விஜேவர்த்தன இலங்கைக்கு அறிமுகம் செய்தார். விஜேவர்த்தன 1950 ஆம் ஆண்டில் காலமானார். அதன்பின் அவரின் மருமகன்மாரும் கடைசி மகன் ரஞ்சித் விஜேவர்த்தனவும் டெயிலிநியூசை வெளியிட்ட லேக் ஹவுஸ் நிறுவனத்தை நிர்வகித்தனர். 1973 ஆம் ஆண்டு லேக் ஹவுஸ் நிறுவனத்தையும் அது வெளியிட்ட பத்திரிகைகளையும் அரசாங்கம் கையேற்றது. இன்று அது அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள் இயங்கி வருகின்றது.

புத்தக வெளியீட்டில் பிரபலம் பெற்ற எம். டீ. குணசேன அன்ட் கம்பெனி 1964 ஆம் ஆண்டில் த சன் என்ற பத்திரிகையை ஆரம்பித்தது. 1990 ஆம் ஆண்டில் அது மூடப்பட்டது. உப்பாலி விஜேவர்த்தன என்ற வர்த்தகர் 1981 ஆண்டில் த ஐலன்ட் என்ற பத்திரிகையை ஆரம்பித்தார் அது தொடர்ந்து வெளிவருகின்றது. இந்த இருநூறு ஆண்டு காலத்தில் பல வார இதழ்களும் மாத இதழ்களும் வெளிவந்தன. ஆனால் அவற்றில் எதுவும் நிலைத்து நிற்கவில்லை.

முதலாவது ஆங்கிலப் பத்திரிகை 1832 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் முதலாவது சிங்களப் பத்திரிகை 1860 ஆம் ஆண்டில்தான் வெளிவந்தது. அதன் பெயர் லங்காலோகய காலியிலிருந்து வெளியிடப்பட்ட அப்பத்திரிகை மாதமிருமுறை பிரசுரிக்கப்பட்டது. அதன் ஆசிரியரின் பெயர் டபிள்யூ பீ. ருணசிங்க. இப்பத்திரிகை 1919 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. இந்த 59 ஆண்டு காலத்தில் தோன்றி மறைந்த மற்றப் பத்திரிகைகளின் பெயர்கள் தினகர பிரகாச (1885- 1910), ஹெலதீன் ரூவான் (1888 – 1907), லங்கா பிரதீபய (1895 – 1913), பக்தி பிரபோதனாய (1895 – 1913), மெதடிஸ்ட் பிரலூர்த்தி (1900 – 1908) இக்காலப் பகுதியில் தான் கத்தோலிக்கப் பத்திரிகையான ஜனார்த்த பிரதீபாய (1866 இல் ஆரம்பம்) தொடங்கப் பெற்றது. அது இன்றும் தொடர்ந்து வார ஏடாக வெளிவருகின்றது. முதலாவது சிங்களத் தினசரிப் பத்திரிகை 1895 ஆம் ஆண்டில் சி. டோன் பஸ்தியான் ஜயவீர பண்டார என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. தினபத்த பிரவூர்த்தி என்ற பெயருடைய அந்நாளிதழ் 1908 ஆம் ஆண்டு வரை வெளிவந்தது.

இரண்டாவது சிங்களத் தினசரியான தினமின 1909 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இன்று வரை நிலைத்து நிற்கும் தினமின ஆரம்பிக்கப்பட்ட கதை சுவையானது. கேணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்ற அமெரிக்க மெய்ஞானி சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைக்கு வந்து பௌத்த மெய்ஞான சங்கத்தை ஆரம்பித்தார். கிறிஸ்தவர்களின் தாக்குதலிலிருந்து பௌத்த மதத்தைப் பாதுகாக்க சரசவி சந்தசேர என்ற வார இதழை ஆரம்பித்தார். அதன் ஆசிரியரான பண்டிதர் வெரகம பண்டார சிறந்த அறிவாளி. அவருக்குப் பின்பு எச். ஏஸ். பெரேரா ஆசிரியரானார். சிங்களப் பத்திரிகைத் துறைக்கு அரும் சேவையை அவர் ஆற்றினார். மக்களின் கருத்துக்களை அவர் உருவாக்கி அவர்களை வழிநடத்தினார். அத்துடன் வாரமிருமுறை செவ்வாயிலும் வெள்ளியிலும் வெளியிடும் சாதனையையும் புரிந்தார். ஆனால், 1909 ஆம் ஆண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் எச். ஏஸ். பெரோராவுக்கும் மனேஜர் ஜி. எச். டீ. சொய்சாவுக்கும் தகராறு ஏற்பட்டது. டி.பி. ஜெயதிலகா எழுதிய கட்டுரை சம்பந்தமாகவே அத்தகராறு தோன்றியது. ஜெயதிலகாவின் கட்டுரையை வெளியிடலாகாது என்று சொய்சா உத்தரவிட்டார். கட்டுரையை வெளியிடுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு ஆசிரியருடையது என்று வாதிட்டார் பெரேரா. சொய்சா விட்டுக் கொடுக்காததனால் தனது பதவியை விட்டு விலகினார் பெரேரா. ஜெயதிலகாவின் உதவியுடன் தினமின பத்திரிகையை ஆரம்பித்தார். சந்தரேசா என்றால் சந்திரன், சந்திரனை விட சூரியன் பலவான் எனவேதான் தின – ஆரியன் மின என்ற பெயரைப் புதிய பத்திரிகைக்கு பெரேரா கொடுத்தார்.

தினமின சிறப்பாக நடத்தப்பட்ட போதிலும் நிதிப் பிரச்சினை தலைதூக்கியது. எனவே, ஜெயதிலகா தனது நண்பர் டி. ஆர். விஜேவர்த்தனாவிடம் சென்று தினமின பத்திரிகையை வாங்கி நடத்துமாறு கேட்டனர். விஜேவர்த்தன அதற்கு இசைந்தார். விஜேவர்த்தனவின் கீழ் தினமினப் பத்திரிகை சிறப்புற வளர்ச்சியடைந்தது. கண்டி ஒப்பந்தத்தின் நூற்றாண்டு விழாவான 1915 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி தினமின ஒரு விசேச இதழை வெளியிட்டது. அதில் சிங்கக்கொடியினதும் கண்டி கடைசி மன்னன் சிறி விக்கிரம ராஜசிங்கவினதும் வர்ணப் படங்கள் பிரசரிக்கப்பட்டன.

தினமினப் பத்திரிகையின் பிரபல ஆசிரியர்களில் டி. டபிள்யூ' விக்கிரமாராச்சி ஒருவர். அவர் பின்பு சுவதேச மித்திரய என்ற வார இதழை ஆரம்பித்தார். ஆனால், விஜேவர்த்தன 1930 ஆம் ஆண்டில் சிலுமின என்ற வார இதழை ஆரம்பித்ததும் சுவதேச மித்திய தன் செல்வாக்கை இழந்தது. டெயிலி நியூஸ் பத்திரிகையின் மொழி பெயர்ப்பாகவே தினமின நீண்ட காலம் நடத்தப்பட்டது. ஆனால் 1956 ஆம் ஆண்டில் தினமினவுக்கென தனியே நிருபர்களும் எழுத்தாளர்களும் நியமிக்கப்பட்டு தனித்துவம் மிக்க பத்திரிகையாக்கப்பட்டது. மாட்டின் விக்கிரம சிங்காவும் தினமினவின் ஆசிரியராகச் சில காலம் பணிபுரிந்தார். நாற்பது ஆண்டுகளுக்கு தினமினவுக்கு எத்தகைய போட்டியும் இருக்கவில்லை. 1947 ஆம் ஆண்டில் டைம்ஸ் அப் சிலோன் குரூப் லங்காதீப என்ற பத்திரிகையை ஆரம்பித்தது. டி. பி. தனபாலாவின் கீழ் அப்பத்திரிகை நன்றாக இயங்கியது. ஆனால், நிதிக் கஷ்டம் விளைவாக 1985 ஆம் ஆண்டில் மூடப்பட்டது.

எம். டீ. குணசேன அன்ட் கம்பெனி சன் பத்திரிகையுடன் சேர்ந்து தவச பத்திரிகையை ஆரம்பித்தது. சன் மூடப்பட்ட போது அதுவும் மூடப்பட்டது. 1903 ஆம் ஆண்டில் பியதேச சிறிசேனவினால் ஆரம்பிக்கப்பட்டு 1946 ஆம் ஆண்டில் மூடப்பட்ட சிங்கள ஜாதிய அநாகரிக தர்மபாலாவால் நடத்தப்பட்ட சிங்கள பௌத்தய ஆகியவற்றையும் குறிப்பிடவேண்டும். நகைச்சுவை பத்திரிகையான காவட்ட கார்த்திகாய என்ற 1872 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையையும் இங்கு குறிப்பிட வேண்டும். அண்மைக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட அந்த பத்திரிகை செல்வாக்குப் பெற்று விளங்கியது. 1970 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அப்பத்திரிகை விடிவெள்ளி போல் தோன்றி பிரகாசித்துவிட்டு மறைந்து விட்டது. வேறு பல அரசியல் கட்சிகளும் பத்திரிகையை வெளியிட்டன. ஆனால், எந்தப் பத்திரிகையும் நிலைத்து நிற்கவில்லை.

ஆரம்பகால தமிழ்ப் பத்திரிகைகள் கிறிஸ்தவ நிறுவனங்களால் நிறுவப்பட்டவை. அதன் பின்பு ஆறுமுகநாவலர் (1822 – 79) ஆரம்பித்த இந்து மத விழிப்புணர்வின் காரணமாக இந்து மதப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன. முஸ்லிம்களும் தமது மதத்தையும் கலாசாரத்தையும் பரப்புவதற்காக தமிழ்ப் பத்திரிகைகளை ஆரம்பித்தனர்.

முதலாவது ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பத்திரிகையின் பெயர் உதய தாரகை இது (1841ல் வெளிவந்தது) 1864 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. ஆனால், பதிவு செய்வதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அது தோற்றுவிக்கப்பட்டது. 1845 ஆம் ஆண்டு முதல் 1855 ஆம் ஆண்டு வரையான பிரதிகள் பிரித்தானிய நுண்பொருள் சபையில் உள்ளது. அது யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க மிஷன் அச்சகத்தில் பிரசுரிக்கப்பட்டது. 1943 ஆம் ஆண்டு வரை அது வெளிவந்தது. முஸ்லிம் நேசன் 1882 ஆம் ஆண்டு முதல் 1944 ஆம் ஆண்டு வரை கண்டியிலிருந்து வெளியிடப்பட்டது. இந்துசாதனம் கொழும்பிலிருந்து 57 ஆண்டுகள் (1889 – 1946) வெளிவந்தது.

சன்மார்க்கப் போதினி (1885 – 1992) திராவிட கோகில (1900 – 1902) சத்திய வேத பாதுகாவலன் (1901) ஆகியவை முக்கிய தமிழ்ப் பத்திரிகைகளில் சில. வீரகேசரி 1930 ஆம் ஆண்டில் இந்திய வர்த்தகர்களால் தொடங்கப்பட்டது. டீ. ஆர். விஜேவர்த்தன 1932 ஆம் ஆண்டில் தினகரனை ஆரம்பித்தார். எம். டீ. குணசேனா குரூப் 1966 ஆம் ஆண்டில் தினத்தந்தியை ஆரம்பித்தது அது 1990 ஆம் ஆண்டில் மூடப்பட்டது.

ஈழநாடு, உதயன், முரசொலி ஆகிய மாகாணப் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்கப்பட்டன. இதுவரை வாசித்ததில் ஒரு விசித்திரமான உண்மையை நீங்கள் உணர்வீர்கள். பத்திரிகை வாசிப்போர் தொகை அதிகரித்துள்ள போதிலும் பத்திரிகைகளின் தொகை குறைந்துள்ளன. இது இலங்கையில் மட்டுமல்ல இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மற்றைய நாடுகளிலும் நடக்கிறது. இன்னுமொரு முக்கிய உண்மையையும் உணர்வீர்கள். பண வசதியும் இயந்திரசாதன வசதியும் பத்திரிகைகளை வெற்றியுறச் செய்யா. கற்பனை வளம் மிக்க ஆசிரியர்களிலும் உரிமையாளர்களிலும் வெற்றி தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Viluthu**
Center for Human Resource Development

# 'இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்'

## கண்காட்சி ஒழுங்குபடுத்தலும் விற்பனையும்

"விழுது" ஆற்றல் மேம்பாட்டு மையம் குடியியல் கல்விக்கான மாபெரும் கண்காட்சியுடன் இணைந்த கலை நிகழ்ச்சிகளை கொழும்பில் நடாத்துவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

போரால் பாதிப்புக்குள்ளான வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழுகின்ற விதவைகள் மற்றும் மாற்று வலுவுள்ள சிறுவர்களுக்கும் நிதிசேர்ப்பதற்கான செயற்திட்டமாக இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செப்டெம்பர் மாதம் 1ஆம் 2ஆம் திகதிகளில் (சனி ஞாயிறு நாட்களில்) கொழும்பு பம்பலபிட்டி இராமநாதன் இந்துக் கல்லூரியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"ஒவ்வொருவரும் எல்லோருக்குமாக" (Each for All) என்று தலைப்பிடப்பட்டுள்ள இக்கண்காட்சியில் சுமார் 15க்கும் மேற்பட்ட கண்காட்சி கூடங்களை அமைப்பதற்கான முயற்சியில் விழுது நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அந்த வகையில் "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்"(The works of writers in Sri Lanka)என்ற காட்சிக் கூடத்தை அமைக்கவுள்ளோம். இதில் இலங்கையிலுள்ள தமிழ் சிங்கள எழுத்தாளர்கள், கவிஞர்கள், படைப்பிலக்கிய வாதிகள், விமர்சன ஆய்வாளர்கள், சிறுகதையாசிரியர்கள் மற்றும் நாடக எழுத்தாளர்கள் ஆகியோர் தமது நூல்களை காட்சிக்கு வைப்பது மட்டுமல்லாது விற்பனையையும் இங்கு மேற்கொள்ள முடியும்.

ஓவியங்கள், புகைப்பட தொகுப்புக்கள், கேலிச்சித்திரங்கள், சிற்பங்கள் ஆகியனவும் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்படும். கிராமிய விவசாயக் கைத்தொழில் உற்பத்திகளையும் விற்பதற்கான காட்சிக் கூடங்கள் ஸ்தாபிக்கப்பட விருக்கின்றன. காட்சிக்கூடங்கள் தவிர, இரு நாட்களும் பல்வேறு கலை நிகழ்சிகளையும் நடாத்த ஒழுங்கு படுத்தன்னட்டு வரகின்றன. கவியரங்கம், தெருவெளி அரங்கு, மற்றும் கிராமிய கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்படும்.

பலதரப்பட்ட மக்களையும் பெரும் எண்ணிக்கைகளில் கவருவதற்கென தனியார் துறையினரின் உதவியுடன் களியாட்ட, மற்றும் பொழுது போக்கு அம்சங்களும் இணைக்கப்படும். ஊடக அனுசரணையுடன் இந்நிகழ்ச்சிக்கான தேவையான விளம்பரப்படுத்தலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

எனவே "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்" (The works of writers in Sri Lanka) என்ற காட்சிக் கூடத்திற்கு தங்களது மேலான பங்களிப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்படவேண்டிய நீங்கள் வெளியிட்ட நூல்கள் மற்றும் இறுவெட்டுக்களில் வெளிவந்த உங்களுடைய படைப்புக்களை 03,டொரிங்டன் அவனியூ, கொழும்பு 7இல் அமைந்துள்ள "விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தில்" இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படையுங்கள். ஐந்துக்கும் குறையாத நூல்களையோ, இறுவெட்டுக்களையோ வாரநாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை எமது அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும்.

நேரில் வருகைதர முடியாதவர்கள் தங்களைப்பற்றிய விபரங்களுடன் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள்" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். கண்காட்சி தொடர்பான மேலதிக விபரங்கள் பற்றி அறிய விரும்பினால் 011 3150836, என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது viluthuexhibit@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவோ தொடர்பு கொள்ள முடியும்.

'பிரஜைகளினதும் நிறுவனங்களினதும் சமூக வகை பொறுப்புக்கூறலை வளப்படுத்துவோம்'.

Program Coordinator, Viluthu, No 03, Torrington Avenue, Colombo 7, Sri Lanka
Tel : +94 (0) 11 2506272, +94 (0) 11 3150836 e-mail : viluthuexhibit@gmail.com
Web: www.viluthu.org , www.irukkiramonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமனாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,
கை.தொ.இல.: 077-1285749

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**கவிதா ஸ்ரோஸ்**
இல:05 பஸ் தரிப்பிடம், வவுனியா
தொ.பே.இல.: 024 - 2222012

**Noori Book Shop**
No. 143, Main Street, Kathankudi
Tel.: 065-2246883

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அபிஷா புத்தகக்கடை**
137, பிரதான வீதி, தலவாக்கலை
தொ.பே.இல.: 052-2258437

**நூர் மொஹமட் நியூஸ் ஏஜண்ட்**
132, பிரதான வீதி,
கிண்ணியா-03
தொ.பே.இல.: 026-2236266

**குமரன் புக் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**பிரியங்கா புத்தகக் கடை**
பிரதான வீதி,
பருத்தித்துறை
தொ.பே.இல.: 077-9303246

**கொலேஜ் நீட்ஸ் புத்தகக்கடை**
120, பிரதான வீதி,
அட்டாளைச்சேனை 14
கை.தொ.இல.: 077-3034469

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1/2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**Rajah's Book Centre**
No. 111, Main Street, Batticaloa
Tel.: 065-2222371

**United Book Centre**
No. 53, Trinco Road, Batticaloa
Tel.: 065-2222103

Printed by
Kumaran Press (Pvt) Ltd.
kumbhlk@gmail.com

ISSN 1800-1246

Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/96NEWS/2012

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org